
# கிராம வானொலி மன்றங்கள்




9-வது ஆண்டு விழா- கருத்தரங்கு (2-12-'68)

*With the best compliments from:*

**PSG INDUSTRIAL INSTITUTE**

**COIMBATORE-4 (South India)**

*Manufacturers of:*

PSG ELECTRIC MOTORS, PUMPS, DIESEL ENGINES, ELECTRIC SIRENS, BALING PRESSES, LATHES, HYDRAULIC AND ELECTRICAL ENGINEERING LABORATORY EQUIPMENT ETC.

“கிராம நலம்” இதழிற்கு
எங்கள் மனமார்ந்த
வாழ்த்துக்கள் உரித்தாகுக!

PSGR பிராண்டு

**சூபர் பாஸ்பேட் 16%** **18% WSPA**

மற்றும்

**கலப்பு உரங்கள்**

தயாரிப்பாளர்கள்:

கோயமுத்தூர் பயனீர் பெர்டிலைசர்ஸ் லிட்.,
முத்துக்கவுண்டன் புதூர் P.O.,
சூலூர் R.S., (Via) திருப்பூர்.

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 14 டிசம்பர் 1968 நெல் 3

GAZETTEER UNIT
MADRAS RECORD

## “சூளுரை மேற்கொள்வோம்”

“காந்தியடிகள் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு வழி காட்டியாக வாழ்ந்து காட்டி இருக்கிறார். புதிய இந்தியாவைக் காண, தன் உழைப்பு, ஆற்றல் அனைத்தையும் செலவிட்டார்.

வீழ்ந்துபட்ட இந்தியாவை அவர் தூக்கி நிறுத்தினார். தூங்கிய நாட்டை, தட்டி எழுப்பினார். அறிவில் குருடர்களாக இருந்த மக்களை, கண் திறக்க வைத்தார். அறிவில் முடவர்களாக இருந்தவர்களை, நிமிர வைத்தார்.

அடிமை என்ற உணர்ச்சியை மாற்றி, மனிதர்களாக ஆக்கியவர் காந்தியடிகள். ஈடு இணையற்ற தலைவராக, உலக வானில் அவர் சிறந்த இடம் பெற்று இருக்கிறார்.

அத்தகைய தலைவருக்கு நாம் இந்த ஓராண்டு முழுவதும் விழா கொண்டாடப் போகிறோம். அத்தகைய சிறப்பைப் பெற்று இருக்கிறார் அவர். தமிழகத்தில் இந்த ஓராண்டு முழுவதும், சிற்றூர், பேரூர்களில், நம் உழைப்பின் ஆற்றலைப் பயன்படுத்தி, காந்தியடிகளின் 100—வது ஆண்டு நினைவுச் சின்னமாக, பள்ளி இல்லா ஊர்களில் பள்ளி, மருத்துவ மனை இல்லாத ஊர்களில் மருத்துவ மனை, மகளிர் மன்றம் இல்லாத இடங்களில் மகளிர் மன்றம் முதலியவைகளை அமைக்க வேண்டும்.

சேரிகளை ஒழித்து, புதிய குடியிருப்புக்களை உண்டாக்க பாடுபட வேண்டும். அடுத்த ஆண்டு அக்டோபர் 2-ந் தேதி வருவதற்குள், அதை நினைவுபடுத்தும் வகையில், பணியாற்ற வேண்டும்.

காந்தியடிகள் கனவுகண்ட இந்தியாவை—சமயச் சார்பற்ற இந்தியாவை—அமைக்க, எல்லோரும் பாடுபட முன்வர வேண்டும். அதற்கான சூளுரையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.”

—மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன்.

**முதல் அட்டைப்படம்!** கிராம வானொலி மன்றக் கருத்தரங்கும், சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்குப் பரிசளிப்பு விழாவும், கோவை மாவட்டம் சூலூரில் 2—12—68-ல் நடைபெற்றன. அவை பற்றிய விளக்கக் கட்டுரையை, 19-ம் பக்கத்தில் காணலாம்.

மனித உரிமை நாள்'

# எழுச்சியும் உறுதியும் அனைவரும் பெற்றிட

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை

158403

## வானொலிப் பேச்சு

"இன்று, மக்கள் உரிமை பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உலகெங்கும் மக்கள் உரிமை நாளாக டிசம்பர் 10 நடாத்தப்பட்டு, மக்கள் உரிமை பற்றிய உரைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன-கடந்த 20 ஆண்டுகளாக.

1948-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ம் நாள் ஐக்கியநாடுகள் பேரவை, பாரிஸ் நகரில் கூடி, மக்கள் உரிமை பற்றிய 'சாசனத்தை' வெளியிட்டது.

### உரிமை உணர்வுக்கு வித்திட்ட சிந்தனையாளர்கள்

1762-ம் ஆண்டிலேயே தீவிரக் கருத்துக்களின் பெட்டகமாகவும், புரட்சியூட்டும் சிந்தனையாளராகவும் விளங்கிய ரூசோ - ஜீன் ஜாக்ஸ் ரூசோ - "மனிதன் சுதந்திரமாகவே பிறக்கிறான், ஆனால், எங்கும் அவன் அடிமைப்பட்டே உழல்கிறான்" என்று எழுச்சியுடன் கூறியது, அதே பாரிஸ் நகரிலே தான். எனவே, மனித உரிமைக்கான சாசனத்தை வெளியிட, பல்வேறு நாட்டுப் பேரறிவாளர் கூடியது பொருத்தமான இடந்தான். 58 நாட்டினர் கூடினர். சில நாடுகள் வாக்கெடுப்பிலே கலந்து கொள்ளவில்லை. வாக்கெடுப்பில் கலந்து கொண்ட நாடுகள் அனைத்தும், சாசனத்துக்கு ஒப்பமளித்தன. எதிர்ப்பு ஏதும் இன்றி, அந்தச் சாசனம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மனித குல வரலாற்றில், ரூசோ போன்ற சிந்தனையாளர் பலர், உரிமைகளுக்காக வாதாடி வந்தனர்.

பலர், உரிமைப் போர் நடத்தி தம்மைத் தாமே பலியிட்டுக் கொண்டனர்.

பல இடங்களில், உரிமைப் போர் நடாத்தப் பட்டபோது, பயங்கர விளைவுகள் வெடித்தன.

### இன்ப ஒளியை நாடி

ஆனால், 58 நாடுகள் ஒருமனதாக, மக்களின் உரிமைக்கு மதிப்பளித்து, அதற்கான ஒரு சாசனத்தை வெளியிடக் கூடிய வரலாற்று நிகழ்ச்சி, முதல் முறையாக நடைபெற்றது 1948-ல்.

மாண்புமிகு
முதலமைச்சர்
பேருரை'

"எனக்குத் தெரியும்! உனக்கு என்ன தெரியும்! நீ யார் எனக்குக் கூற! நீ கூறி நான் கேட்கவேண்டுமா? என் விருப்பம் போல் நான் நடப்பேன், தடுத்திட நீ யார்?"— என்ற தடிப்பான கேள்விகள், தனிமனிதர்களுக்கு மத்தியிலேயே மிக அதிகமாக எழுவதைக் காண்கிறோம். அந்த மனப் போக்குக்கும், 58 நாடுகள் கூடி, "மனித உரிமைகள் மதிக்கப்படத்தான் வேண்டும்; அதற்கு ஏற்றபடி எல்லா

### அறிவுக் கதிரை, இன்ப ஒளியை....

நாடுகளும் நடந்துகொண்டாக வேண்டும். இது நமக்கு நாமே பிறப்பித்துக் கொள்ளும் ஆணை" என்ற முறையில் முடிவெடுத்த மனப்பாங்குக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொண்ட மனித குலம், இன்ப ஒளியை, அறிவுக் கதிரை நாடிச் செல்லத் தொடங்கி விட்டது என்பது விளக்கமாகிறது.

### அநீதியை எதிர்த்துப் போர்க் குரல்

மனித குல வரலாற்றில், இது மிக முக்கியமான ஒரு கட்டமாகும்.

ஒரு நாடு பெண்களை அடிமைப்படுத்தும்; ஒரு நாட்டிலே அடிமைகளைச் சந்தைப் பொருளாக்குவர்; ஒரு நாட்டில் மத பேதம் காரணமாக, மக்களை மாக்களைவிட கேவலமாக எண்ணிக் கொடுமை செய்வர்; மொழி ஆதிக்கக்காரர், தமது ஆளுகையிலே இருந்திடும் பிற மொழியாளர்களை இரண்டாந்தரக் குடி மக்களாக்கி எக்காளமிடுவர் - எத்தனை எத்தனையோ காரணங்களைக்காட்டி, மனிதனை மனிதன் தாழ்வாக நடத்துவதும், அழுத்தி வைப்பதும், அலைக்கழிப்பதும் பலப்பல நூற்றாண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருந்தன; இது அக்ரமம் என்று துணிந்து கூறக்கூட, பலர் முன்வர அஞ்சினர். அக்ரமம் நடைபெற்ற இடத்திலேயே இந்நிலை என்றால், பிற நாடுகளில் உள்ளவர்கள் எப்படிக் கேட்பர்? எவர் எதிர்ப்பர்? "இது என் அரசு! இங்கு எது எப்படி நடைபெற வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் முழு அதிகாரம் எனக்கே உண்டு!" என்று ஆதிக்கக்காரன்

### மனித குலம் நாடிச் செல்லத் தொடங்கிவிட்டது..

கூறிடும்போது, "நாடு உன் ஆட்சியில் இருக்கலாம்; ஆனால் அக்ரமம் நடைபெறும்போது, ஏனென்று கேட்க உலகுக்கு அதிகாரம் இருக்கிறது; மனிதனை மனிதன், கொடுமைப்படுத்தும்போது, மனித குலத்தின் பேரால், மக்கள் உரிமையின் பேரால் ஏன் என்று எதிர்த்துக் கேட்டிட உலகுக்கு அதிகாரம் உண்டு" என்று எடுத்துக் கூற எவருக்கும் எண்ணம் கூட எழவில்லை.

[12-ம் பக்கம் பார்க்க]



1948 டிசம்பர் பத்து..

GAZETTEER UNIT
APR 1969
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

# புதியதோர் முழக்கம் எழுப்பப்பட்ட நாள்

மனிதகுல வரலாற்றில்
மதிப்புமிக்க நாள்....

**‘ ஆந்திர கேசரி ’க்கு அஞ்சலி :**

# வரலாறு படைத்த வீரப் பெருமகன்

**(மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன்)**

(1968–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ம் நாள், சென்னபுரி ஆந்திர மகாசபாவின் புதிய கட்டிடமான ‘ஆந்திர கேசரி பிரகாசம் பவன்’ திறப்பு விழாவில், மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய தலைமை உரை இது. இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.)

“தென்னகத்தின் புகழ்பெற்ற தவப் புதல்வர்களில் முக்கியமான ஒருவரின் நினைவைக் கௌரவிக்கும் முறையில் அமைந்துள்ள இவ்வரலாற்றுப் புகழ்பெற்ற விழாவில், உங்களுடன் சேர்ந்து பங்கு பெறும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக, மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆந்திரகேசரி தங்குடூரி பிரகாசம் அவர்கள், ஆந்திரத்தில் பிறந்து, இந்தியனாக வாழ்ந்து, இலட்சக்கணக்கான தமிழர்கள், ஆந்திரர்களின் இதயங்களிலே குடிகொண்டுள்ள பெரியார். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ‘பிரகாசம்’ என்ற பெயர் வீர உணர்வூட்டும் ஒரு காவியமாகவே அமைந்தது. வீரம் செறிந்த இயல்புகள் பல வாய்க்கப் பெற்ற அவரின் தனித்தன்மையானது, கடமை உணர்ச்சியையும், எழுச்சியையும் கொண்டதாகும்.

ஆந்திரகேசரி அவர்கள் அஞ்சாநெஞ்சம் படைத்த அடலேறு. அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையானது, மக்கள் பணி, தியாகத்தையே முழுக்க முழுக்க அடிப்படையாகக் கொண்ட ஒரு சகாப்தமாகும். அவர் நடத்திய போராட்டங்களில் பலவற்றையும், அவரது சாதனைகளையும் நேரில் கண்ணுற்ற சென்னை மாநகருக்கு, அவ்வீரத் திருமகனாரை கௌரவிக்க எல்லாவித உரிமைகளும் உண்டு. பிரகாசம் அவர்கள் பால் நாம் கொண்டுள்ள நிறைவான, அழிவில்லாத அன்பு, பாராட்டு, மரியாதை ஆகியவற்றை எடுத்தியம்பக் கூடிய முறையிலே, இப்புதிய கட்டிடத்திற்கு அவருடைய பெயரை இட்டு அழைப்பதுடன் மட்டும் நில்லாது, நம்முடைய மக்களின் இதயங்களிலே அவரது நினைவை என்றென்றும் வாழச் செய்யும் வகையில், சென்னையின் மைய இடத்தில் அவரது சிலையை எழுப்பியுள்ளோம்.

### பிறப்பிலேயே மக்களின் தலைவர்

பிரகாசம் அவர்கள் பிறப்பிலேயே ஒரு போராட்ட வீரர். அஞ்சா நெஞ்சம் படைத்த முழுமையான வீரர் அவர். அவரது சுதந்திர உணர்ச்சியானது, பரந்த விசாலமான உள்ளத்தாலும், இதயக் கனிவாலும் பக்குவமடைந்த தன்மையுடையது. அவரது எழுச்சி மிக்க தலைமையின்கீழ், ஆயிரமாயிரம் தமிழர்களும் ஆந்திரர்களும் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுக்கொண்டு, சுதந்திரப் போராட்டத்தில் உளமார தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர். இடைவிடாது அவர் நடத்திய சுதந்திரப் போராட்டம் உச்ச நிலையை அடைந்து, அது நிறைவு பெற்றதைக்கண்டு மகிழ்ந்து நின்ற பெரும் பேறு பிரகாசத்திற்கு கிட்டியது, மகிழ்ச்சி தருவதாகும். நாடு விடுதலையடைந்தபின், தமிழகத்தில் பதவியேற்ற முதல் முதலமைச்சர் அவரே. ஆந்திர மக்களுக்கென ஒரு புதிய மாநிலம் உருவாக்கப்பட்டபோதும், அவரே அதன் முதல் முதலமைச்சரும் ஆனார். சுதந்திரப் போராட்ட வீரராக அவர் திகழ்ந்த அதே நேரத்தில், புகழ்பெற்ற நிர்வாகியாகவும் தன்னை வெளிப்படுத்திக் காட்டினார். தலைமையேற்று நடத்திச் செல்லும் தகுதி, சுயநலமில்லா தியாக உணர்ச்சி, நலிவுற்றோர் பால் காட்டிய இரக்கம், கீழோர், எளியோருடன் தன்னை ஒன்றுபடுத்திக்கொள்வதில் அவருடைய ஆவல்—இவையனைத்தும் தலைசிறந்த அரசியல் நிபுணராக, நிர்வாகியாக, சுதந்திரப் போராட்ட வீரராக, பிறப்பிலேயே மக்களின் தலைவராக, அவரை ஆக்கின.

தமிழகத்தின் முதலமைச்சராக அவர் பணியாற்றுகையில், மதுவிலக்கு, கிராம வளர்ச்சி, கதர் போன்ற காந்தியக் கொள்கைகளை முழு மனதுடனும் உண்மையாகவும் நிறைவேற்றியது, அவரது குறிப்பிடத்தக்க சேவைகளில் ஒன்றாகும்.

## அஞ்சா நெஞ்சம் படைத்த அடலேறு



# சமுதாய நலத் திட்டத்தின் முன்னோடி

அமைதியான முறையிலே சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு வழியென தற்போது கூறப்படும் சமுதாய நலத் திட்டத்தின் முன்னோடியான பிர்கா வளர்ச்சித் திட்டத்தை (Firka Development Programme) தமிழகத்தில் முதலமைச்சராக 23 ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றிய பிரகாசம் அவர்கள்தான் கொணர்ந்தார்கள் என்பதை, நாட்டிலுள்ள பெரும்பாலோர் அனேகமாக அறிந்திருக்கமாட்டார்கள்.

### அண்ணாவும்—பிரகாசமும்

இடையாட்களின் நாசக்கரங்களை தகர்த்தெறிந்து, மக்கள் முன்னேறுவதற்கென உற்பத்தி செய்வோர்—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பிரகாசம் அவர்களின் சீரிய தலைமையிலேதான் அமைக்கப் பெற்றன. பிரகாசம் அவர்கள் திறமான முறையில் கடைக்காலிட்டுச் சென்ற காந்திய கொள்கைகளான மதுவிலக்கு, கதர் மற்றும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை, புது நம்பிக்கையுடனும், வலுவுடனும், நம் பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் இன்று செயல்படுத்தி வருகிறோம். நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்கள், மதுவிலக்கை அதன் உண்மையான நோக்கில் செயல்படுத்தாதிருக்கும் நிலையில், மதுவிலக்குக் கொள்கையில் தீவிர நம்பிக்கை கொண்டு, அதை உறுதியாகப் பின்பற்றி வருதலைக் கண்ணுற்ற, நாடு முழுவதிலுள்ள காந்தியத் தலைவர்கள், நம்முடைய முதலமைச்சர் அண்ணா அவர்களின் அறிவு நுட்பத்திற்கு, அரசியல் மேதைமைக்கு புகழ்மாலை சூட்டியுள்ளனர்.

பிரகாசம் அவர்கள் சிறப்புமிக்க காலத்தில் வாழ்ந்ததுடன், வரலாற்றைப் படைப்பதிலும், நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதிலும் பெரும் பங்கேற்றிருந்தார். பிரகாசம் போன்ற வலிமைமிக்க வீரர்கள் நமக்குப் பெற்றுத்தந்த நன்மைகளை, ஒன்று திரட்டும் மகத்தான பிரச்னையை இன்று எதிர்நோக்கியுள்ள நமக்கு, பிரகாசம் போன்ற ஆற்றல் வாய்ந்த தலைவர்களின் தேவை, நம்மிடையே அதிகம் எழுந்துள்ளது.

### அவருக்குச் சூட்டும் புகழ்மாலை

பிரகாசம் அவர்களுக்கு உண்மையான புகழ்மாலை சூட்டுவதென்பது, அவருடைய கனவுகள், இலட்சியம், அவருடைய பேரார்வம், விழைவுகள் போன்றவற்றை ஊட்டி வளர்த்து நிறைவேற்றுவதேயன்றி வேறில்லை. பூசல்கள், சொந்த விருப்பு வெறுப்புகள், சாதி, மதம், வகுப்பு, குறுகிய தவறான எண்ணங்கள் போன்றவற்றைக் கடந்து, அறிவு விளக்கப் பாதையிலே சென்று, நாளெல்லாம் பணியாற்றிய அவரைப் போன்ற சிறந்த தொண்டர்கள், இன்று நாட்டிற்கு அதிகம் தேவைப்படுகின்றனர். இன்று அவருடைய பெயரை இட்டு அழைக்கப்படவிருக்கின்ற இக் கட்டிடமானது, அவருடைய புகழிற்கு ஒரு பொருத்தமான நினைவுச் சின்னமாக அமைந்து காட்சி தருவதோடு மட்டுமின்றி, நம்மை எதிர்நோக்கியுள்ள ஒளிமயமான எதிர்காலத்தை என்றென்றும் நமக்கு நினைவூட்டுவதாகவும், இந் நாட்டு மக்களோடு கலந்து உறவாடி, பாமர மக்களின் முன்னேற்றம், அவர்களின் வளமான வாழ்விற்குப் பாடுபட நம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் முறையில நமக்கு எடுத்துக்காட்டாகவும் அமையும்.

### ஒருமைப்பாட்டின் நிலையான சின்னம்

இந்தியக் குடியரசின் மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்கள் வருகை தந்து இவ் விழாவில் பங்கேற்றுள்ளார். மேன்மைதங்கிய பதவியை வகித்து வருவதோடன்றி, தேசியப் போராட்டங்களிலும்—குறிப்பாக தொழிலாளர் இயக்கத்திற்கு—அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள் அவரை இக் கட்டிடத்திற்கு பெயரிடும் பணிக்கு சாலப் பொருத்தமுடையவராக்குகிறது. தங்களுக்கும் பல்லாயிரக் கணக்கான ஆந்திர சகோதரர்களுக்கும், எங்களுடைய வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும், நாங்கள் தங்கள் பால் கொண்டுள்ள அன்பு, மரியாதைகளை இவ்விழாவின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். பிரகாசம் அவர்களின் பெயரால் இன்று அழைக்கப் படவிருக்கும் இக்கட்டிடமானது, தமிழர்களும், ஆந்திரர்களும் ஒருசேர நின்று, தோழமை உணர்ச்சியுடன் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டுமென்பதற்கு ஒரு நிலையானச் சின்னமாக விளங்குமென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பிரகாசம் அவர்கள் மனிதர்களிலே மிகப் பெரிய மனிதர். தலைவர்களிலே அவர் ஒரு முன்னோடி; மக்கள் இதயங்கவர்ந்த பண்பாளர். அவர் சொன்னவற்றை, செயல்படுத்தியவற்றைப் பின்பற்றி, நம் வாழ்க்கையை அவ்வாறு மாற்றியமைத்துக்கொள்ள முற்படுவதே, நாம் அவருக்குச் செலுத்தும் நிலையான வணக்கமாகும்.

## இதயங்கவர்ந்த பண்பாளர்

முயற்சி திருவினையாக்கும் :


# முதல் பரிசு பெற்ற கிராம சேவிகை

செங்கை மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் கிராம சேவிகா செல்வி ஆர் வசந்த குமாரி, 1966-67-ஆம் ஆண்டின் தமிழக சிறந்த கிராம சேவிகாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசு பெற்றுள்ளார்.

இவர் 1957 முதல் இப் பணியில் ஈடுபட்டுள்ளார். திருவள்ளூர் வட்டாரத்தில், மகளிர் முன்னேற்றம் சிறந்து விளங்கச் செய்த பெருமை, கிராம சேவிகா செல்வி வசந்த குமாரியைச் சேர்ந்ததாகும். இவர் தமது பகுதியில் உள்ள ஊராட்சிகள் அனைத்திலும் மகளிர் மன்றங்கள் அமைத்து, 425 உறுப்பினர்கள் சேர்த்துள்ளார்.

மகளிர் மன்றங்களின் மூலம் 400-க்கும் மேற்பட்ட வீட்டுத் தோட்டங்கள் அமைத்து, அவற்றின் வாயிலாக கிடைத்த காய்கறிகளை பள்ளி மதிய உணவிற்குப் பயன்படுத்தி, தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கும் தனது சேவையைப் பயன்படுத்தியுள்ளார். ஐந்து கோழிப் பண்ணைகள் அமைத்துக் கொடுத்து, அதை மகளிர் மன்ற உறுப்பினர்களே நடத்தும் திறனை வளர்த்துள்ளார்.

புகையில்லா அடுப்புகள் 62, வைக்கோல் பெட்டிகள் 626 (Hey Boxes), காய்கறிப் பதன சாதனங்கள் 679 (Vegetable coolers) போன்ற சிக்கனமான சாதனங்களை, மகளிர்மன்ற உறுப்பினர்களை உபயோகிக்கச் செய்துள்ளார்.



## கிராம சேவிகை

இவ் வட்டாரத்தில் 11 மகளிர் மன்றங்களுக்கு, தையல் இயந்திரங்களை வழங்கி 220 உறுப்பினர்களுக்கு தையல் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

முழுவதும் மகளிர் மன்ற உறுப்பினர்களே முன்னிருந்து நடத்தும் பனை ஓலைச் சங்கம், கைக்குத்தல் அரிசி தயாரிப்போர் சங்கம், மற்றும் பால் வழங்கும் சங்கம் முதலியவைகளை கூட்டுறவு முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது....

....வீட்டுத் தோட்டங்கள், தேனீ வளர்ப்பு, தையல், பூ வேலைகள், பின்னல் வேலைகள், இலை தைத்தல், பனை ஓலையால் பொருட்கள் செய்தல், பாய் முடைதல், கோழிப் பண்ணை நடத்துதல், பால் விற்பனை, கைக்குத்தல் அரிசி தயாரித்தல் போன்ற வேலைகளை மகளிர் மன்ற உறுப்பினர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் நடத்தும்படி செய்து, அவர்களின் உபரி வருவாய்க்கு ஆதாரம் தேடித் தந்துள்ளார், செல்வி வசந்த குமாரி....

சிறு சேமிப்புத் திட்டத்தில் தாய்மார்களின் பொறுப்பினை வலியுறுத்தி, மகளிரிடையே ரூ. 2,700-க்கு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டிருக்கிறது. எல்லா மகளிர் மன்றங்களிலும் சேமிப்பின் ஆதாரமாக சீட்டு முறைகள் மேற்கொண்டு, அதன் மூலம் 83 அஞ்சலக சேமிப்பு கணக்குகள் தொடங்கிக் கொடுத்துள்ளார்.

....தனது முயற்சியால், மகளிர் கல்வி வளர்ச்சிக்காக ஒரு முதியோர் பள்ளியும், ஒரு மகளிர் மன்ற அமைப்பாளரால் குழந்தைகள் காப்பகமும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

..இரண்டு மகளிர் வானொலி மன்றங்கள் அமைத்து, இரண்டு மகளிர் மன்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன....

....மகளிர் முன்னேற்றத்திற்

## வசந்த குமாரி

காக பாராட்டுதலுக்குரிய பணியாற்றி வரும் செல்வி வசந்த குமாரி, இத் துறையில் மற்றவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி.

மாநிலப் பரிசு பெற்ற செல்வி வசந்த குமாரியின் பணி, மற்ற கிராம சேவிகைகளுக்கெல்லாம் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நிச்சயம் அளிக்கும் என்பதில் ஐயப்பாடு உண்டோ?

# பசியிலிருந்து விடுதலை

திரு கா. வேழவேந்தன் எம். எல். ஏ.

அற்புதங்கள் பல படைத்த 'படைப்பே'! நீதான்
அரும்பிறவி மனிதனையும் படைத்திட் டாயாம்!
பொற்சோலை, எழிற்காட்சி படைத்தாய்! அன்னோன்
போய்க்கண்டு மகிழ்வதற்கு 'விழி' படைத்தாய்!
நற்குயிலை அருவியினைப் படைத்தாய்! நாங்கள்
நாதத்தைக் கேட்பதற்குச் 'செவி' படைத்தாய்!
பற்பலவாய் மணம்விரிக்கும் மலர்படைத்தாய்!
பரிவோடு நுகர்வதற்கு 'மூக்கை' வைத்தாய்!

இவ்வளவும் படைத்திட்ட படைப்பே! நீயேன்
இதுபோதும் எனநிறுத்திக் கொள்ளவில்லை?
எவ்வளவோ போட்டாலும் எரிந்து விட்டே
எங்கேஎங்கே என்றே மூன்று வேளை
இவ்வுலகில் எமைவாட்டும் குடலை இங்கே
ஏன்தாயே உடலுக்குள் ஒளித்து வைத்தாய்?
அவ்வளவு சச்சரவும் குழப்பமும் ஏன்!
அடிக்கணக்கில் படைத்திட்ட குடலால் தானே!

அப்பப்பா! உன்படைப்பின் கொடூரம் என்னே!
அப்பசியின் விதிச்சட்டம் வெட்கக் கேடு!
அப்புழுவோசிறு கெண்டை உணவே! ஆனால்
அக்கெண்டை தவளைக்கோ உணவே! அந்த
தப்பாத தவளையதோ வாய்தி றந்து
தாவிவ நம் பாம்புக்கே உணவு! சொன்னால்
ஒப்புகின்ற சீனருக்கோ பாம்பே இங்கே
உணவாகி விடுகிறது! விந்தைச்சட்டம்!

கண்ணுக்குப் பசியென்றால் காட்சி உண்டு!
காதலுக்குப் பசியென்றால் துணையோ உண்டு!
மண்ணுக்குப் பசியென்றால் மழையும் உண்டு!
மலர் அல்லிப் பசிதீர்க்க நிலவோ உண்டு!
எண்ணறிவுப் பசிதீர்க்க ஏடும் உண்டு!
இசை உண்டு செவிப்பசியைப்போக்க! ஆனால்

"உண்ணுகின்ற உணவெங்கே?" எனமூ வேளை
உறுமுகின்ற குடற்பசிதான் பெரிய கேள்வி!

கண்டெடுத்தாய் ஆரஞ்சுக் கனிக் கோளத்தை!
கனல்,காற்றை, நிலம்,நீரை அதில்படைத்தாய்!
உண்டான ஓர்உலகை கடலில் நீயும்
உடைத்திட்ட தேனம்மா? ஆறும் இங்கே
கண்டங்கள் படைத்தாயே! மக்கள் தம்மை
கணக்கெடுத்துச் சரியாகப் படைத்திட்டாயா?
சண்டாளர் சுயநலத்தார் வேலி போட்டே
தர்பாரை நடத்துகிறார்! இதுவா நீதி?

ஒருபுறத்தில் மனிதரில்லா வெறுமைப் பசி!
ஒருபுறத்தில் புற்றீசல் மனிதர் கூட்டம்!
ஒருநாட்டில பெருவிளைச்சல் ஆவ தாலே
ஓண்கடலில் எரிகின்ற காட்சி! இங்கே
ஒருநாட்டில் எச்சிலைக்குச் சொறிநாயோடு
ஒயாத போராட்டம் நடக்கும் காட்சி!
இருக்கிறதா இதயமென்ற ஒன்று உனக்கு?
இருந்திருந்தால் உருகாமல் இருப்பாயா நீ?

"தனியொருவன் உணவின்றிச் சாவானானால்
ஜெகத்தினையே அழி" என்றான் பூவைக்காரன்!
தனியொருவன் உணவின்றிச் சாவதற்குத்
தாழ்போடும் தன்னலத்தை அழிப்போம் என்றே
மனிதகுலம் தனிச்சபதம் பூண வேண்டும்!
மடைபோட்டுத் தடுப்பவனை ஒடுக்க வேண்டும்!
இனிப் புதிய சட்டமொன்றை இயற்ற வேண்டும்!
இல்லாதான் எனும் பெயரை அழிக்க வேண்டும்!

ஒப்பரிய தத்துவத்தால் உருவாய் ஆன
உலகமன்றம் இனைவிட்டுத் தழைப்ப தால்தான்
அப்புறத்தின் அமெரிக்கப் பசுவின் பாலை
அயர்வற்ற நம் நாட்டுச் சிறுவர் இங்கே
இப்போதும் குடிக்கின்றார்! இந்தப் பான்மை
எங்கெங்கும் பெருகிவிட வேண்டும்! ஈயும்

அப் பண்பு பெற்றதொரு நாட்டை மட்டும்
அனைத்துலகும் போற்றிங்கே மதிக்க வேண்டும்!

நெல்லூரைக் கரும்பூரைப் படைத்த தாயே!
நெருஞ்சியூர், கள்ளியூர், ஏன்ப டைத்தாய்?
கல்லூரின் தேரைக்கும் உண விட்டாயே!
கதைமுடிக்கும் பாப்பூரை ஏன்படைத்தாய்?
கொல்லூரை உண்டாக்கி அதன்க ரத்தில்
வாதையுறும் புருவினையும் ஏன்ப டைத்தாய்?
சொல்லூரை ஆளுகின்ற நான்கேட் கின்றேன்
துளியேனும் உன்படைப்பில் நீதி யுண்டா?

படைப்பே! ஓ, படைப்பே! இங்கே வாவா!
ஓயாமல் மனிதர்களைப் பெருக்கா தே நீ!
நீபடைத்த பாலையெல்லாம் நன்செய் ஆக்கு!
நீர் கடலைப் பாலாக்கு! வானம் நின்று
பூ படைக்கும் மேகத்தை எவ லாக்கு!
புற்ற ஊைய மலையிடித்து சமமாய் ஆக்கு!
பாபடைத்த நாங்கள் உனைப் பாட வேண்டுமென்
படைப்பே! உன் படைப்பில்சீர் திருத்தம் வேண்டும்!

படிப்படியாய் பூமண்ணைப் பதப்படுத்தி
பயிரிட நீ சொன்னபடி பாடுபட்டோம்!
படிக்கட்டைப் போலிங்கே குழந்தை தந்தே
பஞ்சத்தை நிலைக்க வைத்தாய்! தமிழ கத்தில்
பகுப்படியாய் இருபோகம், முப்போ கத்தால்
பலன்பெருக்கும் சாகுபடி செய்தோம். இன்று
படிப்படியாய்ப் படியளக்கும் திட்டத்தாலே
பசிப்பேயை ஓட்டுதற்குப் படித்தோம் பாடம்!


[வானொலியில் 'மனித உரிமைகள்' என்ற தலைப்பில் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் 'பசியிலிருந்து விடுதலை' என்ற தலைப்பில் கவிஞர் திரு வேழவேந்தன் அவர்கள் அரங்கேற்றிய கவிதை)

# நீர் உயர
# நெல் உயரும்


எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எ்குங் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

M S S I C

PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



M S S I C

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம். எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
**தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்**
35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

# சுகாதார நல்வாழ்வும் துப்புரவுப் பணிகளும்...

டாக்டர் செல்வி ஏ. பி. மரைக்கார், எம்.டி., டி.ஜி.ஒ.
சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடுத் துறை இயக்குநர்.

**"சுத்தம் சோறுபோடும்" என்பது தமிழ் முதுரை. மனிதனின் அடிப்படைத் தேவைகள்: உணவு, உடை, உறையுள். அத்துடன், மனிதனுக்கு அவசியம் வேண்டியது, சுகாதார நல்வாழ்வு. அச்சிரிய நல்வாழ்வினைப் பெற, தமிழகத்தில் அரசுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கப் பணிகள், நோயற்ற, கவலையற்ற சுகவாழ்வு, மனித சமுதாயம் வாழ அரசு ஆற்றிடும் பணிகள், இத்துறையில் மக்களின் பொறுப்புகள் எவை என்பனவற்றை இரத்தினச் சுருக்கமாக விளக்குகிறது, இக்கட்டுரை.**

'சுகாதாரம்' என்பதற்கு, பன்னெடுங்காலமாகப் பலவித விளக்கங்கள் அளிக்கப்பட்டு வந்தன.

ஆரம்பக் காலத்தில், "சுகாதாரம்" என்பது, தனி மனிதனின் உடல் நலனைப் பாதுகாக்கும் பணியாக மட்டுமே கருதப்பட்டது. பின்னர் காலப் போக்கில், தனி மனிதன் வாழும் சூழ்நிலை—சுற்றுப்புற துப்புரவும் "சுகாதார"மாகக் கொள்ளப்பட்டது.

**"சுகாதாரம்" என்றால் என்ன?**

கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேற்கொள்ளப்பட்ட நுண்ணுயிரியல் ஆராய்ச்சிகளின் விளைவாகவும், நோய்த் தடுப்பு முறைகள் கண்டு பிடிக்கப்பட்டதன் பயனாகவும், 'சுகாதாரம்' என்ற சொற்றொடரின் பொருள், மேலும் விரிவடைந்தது; தனி மனிதனின் நலனுக்கு, சமுதாய அடிப்படையில் சிந்தித்துச் செயல்படும் நிலை வளர்ந்தது. இதன் விளைவாக 'பொதுச்சுகாதாரம்' என்பது, 1. மருத்துவப் பணிகள், 2. பிறப்பு-இறப்புப் புள்ளி விவரத் தொகுப்பு, 3. தாய்—சேய் நலம், 4. குடும்ப நலம், 5. பள்ளி நலம், 6. தொற்றுநோய்த் தடுப்பு, 7. சுற்றுப்புறத் துப்புரவு, 8. நலக்கல்வி (சுகாதாரக் கல்வி) விளக்கம் முதலான பணிகளை நிறைவேற்றி, சமுதாயச் சுகவாழ்வு, நீண்ட ஆயுள் முதலியவற்றுக்கு வழி வகுத்தல்' என்று நலப்பணிகளின் பல்வேறு தன்மைகளையும் உள்ளடக்கிய விரிந்த பொருள் வழங்கலாயிற்று.

உலக நல நிறுவனம் (World Health Organisation) 'சுகாதாரம்' என்பதற்கு மற்றொரு விளக்கம் வெளியிட்டுள்ளது. அதாவது:

"சுகாதாரம் என்பது நோயற்ற தன்மை; மெலிவற்ற தன்மை மட்டுமல்ல, உடல், மன, சமூக நல்வாழ்வின் நிறைவே சுகாதாரமாகும்".

### சுகாதாரத் துறையின் பணிகள்

உடல், மன, சமூக நல்வாழ்வுக்கான எல்லாப் பணிகளும், சுகாதாரப் பணிகள் தாம் என்ற போதிலும், அவற்றை, நலம் பெருக்கும் ஆக்கப் பணிகள், நோய்த் தடுப்புப் பணிகள், நோய் சிகிச்சைப் பணிகள் என்று முறைப்படுத்திக் கொண்டு, சுகாதாரத் துறை செயல்படுகிறது.

நம் நாட்டு மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் அதாவது சுமார் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய வீடும் சுற்றுப்புறமும் சுகாதார முறையில், வசதி, தனிமை, பாதுகாப்பு, காற்றோட்டம், வெளிச்சம் முதலியன அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

பருகவும், சமைக்கவும், குளிக்கவும், பொருள்களைத் துப்புரவு செய்யவும் தண்ணீர் போதுமான அளவு தூய்மையானதாகவும், பாதுகாக்கப்பட்டதாகவும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

உணவு, தூய்மையானதாகவும், பாதுகாப்புடையதும், சத்துள்ளதுமாக அமைவதுடன், சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டதாகவும், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் போதுமான அளவிலும் இருத்தல் வேண்டும். கலப்பற்ற, சுத்தமான பால் தேவையான அளவு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

தொழில் செய்யுமிடம், கூடுமான வரையில், உடல், உடற்கூறு, நோய்க்கூறு, உளக்கூறு பற்றிய எதிர்பாரா இடையூறுகள் நேராததாய் இருத்தல் வேண்டும்.

கழிவுப் பொருள், குப்பை, கூளம் முதலியவை, மண், காற்று, தண்ணீர், பயிர் ஆகியவற்றுடன் கலந்து தீமை விளையா வண்ணம், சுகாதார முறையில் அப்புறப்படுத்தத் தக்க வசதிகள் இருக்க வேண்டும்.

பொது இடங்கள் (விழாக்கள், சந்தைகள், பொழுது போக்கிடங்கள், பொதுப் போக்குவரத்து நிலையங்கள், பள்ளிகள், அரங்குகள் முதலியன) மக்கள் கூடுவதால் தொற்றக்கூடிய நோய்கள் பரவாமலிருப்பதற்கு வேண்டிய விசேஷ சுகாதார ஏற்பாடுகளுடன் விளங்க வேண்டும்.

### அடிப்படைத் தேவைகள்

மனிதனின் சூழ்நிலையிலிருந்தும், சுற்றுப்புறத்திலிருந்தும் நோய்க் கிருமிகள், நோய் பரப்பும் பிற நுண்ணுயிரினங்கள் முதலியன ஒழிக்கப்பட்டு, அவற்றால் பரவத்தக்க நோய்கள் பரவாமலிருக்க வழி செய்ய வேண்டும்.

சூழ்நிலை—சுற்றுப்புறம் தூய்மையானதாகவும், சுகாதார முறைப்படியும் அமைய மேற்குறிப்பிட்டவை அடிப்படைத் தேவைகளாகும்.

தமிழகத்தின் தலைநகரிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளும், மாவட்டத் தலைநகர் மருத்துவமனைகளும், வட்டத் தலைநகர் மருத்துவமனைகளும், பெரும்பான்மையான வட்டாரங்களில் இயங்கி வரும் ஆரம்பச் சுகாதார நிலையங்களும், கிராம மருந்தகங்களும் நோயுற்ற மக்களுக்குச் சிகிச்சை மருந்தகங்களும் நோயுற்ற மக்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பணியினைச் செய்து வருகின்றன. இவையன்றி, சில குறிப்பிட்ட நோய்களுக்குச் தனிச் சிகிச்சை அளிக்கும் மருத்துவ நிலையங்களும் (எடுத்துக்காட்டாக, காசநோய் மருத்துவமனை, மனநோய் மருத்துவ மனை, தொற்று நோய்கள் மருத்துவமனை தாய்-சேய் நல மருத்துவமனை, முதலியன) நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றன.

### தொற்று நோய் ஒழிப்புத் திட்டங்கள்

தேசிய அளவில் வகுத்து நிறைவேற்றப்படும் தொற்று நோய் ஒழிப்புத் திட்டங்களான மலேரியா ஒழிப்பு தேசிய திட்டம் முதலியனவும் தமிழகத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன; குறிப்பாக, தமிழ் நாட்டில் மலேரியா அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறலாம். இதே போல் பிளேக் எனப்படும் கொள்ளை நோயும் தமிழகத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது. மைசூர் மாநில எல்லைப் பகுதிகளில் வழக்கமாக பிளேக் நோய் தோன்றும் இடங்களில் முன்னேற்பாடாகத் தடுப்புப் பணிபுரிய பணியாளர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். பெரியம்மை ஒழிப்பு தேசியத் திட்டத்தின் கீழ் அனைவருக்கும்—அதாவது சமுதாயத்தில் 100-க்கு 100 பேருக்கும் முதன் முறை அல்லது மறுமுறை அம்மைப்பால் வைத்து, சமுதாயத்தின் பெரியம்மை நோய்த் தடுப்பு சக்தியை முழுமையாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது; இந்த வகையில் குறிப்பிடத்தக்க வெற்றியும் கண்டுள்ளோம்; என்றாலும், விடுபட்டவர்களுக்கும், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அம்மைப்பால் வைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவையன்றி, தமிழ்நாட்டில் சில குறிப்பிட்ட பகுதிகளில், பைலேரியா நோய்கள் (யானைக்கால் முதலிய நோய்கள்), நரம்புச் சிலந்தி நோய், யாஸ் எனப்படும் சரும நோய் முதலிய நோய் ஒழிப்புத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவையன்றி, எப்போதேனும் ஒருமுறை தோன்றிப் பரவும் டெங்குவைப் போன்ற காய்ச்சல், சளிக்காய்ச்சல் (Influenza) மஞ்சள் காமாலை நோய், முதலான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவும், மற்றவர்களுக்கு நோய் பரவாமலிருக்க நோயாளிகளைத் தனிப்படுத்தல் முதலான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### தாய்-சேய் நலப்பணிகள்

தாய்-சேய் நலப் பணிகளுக்கென்று அரசாங்கம், பின்தங்கிய பகுதிகளில் 96 தாய்-சேய் நல நிலையங்களையும், பூவிருந்தவல்லி பொது சுகாதார நிலையப் பகுதியில் 8 தாய்-சேய் நல நிலையங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இவையன்றி, தமிழகமெங்கும் அமைக்கப்பட்டுள்ள 290-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அவைகளின் துணை நிலையங்களிலும், தாய்-சேய் நலப்பணி முக்கிய கடமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் நேரடியாக அமைத்து நடத்தும் இந்த நிலையங்கள் மட்டுமன்றி, உள்ளாட்சி நிறுவனங்களும் தாய்-சேய் நல நிலையங்களைத் திறந்துள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் 2,624 நிலையங்களையும், நகராட்சிகள் 286 நிலையங்களையும், சென்னை மாநகராட்சி 50 நிலையங்களையும் ஏற்படுத்தி நடத்தி வருகின்றன. மேலும் பொது நல நிறுவனங்கள் 3 தாய்-சேய் நல நிலையங்களை நடத்தி வருகின்றன. இந்த நிலையங்கள் கர்ப்பிணிப் பராமரிப்பு, பிரசவ உதவிகள், பிரசவித்த தாய்-சிறு குழந்தை நலன் பாதுகாப்பு, குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் முதலியன போடுதல் முதலான பணிகளைச் செய்கின்றன. தாய்மார்களுக்கு, குழந்தைகளுக்கு ஊட்டப்படவேண்டிய உணவு முறை, உடை, குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் முறைகள், குழந்தை வளர்ச்சிக்குத் தேவைப்படும் சத்துணவு வகைகள் ஆகியவைபற்றி விளக்கமளிக்கப்படுவதுடன், குடும்பக் கட்டுப்பாடு முறைகள் குறித்து எடுத்துக் கூறி விளக்கப்படுகின்றன.

### குடும்ப நலத் திட்டப் பணிகள்

எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு அறுவைகள் செய்யப்படுகின்றன. அவையன்றி தற்காலிகக் கருத்தடை முறைகளுக்குத் தேவைப்படும் கருத்தடைச் சாதனங்களையும், சுகாதார குடும்பப் பணியாளர், தகுதியுள்ள தாய் தந்தையர்க்கு இலவசமாக வழங்குகின்றனர். சிறிய குடும்பத்தின் சிறப்பு குறித்தும், அதனால் குடும்பத்திற்கும், சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் ஏற்படும் நன்மைகள் குறித்தும் சுகாதார குடும்ப நலத் திட்டப் பணியாளர்கள் அனைவருக்கும் எடுத்துரைக்கின்றனர்.

சுகாதாரத் துறை மேற்கொள்ளும் எந்த ஒரு சுகாதாரத் திட்டத்தைப் பற்றியும் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறி விளக்க வேண்டியுள்ளது. இந்தப் பணியைத் தமிழக சுகாதாரக் கல்வி நிலையம் செய்கிறது. படக்காட்சி, பொருட்காட்சி, சுவரொட்டி, சிறு வெளியீடுகள், முதலியன மூலமாகவும், சுகாதாரப் பணியாளர்களுக்கு—சுகாதாரக் கல்வி முறைகளில் பயிற்சி அளிப்பதன் மூலமாகவும் சுகாதாரக் கல்வி நிலையம் மக்களிடையே சுகாதார உணர்வும்—சுக வாழ்வுக்குத் தேவையான விளக்கமும் அளித்து உதவுகிறது.

### ஆரம்ப சுகாதார நிலையங்கள்

கிராம மக்களின் சுகாதார நல்வாழ்வுக்குப் பணிபுரியும் அடிப்படை அமைப்புக்களாக 'ஆரம்ப சுகாதார நிலையங்கள்' விளங்குகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கும், ஒவ்வொரு நிலையம் என்ற அளவில் இப்போது சுமார் 300 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இன்னும் சில நாட்களில் ஏனைய ஒன்றியங்களிலும் இந்நிலையங்கள் தொடங்கப்பட்டுவிடும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேலே குறிப்பிட்ட சுகாதாரப் பணிகளான மருத்துவப் பணிகள், தாய்சேய் நலம், குடும்ப நலம், பள்ளி நலம், பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம், சுற்றுப்புறத் துப்புரவு, தொற்று நோய்த் தடுப்பு, சுகாதாரக் கல்வி முதலான பணிகளை, அவற்றுக்குரிய கிராமப் பகுதிகளில் நிறைவேற்றி வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்கள், நிலைய மருத்துவ அதிகாரியின் (Medical Officer-Doctor) தலைமையில் ஒரு குழுவாக இணைந்து, கிராமப் பகுதிகளில் நலப் பணிகளை நிறைவேற்றுகின்றனர்.


கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்
பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்
FACT
பாக்ட் ...யானை மார்க் உரங்கள்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O, கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, மொண்டீத்-இன் சீப்ரோடு எழும்பூர் சென்னை
Criterion-FT-2004

உலக நல நிறுவனம் (World Health Organisation) 'சுகாதாரம்' என்பதற்கு மற்றொரு விளக்கம் வெளியிட்டுள்ளது. அதாவது:

"சுகாதாரம் என்பது நோயற்ற தன்மை; மெலிவற்ற தன்மை மட்டுமல்ல, உடல், மன, சமூக நல்வாழ்வின் நிறைவே சுகாதாரமாகும்".

### சுகாதாரத் துறையின் பணிகள்

உடல், மன, சமூக நல்வாழ்வுக்கான எல்லாப் பணிகளும், சுகாதாரப் பணிகள் தாம் என்ற போதிலும், அவற்றை, நலம் பெருக்கும் ஆக்கப் பணிகள், நோய்த் தடுப்புப் பணிகள், நோய் சிகிச்சைப் பணிகள் என்று முறைப்படுத்திக் கொண்டு, சுகாதாரத் துறை செயல்படுகிறது.

நம் நாட்டு மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் அதாவது சுமார் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய வீடும் சுற்றுப்புறமும் சுகாதார முறையில், வசதி, தனிமை, பாதுகாப்பு, காற்றோட்டம், வெளிச்சம் முதலியன அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

பருகவும், சமைக்கவும், குளிக்கவும், பொருள்களைத் துப்புரவு செய்யவும் தண்ணீர் போதுமான அளவு தூய்மையானதாகவும், பாதுகாக்கப்பட்டதாகவும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

உணவு, தூய்மையானதாகவும், பாதுகாப்புடையதும், சத்துள்ளதுமாக அமைவதுடன், சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டதாகவும், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் போதுமான அளவிலும் இருத்தல் வேண்டும். கலப்பற்ற, சுத்தமான பால் தேவையான அளவு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

தொழில் செய்யுமிடம், கூடுமான வரையில், உடல், உடற்கூறு, நோய்க்கூறு, உளக்கூறு பற்றிய எதிர்பாரா இடையூறுகள் நேராததாய் இருத்தல் வேண்டும்.

கழிவுப் பொருள், குப்பை, கூளம் முதலியவை, மண், காற்று, தண்ணீர், பயிர் ஆகியவற்றுடன் கலந்து தீமை விளையா வண்ணம், சுகாதார முறையில் அப்புறப்படுத்தத் தக்க வசதிகள் இருக்க வேண்டும்.

பொது இடங்கள் (விழாக்கள், சந்தைகள், பொழுது போக்கிடங்கள், பொதுப் போக்குவரத்து நிலையங்கள், பள்ளிகள், அரங்குகள் முதலியன) மக்கள் கூடுவதால் தொற்றக்கூடிய நோய்கள் பரவாமலிருப்பதற்கு வேண்டிய விசேஷ சுகாதார ஏற்பாடுகளுடன் விளங்க வேண்டும்.

### அடிப்படைத் தேவைகள்

மனிதனின் சூழ்நிலையிலிருந்தும், சுற்றுப்புறத்திலிருந்தும் நோய்க் கிருமிகள், நோய் பரப்பும் பிற நுண்ணுயிரினங்கள் முதலியன ஒழிக்கப்பட்டு, அவற்றால் பரவத்தக்க நோய்கள் பரவாமலிருக்க வழி செய்ய வேண்டும்.

சூழ்நிலை—சுற்றுப்புறம் தூய்மையானதாகவும், சுகாதார முறைப்படியும் அமைய மேற்குறிப்பிட்டவை அடிப்படைத் தேவைகளாகும்.

தமிழகத்தின் தலைநகரிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளும், மாவட்டத் தலைநகர் மருத்துவ மனைகளும், வட்டத் தலைநகர் மருத்துவமனைகளும், பெரும்பான்மையான வட்டாரங்களில் இயங்கி வரும் ஆரம்பச் சுகாதார நிலையங்களும், கிராம மருந்தகங்களும் நோயுற்ற மக்களுக்குச் சிகிச்சை மருந்தகங்களும் நோயுற்ற மக்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பணியினைச் செய்து வருகின்றன. இவையன்றி, சில குறிப்பிட்ட நோய்களுக்குச் தனிச் சிகிச்சை அளிக்கும் மருத்துவ நிலையங்களும் (எடுத்துக்காட்டாக, காசநோய் மருத்துவ மனை, மனநோய் மருத்துவ மனை, தொற்று நோய்கள் மருத்துவமனை தாய்-சேய் நல மருத்துவமனை, முதலியன) நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றன.

### தொற்று நோய் ஒழிப்புத் திட்டங்கள்

தேசிய அளவில் வகுத்து நிறைவேற்றப்படும் தொற்று நோய் ஒழிப்புத் திட்டங்களான மலேரியா ஒழிப்பு தேசிய திட்டம் முதலியனவும் தமிழகத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன; குறிப்பாக, தமிழ் நாட்டில் மலேரியா அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறலாம். இதே போல் பிளேக் எனப்படும் கொள்ளை நோயும் தமிழகத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது. மைசூர் மாநில எல்லைப் பகுதிகளில் வழக்கமாக பிளேக் நோய் தோன்றும் இடங்களில் முன்னேற்பாடாகத் தடுப்புப் பணிபுரிய பணியாளர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். பெரியம்மை ஒழிப்பு தேசியத் திட்டத்தின் கீழ் அனைவருக்கும்—அதாவது சமுதாயத்தில் 100-க்கு 100 பேருக்கும் முதன் முறை அல்லது மறுமுறை அம்மைப்பால் வைத்து, சமுதாயத்தின் பெரியம்மை நோய்த் தடுப்பு சக்தியை முழுமையாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது; இந்த வகையில் குறிப்பிடத்தக்க வெற்றியும் கண்டுள்ளோம்; என்றாலும், விடுபட்டவர்களுக்கும், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அம்மைப்பால் வைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவையன்றி, தமிழ்நாட்டில் சில குறிப்பிட்ட பகுதிகளில், பைலேரியா நோய்கள் (யானைக்கால் முதலிய நோய்கள்), நரம்புச் சிலந்தி நோய், யாஸ் எனப்படும் சரும நோய் முதலிய நோய் ஒழிப்புத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவையன்றி, எப்போதேனும் ஒருமுறை தோன்றிப் பரவும் டெங்குவைப் போன்ற காய்ச்சல், சளிக்காய்ச்சல் (Influenza) மஞ்சள் காமாலை நோய், முதலான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவும், மற்றவர்களுக்கு நோய் பரவாமலிருக்க நோயாளிகளைத் தனிப்படுத்தல் முதலான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### தாய்-சேய் நலப்பணிகள்

தாய்-சேய் நலப் பணிகளுக்கென்று அரசாங்கம், பின்தங்கிய பகுதிகளில் 96 தாய்-சேய் நல நிலையங்



களையும், பூவிருந்தவல்லி பொது சுகாதார நிலையப் பகுதியில் 8 தாய்-சேய் நல நிலையங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இவையன்றி, தமிழகமெங்கும் அமைக்கப்பட்டுள்ள 290-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அவைகளின் துணை நிலையங்களிலும், தாய்-சேய் நலப்பணி முக்கிய கடமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் நேரடியாக அமைத்து நடத்தும் இந்த நிலையங்கள் மட்டுமன்றி, உள்ளாட்சி நிறுவனங்களும் தாய்-சேய் நல நிலையங்களைத் திறந்துள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் 2,624 நிலையங்களையும், நகராட்சிகள் 286 நிலையங்களையும், சென்னை மாநகராட்சி 50 நிலையங்களையும் ஏற்படுத்தி நடத்தி வருகின்றன, மேலும் பொது நல நிறுவனங்கள் 3 தாய்-சேய் நல நிலையங்களை நடத்தி வருகின்றன. இந்த நிலையங்கள் கர்ப்பிணிப் பராமரிப்பு, பிரசவ உதவிகள், பிரசவித்த தாய்-சிறு குழந்தை நலன் பாதுகாப்பு, குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் முதலியன போடுதல் முதலான பணிகளைச் செய்கின்றன. தாய்மார்களுக்கு, குழந்தைகளுக்கு ஊட்டப்படவேண்டிய உணவு முறை, உடை, குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் முறைகள், குழந்தை வளர்ச்சிக்குத் தேவைப்படும் சத்துணவு வகைகள் ஆகியவைபற்றி விளக்கமளிக்கப்படுவதுடன், குடும்பக் கட்டுப்பாடு முறைகள் குறித்து எடுத்துக் கூறி விளக்கப்படுகின்றன.

### குடும்ப நலத் திட்டப் பணிகள்

எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு அறுவைகள் செய்யப்படுகின்றன. அவையன்றி தற்காலிகக் கருத்தடை முறைகளுக்குத் தேவைப்படும் கருத்தடைச் சாதனங்களையும், சுகாதார குடும்பப் பணியாளர், தகுதியுள்ள தாய் தந்தையர்க்கு இலவசமாக வழங்குகின்றனர். சிறிய குடும்பத்தின் சிறப்பு குறித்தும், அதனால் குடும்பத்திற்கும், சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் ஏற்படும் நன்மைகள் குறித்தும் சுகாதார குடும்ப நலத் திட்டப் பணியாளர்கள் அனைவருக்கும் எடுத்துரைக்கின்றனர்.

சுகாதாரத் துறை மேற்கொள்ளும் எந்த ஒரு சுகாதாரத் திட்டத்தைப் பற்றியும் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறி விளக்க வேண்டியுள்ளது. இந்தப் பணியைத் தமிழக சுகாதாரக் கல்வி நிலையம் செய்கிறது. படக்காட்சி, பொருட்காட்சி, சுவரொட்டி, சிறு வெளியீடுகள், முதலியன மூலமாகவும், சுகாதாரப் பணியாளர்களுக்கு—சுகாதாரக் கல்வி முறைகளில் பயிற்சி அளிப்பதன் மூலமாகவும் சுகாதாரக் கல்வி நிலையம் மக்களிடையே சுகாதார உணர்வும்—சுக வாழ்வுக்குத் தேவையான விளக்கமும் அளித்து உதவுகிறது.


### ஆரம்ப சுகாதார நிலையங்கள்

கிராம மக்களின் சுகாதார நல்வாழ்வுக்குப் பணிபுரியும் அடிப்படை அமைப்புக்களாக 'ஆரம்ப சுகாதார நிலையங்கள்' விளங்குகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கும், ஒவ்வொரு நிலையம் என்ற அளவில் இப்போது சுமார் 300 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இன்னும் சில நாட்களில் ஏனைய ஒன்றியங்களிலும் இந்நிலையங்கள் தொடங்கப் பட்டுவிடும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேலே குறிப்பிட்ட சுகாதாரப் பணிகளான மருத்துவப் பணிகள், தாய்சேய் நலம், குடும்ப நலம், பள்ளி நலம், பிறப்பு–இறப்புப் புள்ளி விவரம், சுற்றுப்புறத் துப்புரவு, தொற்று நோய்த் தடுப்பு, சுகாதாரக் கல்வி முதலான பணிகளை, அவற்றுக்குரிய கிராமப் பகுதிகளில் நிறைவேற்றி வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்கள், நிலைய மருத்துவ அதிகாரியின் (Medical Officer-Doctor) தலைமையில் ஒரு குழுவாக இணைந்து, கிராமப் பகுதிகளில் நலப் பணிகளை நிறைவேற்றுகின்றனர்.


கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்

யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்




பாக்ட் ...யானை மார்க் உரங்கள்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்

மனித உரிமை நாள் (முதலமைச்சர் உரை)—3-ம் பக்கத் தொடர்ச்சி

உலகுக்கு. எங்கு அக்ரமம் நடைபெற்ருலும் எதிர்த்துக் கேட்டிட உரிமை உண்டு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நாளே, டிசம்பர் 10, 1948.

இதனை 58 நாடுகள் ஒப்புக் கொண்டது, மனித குல வரலாற்றில் மதிப்புமிக்க நாளாகும்.

முப்பது பிரிவுகளைக் கொண்ட இந்த மனித உரிமைச் சாசனம், மொழி, நிறம், மதம்,

"அவனும் மனிதன் தானே!" என்ற பேச்சு, இந்த வகையைச் சார்ந்தது.


'நானென்னமிருகமா?' என்று கொடுமைக்கு ஆளானவன் குமுறியதும் இதே விதமானது தான்.

இவன் மனிதன் - இவனுக்கென சில மறுக்க முடியாத உரிமைகள் உள்ளவன் - இந்த உரிமைகளை எவரும் பறிக்கவோ குறைக்கவோ

## மக்கள் உரிமைச் சாசனத்தின் பக்கபலமாக....

வகுப்பு, சிறுபான்மை, ஏழ்மை முதலிய எந்தக் காரணத்தாலும் மனிதனுடைய உரிமைகள் பறிக்கப்படவோ குறைக்கப்படவோகூடாது என்பதனைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

எந்தக் காரணம்காட்டி, எந்த இடத்தில் மனித உரிமை பறிக்கப்பட்டாலும், அது அநீதி, அந்த அநீதியை எதிர்த்திட மனித குலத்தின் பிரதிநிதி என்ற முறையில், மற்ற நாடுகள் - அல்லது எல்லா நாடுகளையும் உறுப்பினராகக் கொண்ட ஐக்கிய நாடுகள் உரிமை பெறுகிறது.



கூடாது என்ற, புதியதோர் முழக்கம் எழுப்பப்பட்ட நாள், டிசம்பர் 10, 1948.

இந்தச் சீரிய பணியில் தம்மை முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டு அயராது பாடுபட்ட திருமதி ரூஸ்வெல்ட் அம்மையாரை இந்நாளில் நினைவிற் கொண்டு அஞ்சலி செலுத்துவது, மக்கள் உரிமைப் பிரச்சினையில் அக்கறை கொண்ட அனைவருடைய கடமையுமாகும்.

சாசனம் தயாராகிவிட்டது— நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன; பெருமிதத்துடன் இருந்திடலாம்; ஆனால், அந்த சாசனத்தின்படியே எல்லா நாடுகளும் நடந்து கொள்கின்றன என்று கூறிட முடிகிறதா? அந்த மன நிறைவு கொள்ள முடிகிறதா? அக்ரமம் தொலைந்தது; மனித

### புதியதோர் முழக்கம்

இந்த உரிமையை வழங்குவதற்கு, 58 நாடுகள் ஒப்புக்கொண்டது, உள்ளபடி மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட வேண்டியதாகும். உலகு

## மனித குலம் திரண்டு நின்றிடவேண்டும்


முழுவதற்குமாக, மனித குலம் முழுவதற்குமாகச் சேர்த்துப் பெறப்பட்டுள்ள சாசனமாகும்.

இந்தச் சாசனம் ஏற்படுவதற்கு நெடுங் காலத்துக்கு முன்பிருந்தே, மனிதனை மனிதன் தாழ்த்துவது கொடுமை என்ற உணர்வு சில பலரிடம் எழத்தான் செய்தது; ஆனால் "அது பரிவு, பச்சாத்தாபம்'' என்ற உணர்வுடன் பிணைந்ததாக மட்டும் இருந்தது; உரிமைக் குரலொலியாக வடிவம் கொள்ளவில்லை.

உரிமைகள் நிலைத்து நிற்கின்றன, தழைத்து இருக்கின்றன என்று கூறிக்கொள்ள முடிகிறத என்றால், வருத்தத்துடன் தெரிவிக்கத்தான் வேண்டி வருகிறது. இல்லை என்று. இன்றும் நிறம், இனம், மொழி எனும் பல்வேறு காரணங்கள் காரணமாக, பல நாடுகளிலே மனித உரிமைகள் அழிக்கப்படுகின்றன. மக்கள் உரிமைச் சாசனத்தையோ, அதனை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளின் எதிர்ப்பையோ ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மாண்பையோ,

[16-ம் பக்கம் பார்க்க....]





# நமது தமிழகம்

—திரு. எஸ். குமாரராஜ்

"நீங்கள் செல்லுமிடங்களில் எல்லாம் கண்டனவற்றை — கேட்டவற்றை—உணர்ந்தனவற்றைப் பற்றி எல்லாம் அரசும் நாடும் அறிந்திடத் தக்க விதத்தில் விமரிசனம் செய்திடவேண்டும். பல்வேறு அணைக்கட்டுகளைக் காண இருக்கிறீர்கள் சிரணியினர் செய்து முடித்துள்ள சீரிய பணிகளைக் காணுவீர்கள். அவற்றிலுள்ள நிறைகளை நாட்டுக்கும், குறைகளைக் களைய அரசுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் எழுதுகின்ற கட்டுரைகளை அரசினரும் அதிகாரிகளும் அமைச்சர்களும் படித்து குறைபாடுகளை நீக்கி நிறைவு செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.''

"ஆளுவது ஒரு கட்சி- அரசு என்று எடுத்துக் கொள்ளாமல் அரசு அனைவருக்கும் பொதுவானது என்ற அளவில் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும்" என்று கூறியதுடன் சுற்றுப்பயண நோக்கங்களையும் விளக்கிக் கூறி பத்திரிகையாளர்களை வழி அனுப்பிவைத்தார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், மற்ற மாவட்டங்களையும் காண செய்தித் துறை தக்க ஏற்பாடுகள் செய்யும் என்ற உறுதி மொழியையும், தமிழக அரசின் சார்பில்' அளித்தார். 1968-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் எட்டாம் நாள் காலையில் சென்னையிலிருந்து பத்திரிகையாளர்கள் ஏழு நாட்களில் ஐந்து மாவட்டங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

தமிழக அரசு போக்குவரத்து துறையைச் சேர்ந்த அழகிய பேருந்து விரைந்து ஓடியது.

"தமிழிலேயே பயண நூற்கள் மிகவும் குறைவு. தமிழ் எழுத்தாளர்கள் எல்லா இடங்களையும் பார்வையிட்டு அங்கே தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் உணர்ந்தவைகளையும் நாட்டு மக்களுக்கு எழுதித் தரவேண்டும்" என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில் எடுத்துரைத்தார்கள். அன்றைக்கு அவர்கள் விரும்பியது, இன்று அவர் அரசு பொறுப்பை ஏற்றிருக்கும் நிலையில் நனவாகியது. ஆமாம். தமிழகத்திலுள்ள பத்திரிகையாளர்கள் கடந்த நவம்பர் திங்களில் ஐந்து மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார்கள். அந்த மாவட்டங்களில் நிறைவேற்றிய, நிறைவேற்றி வருகின்ற, நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை எல்லாம் கண்டு, கேட்டு உணர்ந்தனர்.

பயன்மிக்க இந்தச் சுற்றுப் பயணம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் தமிழ்-ஆங்கில நாளிதழ்களிலும், கிழமை இதழ்களிலும் பல்வேறு கண்ணோட்டத்துடனும், ஆக்கப்பூர்வமான கருத்துரைகளுடனும் வெளிவந்திருப்பதை அனைவரும் படித்திருக்கலாம் ஒரு பிரச்னைப் பற்றி ஒவ்வொருவரும் பல்வேறு கண்ணோட்டத்துடன் கருத்துக்களை வழங்கியிருப்பதே, இச்சுற்றுப்பயணத்தின் வெற்றிக்கு அடிப்படையான அடையாளமாகும். பல்வகையினும் பயன்தரும் இச்சுற்றுலாப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும், தனித்தனி கட்டுரைகளாகவும், தொடர் கட்டுரைகளாகவும் பல இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகிவிட்டன. எனவே, பார்வையிட்ட முக்கியமான திட்டங்களைப் பற்றி தொகுத்துத் தொடர் கட்டுரைகளாக சுருக்கமாக எழுதுகிறார், "கிராம நலம்" இதழ் சார்பில் இச்சுற்றுலாவில் கலந்துகொண்ட திரு எஸ். குமாரராஜ்.

—ஆசிரியர்.

**சுற்றுப்பயணத் திட்டப்படி முதலில் சென்ற** இடம் வட ஆர்க்காடு மாவட்டம் நெமிலி ஊராட்சி ஒன்றியப் பகுதி. அங்கு அமைந்த சமுதாயக் கிணறுகளைப் பார்க்கச் சென்றோம்.

### ஓராண்டுத் திட்டங்கள்

மூன்று ஏக்கர் பரப்பளவுள்ள தென்னந் தோப்பு, சமுதாயக் கிணற்றின் பாசன வசதி மூலம் எவ்வளவு செழுமையாக காட்சி அளிக்கிறது என்பதை அறிந்தோம். சமுதாயக் கிணறுகள் தனியார் இடங்களில் அமைப்பதில் உள்ள இடையூறுகளை எடுத்துக் கூறினர்.

ஆகவே புறம்போக்கு நிலங்களில் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன என்பதை அதிகாரிகள் விளக்கினார்கள். கிராமப் புறங்களில் தரிசாக கிடந்த பல பகுதிகள் சமுதாயக் கிணற்றாலும் மின் விசை ஏற்றத்தாலும் பாசன வசதி மிகுந்தவைகளாக மாறியுள்ளதையும் எடுத்துரைத்தனர்.

ஓராண்டுத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சமுதாயக் கிணறுகள் விவசாய வளர்ச்சிக்குப் பேருதவியாக இருப்பதை பத்திரிகையாளர்கள் அறிந்தார்கள்.

## வளர்ச்சிப் பாதைகளில்..

## பத்திரிகையாளர்கள்

நெமிலி வட்டாரத்தில் ஓராண்டுத் திட்டத்தின்படி அமைக்கப்பட்ட பழத்தோட்டங்களின் விவரங்களையும் பத்திரிகையாளர்கள் கண்டும் கேட்டும் அறிந்தனர்.

அடுத்து, ஓராண்டுத் திட்டத்தின்படி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் பகுதியில் வாங்கப்பட்டிருந்த யந்திரக் கலப்பையை (Tractor) பத்திரிகையாளர்கள் பார்த்தார்கள்.

ஓர் ஏக்கர் நிலத்தில் இரண்டு சால்கள் உழுவதற்கு வாடகை ரூபாய் இருபது மட்டும் தான் என்பதையும் தெரிவித்தார்கள்.

"ஓராண்டுத் திட்டத்தினால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியில் மிகச் சிறப்பான இடம் பெறுவது 'டிராக்டர்' வாங்கியதுதான்" என்றார் ஒரு பத்திரிகையாளர்.

"ஆமாம். ஏழை எளிய விவசாயிகள் டிராக்டரை குறைந்த வாடகையில் பயன்படுத்த இந்தத் திட்டம் வரப் பிரசாதமாய் அமைந்திருக்கிறது" என்று இன்னொரு பத்திரிகையாளர், தமது சொந்த மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத்தில் டிராக்டர் வாங்கியிருப்பதால் விவசாயிக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளை நேரில் கண்ட அனுபவத்தையும் விவரித்தார்.

ஓராண்டுத் திட்டத்தின் மூலம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உருவாக்கப் பட்டிருக்கும் திட்டங்களைப் பற்றியும் உடன் வந்திருந்த அதிகாரிகளை பத்திரிகையாளர்கள் ஆவலோடு கேட்டறிந்தனர்.

அன்று (8–11–1968) மாலை வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அப்பொழுது மாவட்ட ஆட்சித்தலைவராயிருந்த திரு. பெல்லியப்பா அவர்களைப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர்.

பத்திரிகையாளர் எடுத்த எடுப்பிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்ட கேள்வி ஓராண்டுத் திட்டத்தைப் பற்றியது தான்.

"ஓராண்டுத் திட்டத்தின்படி, வடஆர்க்காடு மாவட்டத்தில் எத்தனை திருமண மண்டபம் கட்டியிருக்கிறீர்கள்" என்பது முதல் கேள்வி.

"திருமண மண்டபம் தேவையை ஒட்டித் தான் கட்டவேண்டும். மேலும் இந்த மண்டபம், திருமணங்கள் நடைபெறுவதற்காக மட்டும் கட்டப்படுவது இல்லை. பல நோக்கங்களுடன் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பொது மண்டபங்களாக கட்ட வேண்டும் என்பதுதான் குறிக்கோள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு பொது மண்டபம் கட்டப்பட்டு வருகிறது" என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் விளக்கினார்.

மேலும் தொடர்ந்து திரு. பெல்லியப்பா அவர்கள் "எழில் மிகு ஏலகிரி மலைப் பகுதியில் சமுதாயக் கிணறுகள் வெட்டப்பட்டிருப்பதையும்" எடுத்துக் கூறினார்.



## சாதனைகள் உருவாகிட...

"மகத்தான, நிலையான சாதனைகளைச் செய்வதற்கு இரும்பு போன்ற அசையாத ஒழுங்குக் கட்டுப்பாடு வேண்டும். வாக்குவாதத்தின் மூலம் அந்த ஒழுங்குக் கட்டுப்பாடு வந்து விடாது. நியாயவாதத்தையோ, காரிய காரணத் தொடர்பையோ நாடினாலும், இது உருவாகிவிடாது. எதிர்ப்பு என்னும் பள்ளிக்கூடத்தில்தான் ஒழுங்குக் கட்டுப்பாடு எனும் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தியாகம், ஒழுங்கு, சுயகட்டுப்பாடு ஆகியவை இல்லாவிடில் விமோசனமும் இல்லை, நம்பிக்கையும் இல்லை."

—அண்ணல் காந்தியடிகள்

ஓராண்டுத் திட்டத்தினால் விவசாயத் துறையில் மிக விரைவான வளர்ச்சி உருவாகியிருப்பதையும் எடுத்து விளக்கினார்.

'ஓராண்டுத் திட்டம்' என்பதால் அத் திட்டத்தை நிறைவேற்றிய ஓராண்டுக்குள் அதை நிறுத்திவிடவேண்டும் என்பதில்லை. ஓராண்டுக்குப்பிறகு அத்திட்டத்தின் நோக்கங்களை மற்ற இடங்களில் நிறைவேற்றி வருகிறோம். "ஓராண்டுத் திட்டத்தின் நோக்கம் தொடர்ந்து அத்திட்டம் செயல்படுத்த வேண்டும் என்பதுதான்" என்று திரு பெல்லியப்பா அவர்கள் தெரிவித்த கருத்து, பத்திரிகையாளர் அனைவரையும் கவர்ந்தது.

அரசாங்கத்திடமிருந்து எவ்வித உதவியும் பெருமலேயே நூற்றுக்கு நூறு தங்கள் நிதி வருவாயிலிருந்தே ஊராட்சி ஒன்றியங்கள் ஓராண்டுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளன.

"திருத்தியமைக்கப்பட்ட ஊராட்சி முறை, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது" என்று பிற மாநிலத்தினர் தெரிவிக்கும் கருத்தின் உண்மையை, பத்திரிகையாளர் உணர்ந்தனர்.

ஓராண்டுத் திட்டத்தினால், தமிழகத்திலேயே உணவு உற்பத்தியில் இரண்டாவது மாவட்டமாக இருக்கும் வட ஆர்க்காடு மாவட்டம் நல்ல பயனைப் பெற்றுள்ளது.

ஓராண்டுத் திட்டம் — வேளாண்மை வளர்ச்சிக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளதைப் பத்திரிகையாளர் கண்டும் கேட்டும் உணர்ந்தனர்.

"வளர்ச்சிப் பாதையில் மிக விரைவாக சென்றுகொண்டிருக்கும் வட ஆர்க்காடு மாவட்டம் மாவட்டத்தைப் பின் தங்கிய மாவட்டம் என்று குரலெழுப்பப்படுகிறது. இது ஏன்?" இந்தச் சந்தேகத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமே பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

"ஆமாம் பின்தங்கியது–பின்தங்கியது எனக் கூறுவதனைத்தான் நானும் வரவேற்கிறேன். அப்பொழுதுதான் முன்னேறவேண்டும் என்ற உணர்வு இருந்துகொண்டே இருக்கும். அதற்கான உதவிகளைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம்."

திரு பெல்லியப்பா அவர்களின் சாதுரியமான பதில், அவருக்கு முன்னேற்றத்திலுள்ள ஆர்வத்தைக் காட்டியது. மேலும் அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:—

17,500 இராணுவ வீரர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் எதிர்கால நலனுக்கென நான்கே முக்கால் இலட்சம் ரூபாய் மதிப்பில் பொது நிதியின் மூலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது 'ஜவான்ஸ் பவன்' கட்டிடம் இதன்மூலம் கிட்டும் வருவாய் முன்னாள் இராணுவத்தினரின் நல் வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படுகிறது.

காட்டுவளம் கொழிக்கும் ஜவ்வாது ஏலகிரி பகுதிகளிலிருந்து மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ. 7·50 இலட்சம் வருமானம் கிடைத்திருக்கிறது.

ஐ. ஆர். 8 ரக நெல் சாகுபடி மூலம் 4,485 கிலோ கிராம் விளைச்சல் ஓர் ஏக்கரில் செய்துகாட்டிய விவசாயி வட ஆர்க்காடு மாவட்டத்துக்காரர்.

1967-68–ஆம் ஆண்டில் சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் மூலம் விடப்பட்ட அதிகப்படியான தண்ணீர் மூலம் 51,221 ஏக்கர்களில் நெல் விளைச்சல் அதிகப்படியாகியுள்ளது.

எனவே அடுத்து ஒவ்வொரு மாவட்டத்திற்குச் சென்றபொழுதும் பத்திரிகையாளர் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்தித்த பொழுதும் 'ஓராண்டுத் திட்டம்' பற்றிய விவரங்களைக் கேட்டனர்.

1968—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதி அன்று கிருஷ்ணகிரியில் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுலைமான் அவர்களைச் சந்தித்தபொழுதும் 1968—ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11—ம் நாள், 1968—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12—ம் நாள் ஆகிய நாட்களில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பாங்கோ அவர்களைச் சந்தித்த பொழுதும், 1968-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 13—ம் நாள் அன்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அகுலி வாலா அவர்களைச் சந்தித்த பொழுதும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வெங்கடேசன் அவர்களை 1968-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி அன்று சந்தித்த பொழுதும், ஓராண்டுத் திட்டம் பற்றிய விவரங்களைக் கேட்டனர்.

(மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பத்திரிகையாளர்கள் சந்தித்தபொழுது மற்றும் பல வளர்ச்சித் திட்டங்கள், செயல்முறைகளைப் பற்றியும் கேட்டனர். அவைகளைப் பற்றிய விவரங்கள் அந்தந்த தலைப்பில் கட்டுரையில் குறிப்பிடப்படும்.)

ஊராட்சி ஒன்றியங்கள் செய்துவரும் அரும் பணிகளையும், கூட்டாகச் செய்துவரும் பணிகளையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் கூட்டாகச் சேர்ந்து செயல்படும் திட்டத்தையும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறிய பத்திரிகையாளர்கள் அதுபோன்று கோவை மாவட்டம் ஏதேனும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதா என்று கேட்டார்கள்.

மூன்று ஒன்றியங்கள் கூட்டாக ஒரு திட்டத்தை நிறைவேற்றி வருவதைப் பாராட்டிய திரு. பாங்கோ அவர்கள் தமது மாவட்டம் அதுபோன்றமுயற்சிகளில் இனிமேல் தான் ஈடுபடவேண்டும் என்பதைத் தெரிவித்தார்கள்.

தர்மபுரி மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் ஓராண்டுத் திட்டம் சிறப்புடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. சில ஒன்றியங்கள் அத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகின்றன என்பதையும் பத்திரிகையாளர்கள் உணர்ந்து மகிழ்ந்தனர்.

ஓராண்டுத் திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையாக இருந்து வேளாண்மை வளர்ச்சிக்குப் பெருங்கருவியாக அமைந்துள்ள அமைப்பின் பணிகளும் ஓராண்டுத் திட்டத்தின் வெற்றியை நமக்குப் பறைச் சாற்றுகின்றன.

'இஸ்ரேல் நாட்டில் சமூகசேவை நிலையங்கள் வியக்கத் தக்கப் பணிகளைச் செய்திருக்கின்றன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக நீங்கள் "சேரணி" என்ற பெயரில் மாபெரும் சமூகசேவை இயக்கத்தைத் தோற்றுவித்திருக்கிறீர்கள்.'

என்று நமது முதலமைச்சர் அவர்களிடம் கனடா நாட்டிலுள்ள மிக்கல் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சாஸ்திரி அவர்களின் துணைவியாரான திருமதி சாஸ்திரி அவர்கள் புகழ்ந்துரைத்த அமைப்புதான் அது.

அந்த அமைப்புதான்—சேரணி !

என்று சொல்லவும் வேண்டுமோ ?

அதன் அரும் பணிகள்—ஏராளம்! ஏராளம்!

[தொடரும்]

எழுச்சியும் உறுதியும் அனைவரும் பெற்றிட.. [12-ம் பக்கத் தொடர்ச்சி]

அக்ரமம் புரிந்திடும் நாடுகள் மதிப்பதாகத் தெரியவில்லை.

### புத்துணர்வின் எழுச்சி


ஆனால், மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது, முன்பு உலகு வாய் மூடிக்கிடந்திட வேண்டி இருந்தது, இன்று கண்டனம் எழும்புகிறது. ஐக்கியநாடுகள் மன்றக் கூட்டங்களில் - மனிதகுலத்தின் சார்பாக வாதாடுவதற்கு நான் இருக்கிறேன் என்று அறிவிக்கிறது.


ஆண்டுதோறும் இந்நாளைக் கொண்டாடுவதன் மூலம், ஐக்கியநாடுகள் மன்றத்தின் வலிவுக்கு நாம் மேலும் உரம் ஊட்டுகிறோம். அக்ரமம் செய்திடும் நாட்டினருக்கு, உலகு விழித்துக் கொண்டிருக்கிறது, என்பதை எடுத்துக் காட்டுகிறோம்.

மக்கள் உரிமைச் சாசனத்தின் பக்கபலமாக மனிதகுலம் திரண்டு நின்றிடவேண்டும். இதற்கான எழுச்சியும் உறுதியும் நாம் அனைவரும் பெற்றிட, இந்நாள் பயன்படுகிறது. வாழ்க மக்கள் உரிமை! வெல்க மக்கள் உரிமை!''

[தமிழக முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் "மனித உரிமை நாள்" பற்றி 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ந் தேதி அன்று வானொலியில் நிகழ்த்திய உரை.]

[கூடைமுறம் கட்டுவோரும் கூடித் தொழில் செய்தால், நாடிய நன்மைகள் கோடி வரும் என்று எல்லோரும் இணைந்து செயல்படும் காலம் இது. "கூட்டுறவே நாட்டு உயர்வு" என்பதை உணர்ந்து, மக்கள் எல்லாத் துறைகளிலும் எல்லா வகையிலும் ஒன்றுபட்டு உழைத்து வருகின்றனர். சுருக்கமாகச் சொன்னால், இன்றையச் சமுதாய வளர்ச்சியில், கூட்டுறவு இயக்கம் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. நமது அரசு கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாகவே வேளாண்மை உதவிகளைச் செய்ய முன் வந்துள்ளது. தமிழகத்தில் வேளாண்மை உதவிகளைச் செய்து வருவதில் தலை சிறந்த கூட்டுறவு நிறுவனமாக விளங்குகிறது, துடியலூர் வேளாண்மை-கூட்டுறவு நிறுவனம். அதனுடைய சீரிய பணிகளைச் சுருக்கமாக கூறுகிறது, இக்கட்டுரை—ஆசிரியர்.]






துடியலூர்—கோவை மாவட்டத்திலுள்ள ஊராகும். கோவை நகரிலிருந்து வடக்கே 6 மைல் தொலைவில் தான் உள்ளது துடியலூர். துடியலூர் வேளாண்மை கூட்டுறவு நிறுவனம் 1955-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு தனது பணியைத் தொடங்கியது.

இன்று அருகுபோல் வேரோடி ஆல்போல் தழைத்து இதன் கிளையாக உள்ள 16 கூட்டுறவு நாணயச் சங்கங்களைக் கொண்டு துடியலூர் கிராமத்திற்கு 5 மைல் சுற்றளவிலுள்ள 51·54 மைல்களுக்கு, அதாவது 32,745·55 ஏக்கர் பரப்பளவுக்கு பயன்படுகிறது.

1955-ம் ஆண்டில் வேளாண்மைக்காக விவசாயிகளுக்குப் பல்நோக்குடன் உதவும் 26 கூட்டுறவு நிறுவனங்கள் முன் மாதிரியாக நிறுவப்பட்டன. அந்த அடிப்படையில் எழுந்த கூட்டுறவுநிறுவனங்களில் ஒன்றுதான், துடியலூர் கூட்டுறவு வேளாண்மை நிறுவனம்.

துடியலூர் சுற்று வட்டாரம் முழுவதும் கிணற்றுப் பாசனத் தாலும் மின்விசை ஏற்றதாலும் நடைபெறுகிறது. முக்கியமானப் பயிர்கள், சோளம், கம்பு, கேழ்வரகு, கரும்பு, பருத்தி முதலியன.மற்றும் பழமரங்களும் பூச்செடிகளும் பயிராகின்றன.

1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி, துடியலூர் பகுதியின் மொத்த மக்கள் தொகை 66,518 ஆகும். இவர்களில் 5,544 பேர் நில உரிமையாளர்கள். 4,858 பேர் விவசாயத் தொழிலாளர்கள்.

வேளாண்மையின் மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட துடியலூர் வேளாண்மை கூட்டுறவு நிறுவனம், விவசாயிகளுக்கு வேளாண்மைக்கு பயன்பட கடன் வழங்குகிறது. கலப்புரமும் இரசாயன உரமும் விநியோகம் செய்கிறது. பயிர்ப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கிறது. விதை "பெருக்கப்படவும் தரப்படவும்" பணியாற்றுகிறது. கால்நடைத் தீவனம் தயாரித்து விநியோகிக்கப்படுகிறது. விவசாயக் கருவிகள், பம்பு செட்டுகள் பழுது பார்க்கப்படுகின்றன. கால்நடைப் பண்ணை, கோழிப் பண்ணை முதலியனவும், பால் பண்ணையைப் பெருக்கவும், காய்கறித் தோட்டங்களை பெருக்கவும் உதவி அளிக்கப்படுகிறது. மற்றும் விசைத் தெளிப்பான் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. இப்பணிகளைப் பற்றி மிகச் சுருக்கமாக இங்கு காண்போம்.

### கடன் வசதி

வேளாண்மையை விரிவுப்படுத்தவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், ஏழை விவசாயிகளுக்கு அவரவர்களின் தேவைகளை எண்ணி, காலங்கருதி எளிய தவணைமுறைகளில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

தொடக்கக் காலத்தில்—1955-ல் கிராமியக் கூட்டுறவு நாணய வங்கியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல், விவசாயக் கருவிகள் வாங்குதல், பண்ணை வளர்ச்சி. பால்பண்ணை வளர்ச்சி, கோழிப் பெருக்கம் போன்ற பணிகளுக்கு குறுகிய கால நீண்ட காலக் கடன்களை வழங்குவதில் ஈடுபட்டது. இம்முறையில் 1967—68-ம் ஆண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்ட கடன் தொகைமட்டும் ரூ. 10.90 இலட்சங்களாகும்.

### உர விநியோகமும் பயிர்ப் பாதுகாப்பும்

இக்கூட்டுறவு நிறுவனத்திற்கென்று தனியாக கலப்பு உரம் தயாரிக்கும் பகுதி ஒன்றுள்ளது. இதன் மூலம் 'சிறந்த கலப்புரம்' என்ற பெயரில் கலப்புரம் விநியோகிக்கப்படுகிறது. "அம்மோனியம் சல்பேட்" "சூபர் பாஸ்பேட்" போன்ற ரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

### தீவனக் கலப்புத் தொழிற்சாலை

அரசாங்க உதவியோடு ரூ. 1,40,000 செலவில் கால் நடைத்தீவனம் தயாரிப்பதற்கென ஒரு நவீன வசதிகள்

அமையப் பெற்ற தீவனக் கலப்பு தொழிற்சாலையும் சேமிப்பிற்கென ஒரு கிடங்கும் அமைக்கப் பெற்றுள்ளது. இதன் மூலம் ஆரம்பக் காலத்தில் மாதத்திற்கு 300 டன் தீவனம் தயாரிக்கப்பட்டு மாதம், ஒன்றுக்கு 1,000 டன்னாக பெருக்கப்படும்.

### பருத்தி அறைக்கும் தொழிற்சாலை

அரசாங்கம் ரூ. 45,000 பங்குத் தொகையாகவும் ரூ. 35,000 கடனாகவும், பருத்தி அறைக்கும் தொழிற் சாலை நிறுவனமும், கிடங்கு ஒன்று கட்டவும் வழங்கி யுள்ளது. இந்த நிறுவனத்திற்கென 6 பருத்தி அரைக்கும் யந்திரங்கள் கொண்ட தொழிற்சாலை ஒன்றுள்ளது. இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் பருத்தி விதைகள் விவசாய இலாகாவிற்கு வழங்கப் படுகின்றன.

### அவர்களுக்கு மட்டுமல்ல

இவை நீங்கலாக இந்நிலையம் விசை டில்லர்கள், விசைத் தெளிப்பான்கள் முதலிய விவசாயக் கருவிகளை வாங்கி விநியோகித்து வருகின்றது. விவசாயக் கருவிகள் பழுது பார்ப்பதற்கென ஒரு பழுதுபார்க்கும் நிலையமும் அமைந்துள்ளது.

இந்தச் சீரிய பணிகளோடு பல்வேறு புதிய திட்டங் களுக்கான முயற்சிகளிலும் துடியலூர் வேளாண்மை-கூட்டுறவு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அந்த முயற்சிகளில் ஒன்று, காய்கறி உற்பத்தியைப் பெருக்கி, நாள்தோறும் சென்னை நகருக்கு 50 டன் காய்கறிகளை அனுப்பும் திட்டம், மற்றும் பால்பண்ணைத் திட்டம், கலப்புரத் தொழிற்சாலை, பம்புசெட்டு திட்டம் போன்ற பல திட்டங்களை அரசு அனுமதி கிடைத்தவுடன் இந்த நிறுவனம் தொடங்க இருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும், எல்லாவகையிலும் சிறப்பான பணிகளையே துடியலூர் வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் செய்து வருகிறது. 1967-6ऽ-ம் ஆண்டின் தணிக்கைப்படி இந்நிறுவனத்தின் நிகர லாபம் ரூ. 43,970·15 ஆகும்.

கூட்டுறவு இயக்கத்தின் நெறிகளை நேர்படச் செயலாக்கி வரும் துடியலூர் வேளாண்மை கூட்டுறவு நிறுவனம் வெற்றியின் சின்னமாகத் திகழ்கிறது.


தொடக்கக் காலத்தில் இந்த நிறுவனத்தின் உறுப் பினர்களின் எண்ணிக்கை 336 ஆகும். பங்குதாரர்களின் மூலதனம் ரூ. 28,600. இப்பொழுது உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,500, பங்குதாரர்களின் மூலதனம் 3,00,000 ஆகும்.

இப்படி நாள்தோறும் வளர்ந்து, கூட்டுறவு இலட்சியத்தினைப்பேணி வெற்றி நடைபோடும் துடியலூர் கூட்டுறவு வேளாண்மை நிறுவனத்தால், துடியலூர் மக்களுக்கும் இந்நிறுவனத்தின் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்களுக்கும் மட்டும் பெருமை. கோவை மாவட்டத் திற்கு மட்டும் பெருமை அல்ல——


தமிழகத்திற்கே பெருமையாகும்!

தமிழக அரசால் பஞ்சாயத்துகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட

ரேடியோக்கள்



மாடல் BS 67
6 வால்வுகள் AC
4 பாண்டுகள்
விலை ரூ. 455·80
விற்பனை வரி மற்றும் எக்ஸைஸ் வரி உள்பட



மாடல் TR 67 டிரான்ஸிஸ்டர், 4 பாண்டுகள்
அகில உலக நிகழ்ச்சிக்கு மெயின் செட்டை போலவே இயங்கவல்லது.
விலை ரூ. 455·80
விற்பனை வரி மற்றும் எக்ஸைஸ் வரி உள்பட

தொலைப் பேசி: 82319 தந்தி: "ASSEMBLER"

ரீஸா கம்பெனி

அலுவலகம்: 11, மவுண்ட் ரோடு, சென்னை-2.
தொழிற்சாலை: 829, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32.



"சில வருடங்களுக்கு முன், விவசாயக் கல்லூரி ஒரு மியூசிய மாகவும், ரேடியோ பொழுது போக்குச் சாதனமாகவும் இருந்தன. இன்று இவை இரண்டுமே, விவசாயிகளுக்கு மிக்க பயனுடையவை யாக இருக்கின்றன"—விஞ்ஞான மேதை திரு ஜி. டி. நாயுடு.

# கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு

தமிழக கிராம வானொலி மன்றங்களின் ஒன்பதாவது ஆண்டு விழாவையொட்டி, கருத்தரங்கும், சிறந்த வானொலி மன்றங்களுக்குப் பரிசளிப்பு விழாவும், 2-12-1968-ல் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூரில் நடை பெற்றன.

கருத்தரங்கு—காலை 9-30 மணியளவில், ஆரம்பமாகியது. திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள், கருத்தரங்குக்குத் தலைமை தாங்கினார்.

சூலூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு வி. கே. குப்புசாமி வரவேற்புரை நிகழ்த்தியபோது, "வானொலி மன்றங்கள், ஒவ்வொரு கிராமத் திலும் சிறப்பாக இயங்க வேண்டும். இதனால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இத்தகைய மன்றங்களை ஊக்குவிக்கும் பெரு நிகழ்ச்சி, எங்கள் வட்டாரத்தில் நடப்பது, வட்டார வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், பொது நலத் தலைவர்கள் எல்லோருக்குமே ஒரு பெருமையையளிக்கிறது" என்று குறிப்பிட்டார்.

கருத்தரங்கின் தலைவர் தமது முன்னுரையில்—

"சென்ற ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற கிராம வானொலி மன்ற ஆண்டு விழாவில் தலைமையேற்ற விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், கிராமங்களில் இத்தகைய விழா நடைபெறுவது நலமென ஆலோசனை சொன்னார்கள். அதன்படி, இந்த ஆண்டு சூலூரில் நடைபெறுகிறது" என்றார்.

அடுத்து, கருத்துரை வழங்கிய, விவசாயத் துறை இணை இயக்குநரும், கோவை வேளாண்மைக் கல்லூரி முதல்வருமான டாக்டர் பொன்னையா அவர்கள், அரசினரின் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளின் அரிய சாதனைகளைப் பற்றி, குறிப்பிட்டார்; மேலும், "விவசாயிகளின் ஆர்வம்—விவசாய ஆராய்ச்சிகளின் பயன், இரண்டும் ஒன்று கலக்க வேண்டும். கிராம வானொலி மன்றங்களின் வாயிலாக, அதிக அறிவு பெறமுடிகிறது. இதனால் பயனடைந்த விவசாயிகள் அதிகம் இருக்கிறார்கள்" என்றார் அவர்.

"விவசாய அனுபவமும்—வானொலி ஒலிபரப்பும்" என்பது பற்றி, விஞ்ஞான மேதை திரு ஜி. டி. நாயுடு உரையாற்றினார்.

"விவசாயக் கல்லூரிகளும்—ஆராய்ச்சிப் பண்ணைகளும்—விவசாயத் துறையும்—வானொலியும்— மிகு விளைச்சலுக்காக, கிராம வானொலி மன்றங்களின் மூலமாக இணைந்து செயலாற்றுகின்றன" என்று குறிப்பிட்டார் அவர்.

அவினாசலிங்கம் மனையியல் கல்லூரி முதல்வர் டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் 'விவசாயப் பெண்களுக்கான நிகழ்ச்சிகள்' என்பது பற்றி உரையாற்றினார்கள்.

### பெண்களுக்கான விவசாய நிகழ்ச்சிகள்

"கிராம வானொலி மன்றங்களின் மூலமாக—விவசாயப் பெண்களும் பயன் அடைகிறார்கள். விவசாயத்தைப் பற்றி மட்டுமல்லாமல், மனைநலம் பற்றி புதிய கருத்துக்களைப் பெண்களும் விரும்புகிறார்கள். முயற்சியை மேற்கொள்ள ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். குடும்ப நலத் திட்டத்தில் மிகுந்த அக்கறை காட்டவேண்டும். இதற்குக் கல்விதான் வழிகாட்டமுடியும்; கருவிகள் அல்ல. அதிக அளவில் பெண்களுக்கான நிகழ்ச்சிகள் வானொலியில் இடம்பெறவேண்டும்" எனக் குறிப்பிட்டார் அவர்.

'வானொலியில் விவசாய அறிவு' என்பது குறித்து டாக்டர் வி. சந்தானம் பேசியபொழுது "கிராம வானொலி மன்றக் கேள்வி—பதில் குறிப்புகளைக் கொண்டே சாகுபடி செய்து நற்பயன் அடைந்திருப்பதாகக்" குறிப்பிட்டார். மேலும், "வானொலி மன்ற நிகழ்ச்சிகளில் அவ்வப்போது புதிய கருத்துக்கள் இடம் பெறுகின்றன. இதை மாதமொரு முறை புத்தகமாக வெளியிடுவது, மிக்க பயனுள்ளதாக இருக்கும்" என்ற கருத்தையும் தெரிவித்தார்.

தலைமை வானொலி அதிகாரி திரு எம். என். பார்த்தசாரதி, வானொலிப் பராமரிப்பு நிறுவனம் இயங்கும் முறை பற்றியும், வானொலிப் பெட்டிகள் பழுதின்றி இயங்கவேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

விவசாய வானொலித் தகவல் அதிகாரி திரு எப். ஜார்ஜ் "விவசாயிகள் விரும்பிக் கேட்பது கேள்வி—பதில். சந்தேகங்களுக்கு தீர்வுகாண உபயோகமுள்ளதாகிறது இப்பகுதி. விவசாயிகள்—ஊழியர்கள்—வானொலி நிலையத்தினர்—ஆகியோரின் கூட்டு முயற்சியே நற்பயனளிக்கிறது" என்றார்.

சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வேலுசாமி பேசியபோது "கோவை விவசாயிகள் இரவு 8.00 மணிக்குப் பிறகே வீடு திரும்புகிறார்களென்றும், நிகழ்ச்சிகளை 8 மணிக்கு பிறகு தொடங்குவது பயனுள்ளதாகும்" என்ற கருத்தினைத் தெரிவித்தார்.

அதன்பிறகு, பரிசுக்குரியதென தேர்ந்தெடுக்கப்பட்ட வானொலி மன்ற அமைப்பாளர்களும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் கருத்துரை வழங்கினார்கள்.

பகல் உணவிற்குப் பிறகு—மீண்டும் மாலை 3-30-க்கு கருத்தரங்கு கூடியது.

முதன் முதலாகப் பேசிய பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு குமாரசாமி, "கிராமத்தில் உள்ள எல்லாப் பிரச்னைகளையும், வானொலி மன்றங்களின் மூலமாக, கருத்துக்களைச் சொல்லித் தீர்வு காணலாம்" என்று கூறினார்.

விவசாயத்துறை துணை இயக்குநர் திரு ரங்காச்சாரி பேசியபோது "விவசாயிகளுக்கும் வானொலி நிலையத்தினருக்கும், கிராம வானொலி மன்றங்கள் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகின்றன" என்றார்.

விவசாயத் துறை துணை இயக்குநர் திரு ஏ. வெங்கடராமன்—திருச்சி வானொலி நிலையத்தினரின் சேவையை மிகவும் பாராட்டிப் பேசினார். அவர் கூறியதாவது: "கடந்த இரண்டாண்டுகளாக, தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயப்புரட்சி ஏற்பட்டிருக்கிறது, ஏ. டி. டி. 27 என்னும் புதிய நெல் விதையைக் கொண்டே, இதைச் சாதித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம், திருச்சி வானொலி நிலையத்தின் விவசாய ஒலிபரப்பேயாகும். சொல்லுவது எளிது; மக்கள் மனதில் பதியும்படி சொல்லுவது மிகவும் கடினம். இதை திருச்சி வானொலி நிலையம் செவ்வனே செய்கிறது" என்று கூறினார்.

தொடர்ந்து, கிராம வானொலி மன்ற அமைப்பாளர்களும், பல முற்போக்கு விவசாயிகளும் கருத்துரையாற்றினர்.

கருத்தரங்கின் இறுதியில், கீழ்க்கண்ட நான்கு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

1. கிராம வானொலி மன்றங்களுக்கெனத் தயாரிக்கப்படும் கேள்வி—பதில், உரையாடல், கருத்துரை ஆகியவற்றைத் தொகுத்து, சிறு புத்தக வடிவில், கிராம வானொலி மன்றங்களுக்குக் கொடுத்தால், மிக்க பயனுள்ளதாக இருக்கும். ஆர்வமுள்ள முற்போக்கு விவசாயிகளும், இதனால் பெரிதும் பயனடைவார்கள். இதற்கான வழிவகை செய்யுமாறு தமிழக அரசை, இக்கருத்தரங்கு கேட்டுக்கொள்கிறது.

2. பெண்களுக்கான நிகழ்ச்சியை மேலும் அதிகமாக்க வேண்டும்.

3. விவசாயிகள் வேலையிலிருந்து திரும்ப காலதாமதமாவதால், கிராம வானொலி மன்ற நிகழ்ச்சி, மாலை 7-30-க்கு ஆரம்பமாவதை 8-00 மணிக்கு மேல் என்று மாற்றலாம்.

4. கோவை, சேலம் மாவட்டங்களுக்கு ஒரு தனி இயக்குநர் நியமனம் செய்து, விவசாய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பலாம்.



## கிராம வானொலி மன்றங்கள்



## ✤ பரிசளிப்பு விழா ✤

பரிசளிப்பு விழாவில், கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் துணைத் தலைவர் திரு பி. என். பரமசிவம், எம்.எல்.ஏ., உரையாற்றுகிறார்.

சிறந்த, பயனுள்ள முறையில் செயல்படும் கிராம வானொலி மன்றங்களுக்கு, பரிசளிப்பு விழா 2—12—68 மாலை 5-30 மணிக்கு, இறை வணக்கத்துடன், ஆரம்பமாகியது.

திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள், அனைவரையும் வரவேற்றார். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் வானொலி மன்றங்களுக்குப் பரிசுகளை வழங்கினார்

வேளாண்மைத்துறை அமைச்சர் தமது முன்னுரையின்போது "மிகு விளைச்சல் பணியில் கிராம வானொலி மன்றங்கள், சிறப்பான முறையில் செயலாற்றி இருப்பதைப்" பாராட்டினார்.

அடுத்து, கிராம வளர்ச்சி இயக்குநர் திரு ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ். அவர்கள் பேசியபோது, "மகளிர் மன்றங்களையும், கிராம வானொலி மன்றங்களோடு இணைத்துக் கொள்ள வேண்டும்" என்ற கருத்தைத் தெரிவித்தார்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பாங்கோ, ஐ.ஏ.எஸ். "வானொலி மன்றங்கள் மூலமாக, விவசாயிகளுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் எல்லோரும் அறியுமாறு சொல்ல முடிகிறது. ஒரு கிராமத்தில் வானொலி மன்றம் அமைத்தால், எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது" என்றார்.

விவசாய உதவி இயக்குநர் திரு இ. ஜி. எஸ். சிவசாமி அவர்கள், வானொலி மன்றங்களை ஊக்குவிக்க விவசாயத் துறையில் உள்ள புதிய திட்டத்தை விளக்கிப் பேசினார்.

பொங்கலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் துணைத் தலைவருமான திரு பி. என். பரமசிவம், கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிக் கூறி, அவைகளைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

### கிராம வானொலி மன்றங்கள் செய்யும் பணி

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் பரிசளிப்பதற்கு முன்னதாக, அரியதொரு கருத்துரையாற்றினார்.

"புதிய முறைகள்—புதிய விஞ்ஞானக் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். நல்லதாக இருந்தாலும்—நாலு முறை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தப் பணியே கிராம வானொலி மன்றங்கள்—வாயிலாக, நடைபெறுகிறது. ஒவ்வொரு ஊராட்சியில் மட்டுமல்லாமல், உட்கடைக் கிராமங்களிலும் வானொலி மன்றங்களை அமைக்க வேண்டும்" என்று கூறியதோடு, கோவை, சேலம் மாவட்டத்தைச் சார்ந்த உழவர் பெருமக்களின் உழைப்புத் திறனை உதாரணங்களோடு

மாவட்ட வாரியாக பரிசுகள் பெற்ற சிறந்த கிராம வானொலி மன்றங்கள் :—

| | மாவட்டம். | ஊராட்சி ஒன்றியம். | கிராம வானொலி மன்றம். |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | வாலாஜாபாத் | முத்தியால் பேட்டை |
| 2. | மதுரை | ஆத்தூர் | மணலூர் |
| 3. | கோயம்புத்தூர் | திருப்பூர் | மங்கலம் |
| 4. | நீலகிரி | கூனூர் | எல்லாநள்ளி |
| 5. | சேலம் | புதுச்சத்திரம் | கல்யாணி |
| 6. | தர்மபுரி | மொரப்பூர் | இருமத்தூர் |
| 7. | தென் ஆர்க்காடு | வல்லம் | சண்டிசாட்சி |
| 8. | தஞ்சாவூர் | பேராவூரணி | குறிச்சி |
| 9. | திருச்சிராப்பள்ளி | மணப்பாறை | எப். கீழையூர் |
| 10. | இராமநாதபுரம் | திருப்புல்லாணி | உத்திர கோச மங்கை |
| 11. | திருநெல்வேலி | ஸ்ரீவைகுண்டம் | ஏரல் |
| 12. | கன்னியாகுமரி | ராஜக்கமங்கலம் | சூரங்குடி |
| 13. | வட ஆர்க்காடு | பேரணம்பட்டு | சின்னதாமல் செருவு |

கோயம்புத்தூர் மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், பெத்தாபாளையம் கிராம வானொலி மன்றம் மாநிலப் பரிசு பெற்றது.

மாவட்ட வாரியாக—சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்கு, வானொலிப் பெட்டியும், சுழற் கேடயமு வழங்கப்பட்டன. மாநில அளவில் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம வானொலி மன்றத்திற்கு (அதாவது கோவை மாவட்டத்தைச் சார்ந்த பெத்தாம் பாளையம் மன்றத்திற்கு) நற்சான்றிதழ் அளிக்கப் பட்டது.

இவ்விழாவின் இறுதியில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் வருகை தந்து, சிறப்பித்து, பரிசு பெற்ற கிராம வானொலி மன்றங்களைப் பாராட்டிப் பேசினர். திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு கோபால் நன்றி கூறினர்.

நாட்டு வாழ்த்துடன், விழா இனிது முடிந்தது.

விளக்கினர். அண்மையில் தாம் சென்றுவந்த அயல் நாடுகளில் கண்ட செய்திகளைக் குறிப்பிட்டுப் பேசுகையில், சோவியத் நாட்டிலே வேளாண்மைக் கண்காட்சி நிரந்தரமாக அமைத்து, மக்களுக்குப் புத்துணர்வையும் விஞ்ஞான அறிவையும் பரப்பி வருவதை எடுத்துரைத்தார்.

1968-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதி மாலை 7-30 மணிக்கு கோவை மாவட்டத்தில் முதல் பரிசு பெற்ற திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, மங்கலம் கிராம வானொலி மன்றத்துக்கு திருச்சி வானொலி நிலைய இயக்குநரும், பத்திரிகையாளர்களும் வருகை தந்தனர். மங்கலம் கிராம வானொலி மன்ற உறுப்பினர்கள்—மன்ற ஒலிபரப்பு நிகழ்ச்சியில் பங்குகொள்வதையும், மன்றத்தின் பதிவேடுகளையும் பார்வையிட்டனர். கிராம வானொலி மன்றத்தின் வாயிலாகப் பயனடைந்த இரு முற்போக்கு விவசாயிகளின் அனுபவ உரை, அவ்வமயம் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.


அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க
பயிர் நாசக் கிருமிகளினின்றும்
பயிர்களைக் காப்பாற்ற
பூச்சி மருந்து தெளிக்கவும், தூவவும்,
ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)
தூவு கருவிகளும் (Dusters)
மிகச் சிறந்த சாதனங்கள்

தயாரிப்பவர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்), லிமிடெட்

மலாட், பம்பாய் 64 N. B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி, பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் :
தொலைபேசி எண் 75071
75, கலாசிபாளையம்,
நியூ எக்ஸ்டென்ஷன்,
தபால் பெட்டி எண் 539,
பெங்களூர்-2,

கிளை அலுவலகம் :
தொலைபேசி எண் 81227
20, Y.M.C.A. கட்டிடம்,
வெஸ்ட் காட் ரோடு,
தபால் பெட்டி எண் 677,
இராயப்பேட்டை, சென்னை-14.


# வேளாண்மைத் துறையில் புரட்சிகரமான வெற்றி




"நஜன்"

["வெற்றி மாளிகையின் வாயிலிலே" என்ற தலைப்பில், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டுரைத் தொடரில், இரண்டாவது கட்டுரை இது. முதல் கட்டுரை "தாகத்திற்கு தண்ணீர்" என்ற தலைப்பில், '68 ஆகஸ்ட் இதழில் இடம் பெற்றது. இரண்டாவது கட்டுரையில், கட்டுரை ஆசிரியர் திரு "நஜன்" அவர்கள், செங்கை மாவட்டத்தில், உணவு உற்பத்தித் துறையில் விவசாயப் பெருமக்கள் காட்டும் ஆர்வத்தையும், உழைப்புத்திறனையும் எடுத்துக்கூறி, பொதுவாக, தமிழகத்தில் "விவசாயத்துறையில் மலர்ந்துள்ள புரட்சி"யினையும் கோடிட்டுக் காட்டுகிறர்—ஆசிரியர் ]

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

செங்கற்பட்டு மாவட்டம், உணவு உற்பத்தியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்பதை, 'பச்சைப்பசேல்' என்றுள்ள வயல்களே சொல்லாமல் சொல்கின்றன.

தீவிர விவசாயத் திட்டம் என்பது ஓர் அதிவிரைவுத் திட்டம். இதனால் நெல், சோளம், ராகி, பருத்தி, நிலக்கடலை ஆகிய பயிர்களில, நவீன சாகுபடி மூலம், அமோக விளைச்சலை ஏற்படுத்துவதே நோக்கமாகும். இத்திட்டம், செங்கற்பட்டு, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 133 வட்டாரங்களில் 1965 ஏப்ரல் 1-ந்தேதி முதல் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

### தீவிர விவசாயத் திட்டத்தின் நோக்கம்

இத்திட்டம் முதன் முதலாக தஞ்சை மாவட்டத்தில் கொண்டுவரப்பட்டது. விவசாய உற்பத்திக்குத் தேவையான உரம், விதை, கருவிகள் மற்ற உபகரணங்கள், உரிய காலத்தில், விவசாயிகளுக்குச் சிரமமின்றி ஒழுங்காகக் கிடைக்கச் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்குவது தான், இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

"மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானைக் கட்டிப் போரடிக்கும்" அளவுக்கு நமது விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்பதே நம் இலட்சியம். இதை மனத்தில் கொண்டே, பல புதிய திட்டங்கள் இப்போது செயலாற்றப்படுகின்றன.

அவையாவன:

1. விளைச்சல் அதிமாகத் தரும் விதைகளை உபயோகிப்பது.
2. ஒருபோக நிலங்களில் இருபோக விளைச்சலை ஏற்படுத்துவது.
3. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவது.

முதலில் கூறப்பட்ட விளைச்சலைப் பெருக்கும் திட்டத்தில் செங்கற்பட்டு மாவட்டம் எப்படி மும்முரமாக முனைந்திருக்கிறது எனபதை அண்மையில் நேரில் காணமுடிந்தது. இம்மாவட்டத்தில், உற்பத்தியைப் பெருக்க உதவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நெல் வகைகள் விதைகளாக வழங்கப்பட்டுள்ளன. TKM 6 (திரூர் குப்பம் ஆராய்ச்சி சாலையில் உருவாக்கப்பட்ட விதை) ADT 27 (ஆடுதுறை ஆராய்ச்சி சாலையில் உருவாக்கியவை) I. R. 8 போன்ற சிறந்த ரக நெல் விதைகள் உபயோகிக்கப்பட்டு, நெல் விளைச்சல் பன்மடங்கு பெருக வழி ஏற்பட்டிருக்கிறது.

இந்த அதிக விளைச்சல் உயர் நெல் வகைகளில், IR 8 ரகம் மிகச் சிறந்தது. 120 நாட்கள் வயதுள்ள இப்புதிய நெல்லைச் சாகுபடி செய்ததில், நிகர லாபம் ரூ. 1,117.25 கிடைத்துள்ளதாம்.

அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில் கோஷ்மோகல்வாடி என்ற ஊரில் திருமதி அஞ்சலினு ராயப்பா அவர்களுடைய பண்ணையில், இந்த உயர் ரக நெல்லை நவரைப் பருவத்தில் பயிர் செய்யப்பட்டது. இதைப் போன்ற இதர ரகங்களான டைய்சுங் நேடிவ் 1, டெய்னன்

3 நெல் வகைகளும் பயிர் செய்யப்பட்டு, அவைகளின் தன்மைகளும் பரிசோதிக்கப்பட்டன. இந்த இரண்டு வகைகளுக்கும் ஏற்படும் கொடிய "பிளைட்" (Blight) என்ற நோய் IR 8 நெல்பயிரைப் பாதிப்பதில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கதிர் அடிக்கும்போது தாளில் இருந்து நெல் மணிகள் IR 8 நெல் பயிரிலிருந்து பிரிவது போல மற்ற இரு ரகங்களிலிருந்து பிரிவதில்லை. IR 8 இவ்விரண்டு வகைகளையும் விட அதிக மகசூலைக் கொடுத்துள்ளது. இந்த IR 8 ரக நெல், "டக்கான் மைஸ்" எனப்படும் சோளம், இவ்விரண்டை மிக அதிகமாகப் பயிரிட்டுள்ளது, திருவள்ளூர், திருத்தணி வட்டாரங்கள் தாம்.

**விவசாயம் செய்யும் வழக்கறிஞர்!**

திருவள்ளூருக்கருகில் விஷ்ணுவாக்கம் என்ற கிராமத்தில், பெரும் நிலச்சுவான்தாரக விளங்கும் திரு ஜி. ஆர். ராதாகிருஷ்ணன் IR 8, டெக்கான் சோளம் இவைகளைப் பெரும் அளவில் பயிரிட்டு மாபெரும் அளவில் வெற்றியை அடைந்திருக்கிறார்.

இவர் வழக்கறிஞர் தொழில் நடத்தி வருபவர். இவர் குடும்பம் பரம்பரையாக விவசாயத் தொழிலையே நடத்தி வருகிறது. இவருக்கு நீதி மன்றங்களில் ஆஜராவதை விட, வயல் வெளிகளில் பயிரிட்டு அதன் பலன் காணுவதிலே ஒரு தனி மகிழ்ச்சி! இவருக்கு மூன்று சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இவருக்கு உதவியாக விவசாயத்தையே கவனித்துக்கொள்கிறார்கள்.

இவர் தெரிவித்த கருத்தாவது: "IR 8, வழக்கமாக விளையும் நெல் தரத்தைவிட, இரண்டு பங்கும் ஏன் மூன்று பங்குகூட சில இடங்களில் கிடைக்கிறது. ஆனால் ADT 27 உடன் இதை ஒப்பிட்டால், தரத்தில் ADT 27 சிறந்து விளங்குகிறது என்றும், அளவில் IR 8 தான் சிறந்து விளங்குகிறது என்றும் சொல்லலாம். IR 8 ஓர் அளவுக்கு மோட்டாரகம் என்று சொல்லலாம். என்றாலும் இட்லி, தோசை செய்ய மிகப் பிரமாதமாக இருக்கிறதென்றும் சொல்லலாம். இந்த IR 8 மாநிலம் முழுவதும் பயிரிடுவதை மேற்கொண்டு விட்டால், படி அரிசித் திட்டத்தை மாநிலமெங்கும் போட்டுவிட்டு மீத முள்ளதை பற்றாக்குறை ராஜ்யங்களுக்கும் நாம்கொடுத்து உதவும் நிலைமை ஏற்பட முடியும்".

இவர் டெக்கான் சோளம் ஏராளமான ஏக்கரில் பயிரிட்டிருக்கிறார். இதற்கு "மார்க்கெட்" தேடியாகவேண்டுமே என்று இவர் கவலைப்படுகிறார். இதை இயந்திரத்தில்உடைத்தால் ரவைபோல நன்றாக இருக்கிறதாம். திருத்தணி வட்டாரத்திலும் சோளம் நன்கு பயிராகியுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் சொர்ணவாரி பட்டத்திற்கு TKM 3, TKM 6, ஒட்டுக் கிச்சிலி பயிரிடப்படுகின்றன. சென்ற ஆண்டு முதல் ADT 27-ம் இந்த ஆண்டு முதல் IR 8-ம் சாகுபடி செய்ய ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

**ஆர்வத்தைக் கவர்ந்த ஆடுதுறை—27**

அதிக உரத்தை உட்கொண்டு விளைவிற்குமுன்னே சாயாமல் இருந்து, சிறந்த விளைச்சலைத் தரக்கூடிய ஆடுதுறை 27, விவசாயிகளின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. சென்ற ஆண்டில், சொர்ணவாரிப்பட்டத்தில், திருத்தணி வட்டாரத்தில் திரு சுந்தரவரத நாயுடு, ஏக்கருக்கு (ADT 27) 2,445 கிலோ விளைவு கண்டுள்ளார். திருவள்ளூர் திரு இ. ஆர். ராதாகிருஷ்ணன் ஏக்கருக்கு 2,100 கிலோ விளைவு கண்டுள்ளார்.

ADT 27-ஐ குடத்துப்பூச்சி பெரும் அளவு பாதிக்கிறதாம். தாய்ச்சுங் நேட்டிவ் 1 என்ற நெல்லுக்கு 'பாக்டீரியல் பிளைட்' என்ற செவ்வட்டை நோய் பரவுகிறதாம். விதைகளாக இருக்கும்போதே பாதரசக் கலவை மருந்தால் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்து விதைக்கவேண்டுமாம். நல்ல முறையில் உரிய அளவில் உரமிட்டு, காலத்தில் களை மற்றும் பூண்டு களைக் களைந்து பூச்சி நோயைப் போக்கி சாகுபடியை மேற்கொண்டால், விளைவு பெருகும். இதற்கான எல்லா வித யோசனைகளையும் விவசாயிகளுக்குத் தெரிவிக்க, விவசாய வளர்ச்சி அலுவலர் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்கின்றனர்.

**ரிசர்வ் வங்கி கவர்னரின் கருத்து**

இப்போது விவசாயிகளின் தேவைக்கு சகல வித உதவிகளைத் தர அரசாங்கம் முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். பணம், கடன் உதவி, பொறுக்கு விதைகள், பாசன உதவி, இயந்திரக் கருவிகளை வாடகைக்குத்தரும் உதவி, உரம் வழங்கல், தக்கபடி ஆலோசனைகள், இவ்வளவையும் தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த சமயத்தில் **ரிசர்வ் பாங்கி கவர்னர் திரு எல். கே. ஜா** கூறியதைக் குறிப்பிடுவதும் சாலப் பொருந்தும். "பருவ மழை போதிய அளவுக்கு இல்லாமலிருந்தும், சென்ற ஆண்டு விளைச்சல் நன்றாக இருந்ததிற்குக் காரணம், விவசாயத் துறையில் கையாளப்படும் முறைகளே".

## கிராம நலம்

**சந்தா விவரம் :**

ஆண்டு சந்தா 2 ரூபாய்.

ஓர் ஆண்டுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :**


மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.

**தனி இதழ் விற்பனைக்குக் கிடையாது.**

**சந்தா செலுத்துவோர் கவனிக்க:**

சந்தாத் தொகையை மேலே கொடுத்துள்ள முகவரிக்குதான் அனுப்ப வேண்டும். வேறு எந்த முகவரிக்காவது அனுப்பினால், பெற்றுக் கொள்ள இயலாது.







1. நாடு பெயர்ந்து வருவோரின் மறுவாழ்வளிப்புக்குழுக் கூட்டம், சென்னை ராஜாஜி மண்டபத்தில், 3-12-1968 அன்று நடைபெற்ற பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் உரையாற்றினர். குழுவின் தலைவர் திரு மனுபாய்ஷாவும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

2. அண்மையில் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்த மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், போப் பாண்டவரை, வாடிகன் நகரில், 18-11-1968 அன்று சந்தித்து, வாழ்த்துக்கள் பெற்றார்.






1. இந்திய நாட்டிலுள்ள இங்கிலாந்து தூதுவர் திரு மோரிஸ் ஜேம்ஸ் (Morris James) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, அவரது இல்லத்தில், 13-11-1968 அன்று, சந்தித்தார்.

2. தஞ்சை மாவட்டம் அறந்தாங்கியில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டினை, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 28-11-1968 அன்று திறந்து வைத்து, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு இராசன் அவர்களுடன், பொது மக்கள் நன்கொடையாக அளித்த பொருள்களைப் பார்வையிடுகிறார்

3. தமிழகத்தில் கிராம வளர்ச்சிப் பயிற்சிக்கூடங்கள் ஆற்றும் பணிகளைப் பார்வையிட, மூன்று வாரம் சுற்றுப் பயணம் செய்யும் நோக்கத்துடன் வந்த அமெரிக்க இளைஞர் தூதுக் குழுவினர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்களை, 12-11-1968 அன்று, கோட்டையில் சந்தித்தனர்.





1. சென்னை இராசரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் 7-12-1968-ல் நடைபெற்ற தமிழகக் காவல் துறையினரின் ஆண்டு விழா விளையாட்டுப் போட்டியில், பரிசு பெற்றோருக்கு, தமிழக முதல்வரின் துணைவியார் திருமதி இராணி அம்மையார் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு முதலமைச்சர் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

2. தென் ஆர்க்காடு மாவட்டம். விழுப்புரம் அருகில் உள்ள சிந்தாமணி கிராமத்தில், சீரணியினர் அமைக்க இருக்கும் உயர் துவக்கப் பள்ளிக் கட்டிடத்திற்கு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார் (23-11-1968).

3. சென்னைக்கு வருகை தந்திருந்த இங்கிலாந்து நாட்டின் வெளி உறவுச் செயலாளர் திரு மைக்கேல் ஸ்டிவர்ட் (Right Honourable Michael Steewart) அவர்களை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில், 8-12-68 அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள வழி அனுப்பி வைத்தார்.





# கோவையில் அமெரிக்க சமாதானத் தொண்டர்கள் கருத்தரங்கு



படம் 1

சென்னைக்கு வருகை தந்த உலக வங்கித் தலைவர் திரு ராபர்ட் எஸ். மக்னமாரா (Robert S McNamara) கிண்டி ராஜபவனில் 22-11-1968 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து உரையாடினார். மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்களும் உடனிருந்தார்.

தமிழகத்திற்கு வருகை தந்த உலக வங்கித் தலைவருடன்...




2

படங்கள் 2 & 3:

அமெரிக்க அமைதித் தொண்டர் (American Peace Corps Volunteers) கருத்தரங்கு, கோவையில், 2-12-1968-ல் நடைபெற்றது.

அமெரிக்க அமைதித் தொண்டர் (AMERICAN PEACE CORPS VOLUNTEERS) கருத்தரங்கு - (கோவையில்)



3

மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும், கிராம வளர்ச்சி - உள்ளாட்சித் துறைச் செயலாளர் திரு டி ஏ எஸ். பாலகிருஷ்ணன் ஐ.ஏ எஸ்., அவர்களும் அக்கருத்தரங்கில் கலந்து கொண்டு, உரையாற்றினார்கள்.

அமெரிக்க சமாதானத் தொண்டர்கள் (American Peace Corps Volunteers) கருத்தரங்கு கோயம்புத்தூர் நகரில், 2-12-1968-ல் நடைபெற்றது. மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் **திரு ஏ. கோவிந்தசாமி** அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு **மா. முத்துசாமி** அவர்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் செயலாளர் **திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன்,** ஐ.ஏ.எஸ். அவர்கள் இக்கருத்தரங்கு சிறப்புற நடைபெற பெரிதும் உறுதுணையாக இருந்தார். கருத்தரங்கிற்கு முதல் நாளே (அதாவது 1-12-1968-ல்) கருத்தரங்கில் ஆராய வேண்டிய செய்திகள் பற்றி, நெடுநேரம் விவாதித்து, தமது அரிய ஆலோசனைகளை எடுத்துக்கூறி, கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். கருத்தரங்கின் இறுதி நிகழ்ச்சியாக அவர் அரியதொரு சொற்பொழிவாற்றி கருத்தரங்கை, சிறப்புடன் முடித்து வைத்தார்.

பொதுப் பணித்துறைச் செயலாளர் **திரு ஆர். திருமலை,** ஐ.ஏ.எஸ். அவர்களின் கருத்துரை அன்று பிற்பகல் நிகழ்ச்சிகளில் சிறப்பிடம் பெற்றது. "நீர்ப் பாசன நிர்வாக முறை" பற்றி, அவர் விளக்கமாக எடுத்துரைத்ததோடு, தமிழ் நாட்டிற்கே உரித்தான பண்டைய அமைப்பு முறை பற்றியும், இன்றுள்ள பொறியியல் வல்லுநர்கள் உருவாக்கித் தந்துள்ள திட்டங்கள் பற்றியும், தமது கருத்தாழமிக்க உரையில் அவர் எடுத்து விளக்கினார். அது மட்டுமல்லாமல், அமெரிக்க அமைதிக் குழுவின் தொண்டர்கள் எழுப்பிய நுட்பமான கேள்விகளுக்கெல்லாம் தகுந்தவாறு விளக்கங்கள் அளித்தார்.

கருத்தரங்கின்போது, கடந்த ஓராண்டுக் காலத்தில், தமிழகத்தில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், கருத்துக்களையும் அமெரிக்க சமாதானக் குழுவினர் சுவையுடன் எடுத்துக் கூறினர்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் **திரு ஏ. கோவிந்தசாமி** பேசியபோது,

"நாட்டுக்கு உணவளிக்கும் விவசாயப் பெருமக்களில் பெரும்பாலோர் இன்றும் கடன்பெறும் நிலையிலேயே இருக்கின்றனர். இனி வியாபார நோக்கோடு விவசாயத்தில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கணக்கிட வேண்டும்"


என்று குறிப்பிட்டார்.

சமாதானக் குழுவினர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் **திரு மா. முத்துசாமி** அவர்கள் வழங்கிய கருத்துரை, சிறப்பான அம்சமாக இருந்தது. அவர் கூறினார்:

### ஒருங்கிணைந்த அமைப்பு முறை

"அமெரிக்க சமாதானக் குழுவினரின் சேவை பாராட்டுதற்குரியது. கடந்த ஓராண்டு காலமாக நமது நலனுக்கென நம்மிடையே அவர்கள் நமது கிராமங்களிலே பணியாற்றி இருக்கிறார்கள். வளர்ச்சிக்கான பற்பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுள், குறிப்பாக கிராம நல ஊழியர்களை, வேளாண்மை வளர்ச்சிக்கெனவே முழுவதுமாக ஈடுபடுத்த வேண்டுமென்றும், வேளாண்மைக் கல்லூரியுடன் இணைக்கலாமெனவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

[33-ம் பக்கம் பார்க்க.]





# ஆக்கப் பணிபுரியும் ஊராட்சி ஒன்றியங்கள்

மக்களாட்சியின் நிலைக்களன்களாகத் திகழும் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் நாட்டின் நல்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டு, சீரிய பணியாற்றி வருகின்றன. அவ்வரிசையில் நல்ல பணியாற்றி, நெமிலி ஊராட்சி ஒன்றியம் (வட ஆர்க்காடு மாவட்டம்) சிறப்பான புகழை ஈட்டியுள்ளது.

## நெமிலி ஊராட்சி ஒன்றியம்

வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகாவில், பனப்பாக்கம், நெமிலி என்ற இரு பிர்க்காக்களை இணைத்து, நெமிலியைத் தலைமையிடமாகக் கொண்டு, நெமிலி ஊராட்சி ஒன்றியம் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி உருவாக்கப்பட்டது. இந்த ஒன்றியத்தில் 61 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 53 ஊராட்சிகளும் 1 பேரூராட்சியும் அடங்கியுள்ளன. இதன் பரப்பளவு 110·74 சதுர மைல்கள் (70,876 ஏக்கர்). மக்கள் தொகை 1961-ம் ஆண்டு புள்ளி விவரக் கணக்குப்படி 82,118 ஆகும்.

இவ்வூராட்சி ஒன்றியத்தினால் 41·80 கிலோ மீட்டர் நீளமுள்ள பாதைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஒன்றியத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்பு சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### குடிதண்ணீர் வசதி

எல்லாக் கிராமங்களிலும் குடிதண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. 10 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. 33 கிராமங்களில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும் அழுத்த நீர்த் தேக்கத் தொட்டிகளும் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. இந்தக் குழாய் நீர் திட்டம், ஒன்றியத்தில் 78 சத விகிதம் கிராமங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

### கல்வி வசதி

இவ்வூராட்சி ஒன்றியத்தில் கட்டாயக் கல்வி அமுலாக்கப்பட்டுள்ளது. 7 உயர்நிலைப் பள்ளிகளும் 16 உயர் துவக்கப் பள்ளிகளும் 54 துவக்கப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் 6 அரிசன நலப் பள்ளிகளும் 4 தனியார் உதவி பெரும் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

இவ்வூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 70 பள்ளிகளில் 52 பள்ளிகளுக்கு நிலையான சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. மீதமுள்ள 18 பள்ளிகளில் 15 பள்ளிக் கட்டிடங்களுக்கு நிலையான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்ட இரண்டு புதிய பள்ளிகளுக்கும், பனப்பாக்கம் பள்ளிக்கும் பள்ளிக்கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றும் 7 பள்ளிகளுக்கு மற்றுமொரு அதிகப்படியான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

### நீர்ப்பாசன வசதி

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 20 ஏரிகள் உள்ளன. 20 ஏரிகளும் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

64 மதிய உணவு மையங்கள் இவ்வூராட்சி ஒன்றியத்தில் இயங்கி வருகின்றன. 3,881 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 8 தாய்-சேய் நல விடுதிகள் இயங்கி வருகின்றன. பள்ளூர் கிராமத்தில் கிராமிய மருந்தகம் ஒன்றும் பனப்பாக்கம் கிராமத்தில் ஒன்றிய மருந்தகம் ஒன்றும் இயங்குகின்றன.

இத்துடன் புன்னை கிராமத்தில் ஆரம்ப சுகாதாரம் நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது.

**விவசாயம்**

உணவு உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கும் முயற்சியில், நெமிலி ஊராட்சி ஒன்றியம் பெரும் பங்கேற்றுள்ளது. ஏறக்குறைய 40 ஆயிரம் எக்கர் நிலப் பரப்புள்ள இவ்வட்டாரத்தில் 50 சத விகிதத்திற்கும் மேற்கொண்டு பரப்பு நஞ்சை நிலமாக உள்ளது.

வட்டாரத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆங்காங்கே ஏரிகள் உள்ளனவாயினும், இங்கே விவசாயம் பம்பு செட்டுகளையே நம்பி நடைபெறுகின்றது. வட்டாரத்தின் கிழக்குப் பகுதிகளில், தண்ணீர் மட்டும் அருகாமையில் இருப்பதால், கிணறு கோடைகாலங்களில் வற்றுவதில்லை.

**விவசாயக் கிடங்கு**

இவ்வூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாயக் கிடங்கு இதுநாள் வரை தனியார்க் கட்டிடத்தில் இயங்கி வந்தது. தற்போது இதற்கென தனியாகக் கட்டிடம் ஒன்று அரசாங்கத்தால் கட்டப்பட்டு, ஆகஸ்டு 68 முதல் இப்புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த கோட்ட அளவில், இந்த விவசாய கிடங்கு மிகவும் பெரியதாக கருதப்படுகிறது.

ஆடுதுறை-27 நெல் வகை இந்த வட்டாரத்தில் முதல் முதலாக 1966 ஜூன் மாதத்தில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. இந்த வகை நெற்பயிரை பூச்சிகள் அதிக அளவில் தாக்குவதை கண்டு விவசாயிகள் இதைப் பயிரிட முதலில் பின்வாங்கினார்கள். ஆனால் சிறிது காலத்திற்குள் இதனுடைய அமோக விளைச்சலைக் கண்டு எல்லா விவசாயிகளும் இதனை விளைவித்தனர். இவ்வட்டாரத்தில் இந்த நெல் மிகவும் விளைச்சலைக் கொடுத்தது. அதிக மகசூல் எக்கருக்கு 3,660 கிலோ கிடைத்தது. 1966-67-ம் ஆண்டு இந்த வகை நெல்லை பயிரிட 14 விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் தனியார்த் துறை மூலமாகவும் விவசாயிகளுக்கு தேவையான கலப்பு உரங்களும் ரசாயன உரங்களும் விநியோகிக்கப்பட்டன.

**ஐ.ஆர்.—8**

1967-68-ம் ஆண்டில் அமோக விளைச்சல் நெல்களான ஐ.ஆர்.—8, எச்- பி. 1 கம்பு ஆகியவைகளும் விவசாயிகளிடையே பரப்பப்பட்டுள்ளது. வீரிய கம்பு பயிர் செய்த விவசாயிகள் நல்ல பலன் பெற்றனர். ஐ. ஆர். 8 நெல் வகையும் ஆடுதுறை-27 நெல்லைவிட அதிகமான பலன் கொடுத்ததால், விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு பெற்றது.

**பயிர்ப் பாதுகாப்பு**

இந்த வட்டாரத்தில் நெல் அதிக அளவில் பயிரிடப்படுவதாலும், இரண்டு போகம், மூன்று போகம் தொடர்ந்து பயிரடப்படுவதாலும் பயிர்ப் பாதுகாப்பு சாதனங்கள் மிகவும் இன்றியமையாத் தேவைகளாக உள்ளன. இதை முன்னிட்டு இவ்வட்டாரத்தைச் சேர்ந்த எல்லா கிராம நல ஊழியர்களுக்கும் ஒவ்வொரு விசைத் தெளிப்பான் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. இவை விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். இவை தவிர அவ்வப்போது ஏற்படும் அவசரக் காரியங்களுக்கு தலைமை அலுவலகத்தில் 4 விசை தெளிப்பான்கள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. பூச்சித் தாக்குதலை ஒரே நேரத்தில் தடுக்க சென்ற ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சுமார் 13 ஆயிரம் எக்கர் பரப்பில் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது.

**தழை உரம்**

இவ்வட்டாரத்திற்கு சொந்தமாக இயந்திரக் கலப்பை ஒன்று உள்ளது. விவசாயிகளின் நிலங்களில் உழுவதற்கும் மற்றும் உரம் முதலியன எடுத்து செல்லவும் இது வாடகைக்கு கொடுக்கப்படுகிறது.

இவ்வட்டாரத்தில் நீலி என்று சொல்லப்படும் அவுரி தழை மிகுந்த அளவில் பயிரிடப்பட்டு விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் விவசாயக் கிடங்கில் இருந்து சுமார் 10 டன் தழை விதைகள் விவசாயத்திற்கு விநியோகம் செய்யப்படுகின்றன. ஜூன், ஜூலை மாதங்களில் இவ்வட்டாரத்தில் எங்கு நோக்கினும் அவுரி செடிகள், தோப்புகள் போல் காணப்படும்.

**விவசாயக் கருவிகள்**

தரமான போரஸ் கலப்பைகள், இரும்பு கலப்பைகள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. 1967-68-ஆம் ஆண்டில் 200 கலப்பைகளும் 30 தழை மிதிக்கும் கருவிகளும் விநியோகிக்கப்பட்டன.

**சமுதாயத் தோப்புகள்**

இவ்வூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 25 ஊராட்சிகளில் தோப்புகள் அமைக்கப் பட்டுள்ளன. முந்திரி, மா, தென்னை வகைகள் பயிராக்கப்பட்டுள்ளன. இதனிடையே நல்ல தழை உர வகைகள், கிளிரிசிடியா செடிகளும் நடப்பட்டுள்ளன. பெரும்பாலான தோப்புகள் நல்ல பலனை கொடுப்பதன மூலம் ஊராட்சிகளுக்கு இதனால் வருமானமும ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கடம்பநல்லூர், ஆட்டுப்பாக்கம், சாயனபுரம், ரெட்டிவலம், சில்லமந்தை, மேலபுலம், ஆகிய ஊராட்சிகளில் தோப்புகள் நல்ல முறையில பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தச்சுத் தொழிற்கூடம் ஒன்று 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டு, 18 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி முதல் உற்பத்தி நிலையமாக்கப்பட்டது. இதுவரை மொத்தம் ரூபாய் 45,668 மதிப்புள்ள மரச்சாமான்கள் செய்யப்பட்டுள்ளன.

**சமூகக் கல்வி**

63 ஊராட்சிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன. வானொலி மன்றங்கள் எல்லா ஊராட்சிகளிலும் இயங்கிவருகின்றன. 67 பள்ளிகளுக்கு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

53 மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. 31 மகளிர் மன்றங்களுக்கு தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. மூன்று தையல் ஆசிரியைகள் மேலே கண்ட மகளிர்மன்றங்களில் தையல் பூ வேலைகள் சற்றும் கொடுக்கின்றனர்.

**கூட்டுறவு**

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 கூட்டுறவு விவசாய வங்கிகளும் 22 கூட்டுறவுக் கடன் சங்கங்களும் இயங்கி வருகின்றன. அரக்கோணம் கூட்டுறவு நில அடமான வங்கியின் மூலமாக புதிய கிணறு வெட்டுவதற்கும் கிணறு ஆழப்படுத்துவதற்கும், மின்சாரப் பம்பு செட்டுகள் அமைப்பதற்கும் கடன் வசதி செய்து தரப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 1967-ம் ஆண்டு காரிப் பருவத்தில் 45 விவசாயிகளுக்கு உயர் ரக பயிர்களுக்கு செய்வதற்கு ரூபாய் 30,863 கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டில் ராபி பருவத்தில் 271 விவசாயிகளுக்கு உயர்ரக பயிர்செய்வதற்கு ரூபாய் 1,34,070 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மூன்று விவசாயக் கூட்டுறவு வங்கியிலும், ஒரு கூட்டுறவு கடன் சங்கத்திலும் விவசாயிகளுக்கு தேவைப்பட்ட உரங்கள் விநியோகப்பட்டுவருகின்றன.

**ஓராண்டுத்திட்டம்**

சிறப்பு வேலைத் திட்டமான ஓராண்டு வேலைத் திட்ட வேலைகள் இந்த ஒன்றியத்தில் சிறப்புற நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவ்வூராட்சி ஒன்றியத்தில் பள்ளூர் கிராமத்தில் 17 எக்கர் பரப்பளவு உள்ள ஒரு விவசாயப் பண்ணை ஓராண்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்க மன்றம் தீர்மானித்ததின் பேரில் தற்போது 7 எக்கரில் மானாவாரி நிலக் கடலையும், 5 எக்கரில் புது ரக துவரையும் திருப்பத்தூர் வகை துவரை 2 எக்கரிலும் மீதமுள்ள 3 எக்கராவில் நீலி விதையும் பயிரிடப்பட்டுள்ளன.

பாசனவசதிக்காக கிணறு ஒன்று வெட்டி பம்பு செட்டு அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கச் சமாதானத் தொண்டர் கருத்தரங்கு—29-ம் பக்கத் தொடர்ச்சி.

கிராம நல ஊழியர்களின் பணி, விவசாயப் பெருமக்களின் வளர்ச்சிக்கான மற்றவைகளையும் உள்ளடக்கிக் கொண்டு இருக்கிறது.

முதலில், குடும்பக் கட்டுப்பாடு தேவை. உணவு உற்பத்தி மேலும் பெருகும்போது, மக்கள் தொகை ஓர் எல்லைக்குள் இருந்தால்தான், தேவை குறைந்து, நாட்டின் பொது வளம் பெருகும். மக்கள் நிறைவோடு வாழமுடியும். இது, வேளாண்மைக்குப் பெரிதும் உதவி செய்வதாகும். நோயற்ற வாழ்வுக்கு, கிராம மக்களின் சுகாதாரமும் காப்பற்றப்பட வேண்டும். ஆகவேதான், கிராம நல ஊழியர்கள், கிராம மக்களின் வளர்ச்சிக்கான உதவிகள் அனைத்தையும் செய்வதற்கெனவே பயிற்றுவிக்கப்பட்டவர்கள். ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர், எல்லாப்பாடங்களையும் படித்துத தேர்ந்தவராக இருக்கவேண்டுமென்பதில்லை. எல்லா ஆசிரியர்களையும் ஒருங்கிணைத்து, தக்கவகையில் நிர்வாகம் நடத்தும் பொறுப்பே அவருடையது என்பதை, யாரும் மறக்கக்கூடாது. அதுபோன்றே, கிராம நல ஊழியர்கள், கிராம வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளையும், விவசாயம் உள்பட, செய்யக் கடமைப்பட்டவர்கள். அவர்களை விவசாய நிபுணர்களாக்கினால் மட்டும், கிராம வளர்ச்சி வேலைகள் செம்மையாக நடைபெற முடியாது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே, அரசின் பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்த உருவமாக, ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுச் செயலாற்றி வருகின்றன. வேளாண்மை வளர்ச்சிக்கெனவே வகுக்கப் பெற்ற ஓராண்டுக் திட்டமொன்றிலும், நற்பயன் கண்டிருக்கிறோம்.

மேலை நாடுகளின் பொருளாதார நிலை வேறு; இங்குள்ள நிலை வேறு. இதை மனத்தில் கொண்டு, அமெரிக்க சமாதானக் குழுவின் தொண்டர்கள் கூறும் கருத்துக்களை, தமிழக அரசாங்கம் கவனத்தோடு ஆராய்ந்து, ஆவன செய்யும்.

குழுவினரின் முயற்சியனைத்தும் சிறப்பானவை. மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது நன்றி கலந்த வணக்கம்" என்று முடித்தார் அவர்.

மாண்புமிகு விவசாய அமைச்சர் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு அமெரிக்க அமைதிக் குழுவின் தொண்டர்கள், அனுபவத்தோடு கூடிய பதில்களைக் கூறினர். குறிப்பாக, விமானம மூலமாக பயிர்ப்பாதுகாப்பு மருந்துகளைத் தெளித்தல் பற்றி தமது கருத்துக்களை அவர்கள் எடுத்துரைத்தனர்.

**அனுபவத்தின் அடிப்படையில்**

பின்னர், சமாதானக் குழுவைச் சார்ந்த தொண்டர் ஒருவர், தமிழகத்தில் தனது ஓராண்டுக்கால அனுபவத்தைக் கூறினார். தமிழகத்தில் பண்ணை விவசாய முறைகள் பற்றிக் கூறியதோடு, விருந்தோம்பலில் தமிழகத்தின் தனிச் சிறப்பையும், நகைச்சுவையோடு குறிப்பிட்டார்.

கிராம வளர்ச்சித்துறையின் துணைச் செயலாளர், திரு கே. ஏ. நம்பியார், ஐ. ஏ. எஸ்., கிராம வளர்ச்சி இயக்குநர் திரு ஜி. திருமால், எம். ஏ., ஐ. ஏ. எஸ்., விவசாயத்துறை அதிகாரிகள் முதலானோர், இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர்.

சமாதானக் குழுவைச் சார்ந்த தொண்டர் ஒருவர் நன்றி கூற, மாநாடு நிறைவெய்தியது.

விவசாயிகளுக்கு, வேளாண்மை, ஆண்டு முழுதும் வேலை வாய்ப்பளிக்கும்
முழுநேரத் தொழிலும் அல்ல ;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர்–கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் நிறுவனங்களில்
உற்பத்தி செய்யப் பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை
* மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை,
வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்–கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்–கிராமத் தொழில் அங்காடியிலும்

விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர். தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.




# மாவட்டப் பரிசு பெற்ற கிராமங்கள்

## வண்டியூர்
### மதுரை கிழக்கு வட்டாரம்

**மதுரை** மாநகரின் கிழக்கெல்லையைத்தொட்டும், வைகை வடகரையைப்பற்றியும் நிற்கும் சிற்றூர் வண்டியூர். இவ்வூர், மூதூர் பரம்பரையைச் சார்ந்தும் உள்ளது.

சித்திரைத் திருவிழாவின்போது, அழகர் ஒரு நாள் இரவு வண்டியூரையடுத்து வைகையில் தங்குவது என்ற முறைபாடும் உள்ளது. அழகர் திருநாளைக் காணவரும் மக்கள் தங்கி களைப்பாறுவதற்கு எண்ணற்ற மண்டபங்கள் உள்ளன. அழகர் திருநாளைக்காண மதுரையடுத்து ஊர் முழுவதுமிருந்தும் வரும் கூட்டப்பெருக்கைத் தாங்கிவரும் எண்ணற்ற வண்டிகளே குழுமி நிற்கும் காட்சிப் பேராய் இவ்வூருக்கு வண்டியூர் ஆயிற்று அன்றோ ?

**விவசாயமே அச்சாணி**

வண்டியூரின் மக்கள் தொகை 3682. இவ்வூரில் சுமார் 730 குடும்பங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ அனைவருமே விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இங்கு வாழ்வோர், வந்து போவோர் அனைவருமே விவசாயப் பெருங்குடி மக்களேயாம். எனவே பேச்செல்லாம் விவசாயம்; செய்வதெல்லாம் விவசாயமே.

நவீன முறைகளில் நாட்டமுற்றோராய், விதைபோடும் நாள் தொட்டு, அறுவடை ஈறாக இயற்கைச் செருக்கோடு செயற்கை விந்தைகளைச் செருகி விளைச்சலிலே பெருஞ் சாதனைகளைப் புரிய முயன்றுவருவோர், வண்டியூரார்.

இளைஞர்களின் பங்கு விவசாயத்திற்கு எத்துணை சிறந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக விவசாய இளைஞர் சங்கம் ஒன்று இயங்குகின்றது. அன்னோர் திருந்திய முறை விவசாயக் கருவிகளைப் பெற்று எல்லா விவசாயிகளுக்கும் வழங்குவதில் பெருமிதம் அடைகின்றனர்.

புறப்பகுதிகளில் சிறப்பான முன்னேற்றங்களைக் காணும் பொருட்டும், சுற்றுலாக்களை ஏற்படுத்திக் கொண்டு இளைஞர் விவசாயிகள் தத்தம் இயற்றிறமைகளை மேலும் பக்குவப்படுத்திக் கொள்கின்றனர்.

வண்டியூர் கிராமம் விவசாயத்தில் சிறப்புப் பெறக் காரணமானவை :

1. புதிய கிணறுகள் தோண்டப்பட்டமையால் 23 ஏக்கர் அதிகப்படியாக பயிர் செய் நிலமாக மாற்றப் பட்டுள்ளது. ஆகவே அதிக விளைச்சல் பெறத் தக்கவை சுமார் 30 டன்னாகியது.

2. மாதிரிப் பண்ணைகள் 11 அமைக்கப்பெற்று, அவற்றால் அதிக பலன் ஈட்ட முடிந்தது. சுமார் 500 விவசாயிகள் பயன்பெற்றனர்.

3. பசுந்தாள் உர உற்பத்தி சுமார் 400 டன்னும், கலப்பு உரம் 1300 டன்னும் கிட்டியது.

4. பயிர்ப்பாதுகாப்பு முறைகளில் 320 ஏக்கர் நிலத்திலே உரிய மருந்துகள், உரிய காலத்தில் அடிக்கப் பெற்றுள்ளன.

திருச்சி வானொலி நிலையத்தினரால் ஒலி பரப்பப்படும் "கிராம நிகழ்ச்சிகளை", கிராம வானொலி மன்றத்தினர் கேட்டு பயன் அடைந்ததுடன், ஏனைய விவசாயிகளும் நல்ல முறைகளைக் கையாண்டுப்பயனடைந்துள்ளனர்.

**நல்வாழ்வுப் பணிகள்**

இவ்வூரில் உயர் துவக்கப்பள்ளி ஒன்றும் உள்ளது. அப்பள்ளியில் 438 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

வைகை ஆற்றங்கரையின் ஓரத்தில் எழிலாக அமைந்திருக்கும் வண்டியூரில், ரூ. 10,000-ல் மேல் நிலை நீர் தொட்டி ஒன்று கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. இவ் வேலை முடிவடைந்தவுடன், கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்னை தீரும்.

மேலும் ஊராட்சி அலுவலகத்திற்கென ரூ. 10,000-ல் கட்டிட வேலை தொடங்கப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

**வளத்திற்கோர் எடுத்துக்காட்டு—வண்டியூர் !**

# மங்கலம்

### " மங்கலம் "—வட ஆர்க்காடு மாவட்டம்

**வ**ட ஆர்க்காடு மாவட்டத்தில், 1965-66-ஆம் ஆண்டில், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த **மங்கலம்** கிராமம், சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசினரால் நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்ட இக் கிராம மக்கள், 682·53 ஏக்கரில் நன் செய் பயிரும், 3,795.20 ஏக்கரில் புன்செய் பயிரும் சாகுபடி செய்கின்றனர். அரசினரால் பரிந்துரை செய்யப்படும் திருந்திய ரக நெல், நவதானிய வித்துக்கள் ஆகிய வற்றைப் பயன்படுத்தி, புதிய விவசாய முறைகளை இக் கிராம மக்கள் பின்பற்றுகின்றனர். ஊராட்சி மூல மாக, கலவை எரு உற்பத்தி, பசுந்தழை உர உற்பத்தி, ஆகியவையும் கணிசமான அளவில் செய்யப்பட்டுள்ளன.

தரமான கால்நடைகளின் உற்பத்திக்காக மூன்று உயர்தரப் பொலிக் காளைகள் வழங்கி, அதன் மூலம் இக்கிராமத்தில் 587 பசுக்களுக்கு செயற்கை முறையில் கருத்தரிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உயர் ரக கோழி இன அபிவிருத்தியும் நடந்துள்ளது.

இங்குள்ள பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 323 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டுறவு நாணய கிடங்கு ஒன்று ரூ. 13,500 செலவில் கட்டப்பட்டுள்ளது.

இங்கு இயங்கி வரும் தச்சுப்பட்டறையில் 7 நபர்கள் பணியாற்றுகின்றனர். இதுவரை ரூ. 17,795 பெறுமான முள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனையும் உள்ளன. இக் கிராமம் சுகாதார வசதிகளிலும் சிறந்து விளங்குகிறது. இங்குள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் குடும்ப நலத் திட்டத்திலும் குறிப்பிடத்தக்க சாதனை களைச் செய்துள்ளது. குடிநீர்த் திட்டத்தில்—9 குடிநீர் கிணறுகளும், மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி ஒன்றும் உள்ளது. மங்கலம் கிராமம் மாவட்டத்தில் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டது, அக் கிராம மக்களின் ஒற்றுமைக்கும், தளராத ஒன்றுபட்ட உழைப்புக்கும் கிடைத்த வெற்றியாகும்.

# கேத்தி

### கேத்தி பேரூராட்சி—நீலகிரி மாவட்டம்

இங்கு 3628·85 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப் படுகிறது. கடந்த ஆண்டு மட்டும், ரூ. 1,12,291 பேரூராட்சியின் வளர்ச்சிக்கென செலவு செய்யப்பட்டுள் ளது. இங்கு பெரும்பாலும் உருளைக் கிழங்கு 2,300 ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. அடுத்ததாக, தேயிலை விளைவிக்கப்படுகிறது.

பயிர்ப் பாதுகாப்பு முறைகள் தகுந்தவாறு கடைப் பிடிக்கப்பட்டு, உருளைக்கிழங்கு சாகுபடியில் முன்னணியில் நிற்கிறது, கேத்தி.

இப்பகுதியில் அதிக மழையின் காரணமாக, மண் ணரிப்பு ஏற்படாமல் தடுக்க, மண்ணரிப்புப் பாதுகாப்புத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இதன்படி, சுமார் 1,000 ஏக்கர் நிலம் சீர்படுத்தப்பட்டுள்ளது.

இக் கிராமத்தில், ஜெர்ஸி இனக் கலப்பு கால் நடைகள் மக்களால் பராமரிக்கப்படுகின்றன. 1965-ம் ஆண்டில் சுத்தமான ஜெர்ஸி இனப் பொலிக் காளைகளை கொண்டு செயற்கை இன விருத்தி செய்வதற்கு, ஒரு செயற்கை முறை இனவிருத்தி நிலையம், கால்நடைத் துறையின ரால் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல முறையில் பயன்படுத்தப் படுகிறது. இத்துடன், கோழி வளர்ச்சிப் பண்ணையும் இருக்கிறது. இங்கு ரூ. 45,000 செலவில் ஒரு கால் நடை மருந்தகம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பள்ளிகளான 'லவ்டேல் லாரன்ஸ்', 'தூய ஜார்ஜ்' பள்ளிகளும், ஒரு கேத்தி மிஷன் உயர் நிலைப் பள்ளியும் உள்ளன. 11 ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன. ஊராட்சி பங்குத் தொகை, அரசாங்க மான்யம் ஆகியவற்றோடு ரூ 5,800 செலவில், மகளிர் மன்றம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. போதுமான சாலை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**கேத்தி—நீலகிரி மாவட்டத்திலேயே, கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து, சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**



# உணவுப் பிரச்னையைத் தீர்க்க...




திரு ஆர். எச். கிருஷ்ணன்,
சிறுதானியங்கள் வல்லுநர்,
வேளாண்மைக் கல்லூரி—
ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர்.

**ம**க்காச்சோளம் முதல் தரமான உணவுப் பொருள் அல்ல என்றும், ஏழை, பாமர மக்கள் தாம் வேறுவகை யில்லாத நிலையில் அதை உணவாக ஏற்றுக்கொள்ளு கிறார்கள் என்றும் ஓர் எண்ணம் மக்களிடையே பரவலாக இருந்து வருகிறது. இவ்விதமான எண்ணத்திற்கோ, அல்லது நம்பிக்கைக்கோ யாதொரு ஆதாரமும் கிடையாது. மக்காச்சோளத்தில் 55 சதம் மாச்சத்தும் (Starch) 26 சதம் பசைச்சத்தும் 3 சதம் கொழுப்புச் சத்தும் (Fat) இருப்பதால், அரிசிக்கும், சோளம், கம்பு, ராகி முதலிய சிறுதானிய ரகங்களுக்கும் எவ்விதத்திலும் தரக் குறைவானது அல்ல. நெல் பயிருடன் ஒத்துப் பார்க்கும் போது மக்காச்சோளத்திற்குத் தேவைப்படும் தண்ணீர் மிகவும் குறைவு. மிகவும் குறைந்த காலத்தில் ஒரு பயிர் எடுத்துவிடலாம். நெல் பயிருக்குச் சமமான மகசூலும் கிடைக்கிறது. மாட்டுத் தீவனத்திற்கு நெல் வைக்கோலைவிட அதிக அளவில் தட்டு கிடைக்கிறது. நெல் வைக்கோலைவிட மக்காச்சோளத்தட்டு அதிகச் சத்து நிறைந்தது. மேலும் மக்காச்சோளத்தட்டை சரியான முறையில் பதனப்படுத்தி "சைலோ" தயாரித்தால், கணிசமான அளவில் தரமான தீவனம் பால் மாடுகளுக்கு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

நேரடியாக மனித உணவாகவோ அல்லது மாட்டுத் தீவனமாகவோ உபயோகப் படுவதல்லாமல், பல வகைப்பட்ட பொருள்கள் செய்வதற்குத் தேவை யான கச்சாப்பொருளாக, மக்காச்சோளத் தானிய மும் தட்டும் உபயோகப்படலாம். நூற்பு ஆலைகளுக்கு வேண்டிய மாவுப் பொருளும் (Starch) அதிலிருந்து (Dextrose, Syrup, Confectionery), பசை (Glue), பலவகைப்பட்ட மதுபானங்களும், பவுடர் முதலிய அழகு தரும் சாதனங்கள் செய்வதற்கும், சில குறிப்பிட்ட வெடி வகைகள் செய்வதற்கும் மக்காச்சோள தானியமும், அட்டைக் காகிதங்கள், இன்னும் நுண்ணிய பொருள்களைப் பொருத்தி வைப்பதற்குத் தேவைப்படும் பலவகை சாதனங்கள் செய்வதற்கு, மக்காச்சோளத் தட்டும் பயன்படு கின்றன. ஆகவே, மக்காச்சோளச் சாகுபடி விரைவாக மக்களிடையே பரவிக்கொண்டு வருகிறது. ஆனால், தமிழ் நாட்டில் மற்ற மாநிலங்களைவிடக் குறைவாகவே பயிரிடப் பட்டு வருகிறது. இப்பயிரை சாகுபடிச் செய்வதற்குவேண்டிய நிலவளம், நீர்வளம், பருவநிலை முதலிய சூழ்நிலைகள் தமிழகத்தில் அமைந்து இருப்பதால், இதன சாகுபடி கணிசமான அளவில் விரிவடைவதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருக்கின்றன.

### அனுபவ உண்மை

மற்றப் பயிர்களைப் போலவே மக்காச்சோளத்திலும் இனக்கலப்பினால் ஏற்படக்கூடிய வீரியம் காண்கிறோம். அவ்வீரியத்தை உபயோகப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியில் முழு வெற்றியும் கண்டிருக்கிறோம். ஆகவே. மக்காச்சோளம் பெருவாரியாகப் பயிரிடப்பட்டு வரும் எல்லா நாடுகளிலும் வீரிய ஒட்டு மக்காச்சோளம்தான் கையாளப்படுகின்றது. முன்பு சாகுபடி செய்யப்பட்டுவந்த பலவிதமான தனி இனங்கள் யாவும் மறைந்து விட்டன. நமது மாநிலத்திற்கு 'டெக்கான்' என்ற ஒட்டு ரகம் மிகவும் சிறந்தது என்று அனுபவத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. 'டெக்கான்' என்பது இரட்டை இனக் கலப்பு ரகங்களில் ஒன்று. 100 முதல் 110 நாட்களில் அறுவடைக்குத் தயாராகி விடுகிறது. கனத்த, கரும்பச்சை நிறம் உள்ள தண்டும், இலைகளும் உள்ளன. இலகுவில் சாய்ந்துவிடாத தன்மை உள்ளது கதிர்களைச் சுற்றி இருக்கும் சோகை மிகவும் இறுக்கமாக இருப்பதால் பறவை இனங்களால் சேதம் எதும் ஏற்படுவது இல்லை. தானிய மணிகள் பெரியதாகவும், கடினமாகவும் நல்ல மஞ்சள்நிறம் உள்ளதாகவும் இருக்கின்றன. சாம்பல் பூசனம் சொரி (Rust) முதலிய நோய்களையும், குருத்துப்பூச்சி (Shoot Fly), தண்டுப்புழு (Stem Borer) முதலிய பூச்சி வகைகளையும் சகித்துக் கொள்ளும் தன்மை உடையது. அறுவடை சமயத்திலும், தட்டு ஓரளவு பச்சையாகவே இருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 4,630 கிலோ வரை தானியமும், 20 டன்வரை தட்டும் கிடைத்திருக்கின்றன.

### பருவங்கள்

இதைப் பயிர் செய்வதற்குக் குறிப்பாகப் பருவகாலம் எதும் கிடையாது. நீர்ப்பாசன வசதி போதுமான அளவில் இருக்குமேயானால், எப்பொழுது வேண்டுமானாலும் மக்காச்சோளம் பயிர் செய்யலாம். ஆண்டிற்கு மூன்று முறை அல்லது மூன்று போகம் பயிர் செய்யலாம். எனினும் சித்திரை—வைகாசிப் பட்டத்தில் சாகுபடி செய்தால் மகசூல் அதிகம் கிடைக்கிறது.

# மங்கலம்

## “ மங்கலம் ”—வட ஆர்க்காடு மாவட்டம்

வட ஆர்க்காடு மாவட்டத்தில், 1965-66-ஆம் ஆண்டில், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த **மங்கலம்** கிராமம், சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசினரால் நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்ட இக் கிராம மக்கள், 682·53 ஏக்கரில் நஞ்செய் பயிரும், 3,795.20 ஏக்கரில் புன்செய் பயிரும் சாகுபடி செய்கின்றனர். அரசினரால் பரிந்துரை செய்யப்படும் திருந்திய ரக நெல், நவதானிய வித்துக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, புதிய விவசாய முறைகளை இக் கிராம மக்கள் பின்பற்றுகின்றனர். ஊராட்சி மூலமாக, கலவை எரு உற்பத்தி, பசுந்தழை உர உற்பத்தி, ஆகியவையும் கணிசமான அளவில் செய்யப்பட்டுள்ளன.

தரமான கால்நடைகளின் உற்பத்திக்காக மூன்று உயர்தரப் பொலிக் காளைகள் வழங்கி, அதன் மூலம் இக்கிராமத்தில் 587 பசுக்களுக்கு செயற்கை முறைக் கருத்தரிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உயர் ரக கோழி இன அபிவிருத்தியும் நடந்துள்ளது.

இங்குள்ள பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 323 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டுறவு நாணயக் கிடங்கு ஒன்று ரூ. 13,500 செலவில் கட்டப்பட்டுள்ளது.

இங்கு இயங்கி வரும் தச்சுப்பட்டறையில் 7 நபர்கள் பணியாற்றுகின்றனர். இதுவரை ரூ. 17,795 பெறுமானமுள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனையாகியுள்ளன. இக் கிராமம் சுகாதார வசதிகளிலும் சிறந்து விளங்குகிறது. இங்குள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் குடும்ப நலத் திட்டத்திலும் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்துள்ளது. குடிநீர்த் திட்டத்தில்—9 குடிநீர்க் கிணறுகளும், மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி ஒன்றும் உள்ளது. மங்கலம் கிராமம் மாவட்டத்தில் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டது, அக் கிராம மக்களின் ஒற்றுமைக்கும், தளராத ஒன்றுபட்ட உழைப்புக்கும் கிடைத்த வெற்றியாகும்.

# கேத்தி

## கேத்தி பேரூராட்சி—நீலகிரி மாவட்டம்

இங்கு 3628·85 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும், ரூ. 1,12,291 பேரூராட்சியின் வளர்ச்சிக்கென செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு பெரும்பாலும் உருளைக் கிழங்கு 2,300 ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. அடுத்ததாக, தேயிலை விளைவிக்கப்படுகிறது.

பயிர்ப் பாதுகாப்பு முறைகள் தகுந்தவாறு கடைப்பிடிக்கப்பட்டு, உருளைக்கிழங்கு சாகுபடியில் முன்னணியில் நிற்கிறது, கேத்தி.

இப்பகுதியில் அதிக மழையின் காரணமாக, மண்ணரிப்பு ஏற்படாமல் தடுக்க, மண்ணரிப்புப் பாதுகாப்புத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இதன்படி, சுமார் 1,000 ஏக்கர் நிலம் சீர்படுத்தப்பட்டுள்ளது.

இக் கிராமத்தில், ஜெர்ஸி இனக் கலப்பு கால்நடைகள் மக்களால் பராமரிக்கப்படுகின்றன. 1965-ம் ஆண்டில் சுத்தமான ஜெர்ஸி இனப் பொலிக் காளைகளை கொண்டு செயற்கை இன விருத்தி செய்வதற்கு, ஒரு செயற்கை முறை இனவிருத்தி நிலையம், கால்நடைத் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறது. இத்துடன், கோழி வளர்ச்சிப் பண்ணையும் இருக்கிறது. இங்கு ரூ. 45,000 செலவில் ஒரு கால் நடை மருந்தகம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பள்ளிகளான ‘லவ்டேல் லாரன்ஸ்’, ‘தூய ஜார்ஜ்’ பள்ளிகளும், ஒரு கேத்தி மிஷன் உயர் நிலைப் பள்ளியும் உள்ளன. 11 ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன. ஊராட்சி பங்குத் தொகை, அரசாங்க மானியம் ஆகியவற்றோடு ரூ 5,800 செலவில், மகளிர் மன்றம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. போதுமான சாலை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**கேத்தி—நீலகிரி மாவட்டத்திலேயே, கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து, சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**



# உணவுப் பிரச்னையைத் தீர்க்க... மக்காச்சோளம்




திரு ஆர். எச். கிருஷ்ணன்,
சிறுதானியங்கள் வல்லுநர்,
வேளாண்மைக் கல்லூரி—
ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர்.

மக்காச்சோளம் முதல் தரமான உணவுப் பொருள் அல்ல என்றும், ஏழை, பாமர மக்கள் தாம் வேறுவகையில்லாத நிலையில் அதை உணவாக ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்றும் ஓர் எண்ணம் மக்களிடையே பரவலாக இருந்து வருகிறது. இவ்விதமான எண்ணத்திற்கோ, அல்லது நம்பிக்கைக்கோ யாதொரு ஆதாரமும் கிடையாது. மக்காச்சோளத்தில் 55 சதம் மாச்சத்தும் (Starch) 26 சதம் பசைச்சத்தும் 3 சதம் கொழுப்புச் சத்தும் (Fat) இருப்பதால், அரிசிக்கும், சோளம், கம்பு, ராகி முதலிய சிறுதானிய ரகங்களுக்கும் எவ்விதத்திலும் தரக் குறைவானது அல்ல. நெல் பயிருடன் ஒத்துப் பார்க்கும் போது மக்காச்சோளத்திற்குத் தேவைப்படும் தண்ணீர் மிகவும் குறைவு. மிகவும் குறைந்த காலத்தில் ஒரு பயிர் எடுத்துவிடலாம். நெல் பயிருக்குச் சமமான மகசூலும் கிடைக்கிறது. மாட்டுத் தீவனத்திற்கு நெல் வைக்கோலைவிட அதிக அளவில் தட்டு கிடைக்கிறது. நெல் வைக்கோலைவிட மக்காச்சோளத்தட்டு அதிகச் சத்து நிறைந்தது. மேலும் மக்காச்சோளத்தட்டை சரியான முறையில் பதனப்படுத்தி “ஸைலோ” தயாரித்தால், கணிசமான அளவில் தரமான தீவனம் பால் மாடுகளுக்கு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

நேரடியாக மனித உணவாகவோ அல்லது மாட்டுத் தீவனமாகவோ உபயோகப் படுவதல்லாமல், பல வகைப்பட்ட பொருள்கள் செய்வதற்குத் தேவையான கச்சாப்பொருளாக, மக்காச்சோளத் தானியமும் தட்டும் உபயோகப்படலாம். தாற்பு ஆலைகளுக்கு வேண்டிய மாவுப் பொருளும் (Starch) அதிலிருந்து (Dextrose, Syrup, Confectionery), பசை (Glue), பலவகைப்பட்ட மதுபானங்களும், பவுடர் முதலிய அழகு தரும் சாதனங்கள் செய்வதற்கும், சில குறிப்பிட்ட வெடி வகைகள் செய்வதற்கும் மக்காச்சோள தானியமும், அட்டைக் காகிதங்கள், இன்னும் நுண்ணிய பொருள்களைப் பொருத்தி வைப்பதற்குத் தேவைப்படும் பலவகை சாதனங்கள் செய்வதற்கு, மக்காச்சோளத் தட்டும் பயன்படுகின்றன. ஆகவே, மக்காச்சோளச் சாகுபடி விரைவாக மக்களிடையே பரவிக்கொண்டு வருகிறது. ஆனால், தமிழ் நாட்டில் மற்ற மாநிலங்களைவிடக் குறைவாகவே பயிரிடப் பட்டு வருகிறது. இப்பயிரை சாகுபடிச் செய்வதற்குவேண்டிய நிலவளம், நீர்வளம், பருவநிலை முதலிய சூழ்நிலைகள் தமிழகத்தில் அமைந்து இருப்பதால், இதன் சாகுபடி கணிசமான அளவில் விரிவடைவதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருக்கின்றன.

### அனுபவ உண்மை

மற்றப் பயிர்களைப் போலவே மக்காச்சோளத்திலும் இனக்கலப்பினால் ஏற்படக்கூடிய வீரியம் காண்கிறோம். அவ்வீரியத்தை உபயோகப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியில் முழு வெற்றியும் கண்டிருக்கிறோம். ஆகவே. மக்காச்சோளம் பெருவாரியாகப் பயிரிடப்பட்டு வரும் எல்லா நாடுகளிலும் வீரிய ஒட்டு மக்காச்சோளம்தான் கையாளப்படுகின்றது. முன்பு சாகுபடி செய்யப்பட்டுவந்த பலவிதமான தனி இனங்கள் யாவும் மறைந்து விட்டன. நமது மாநிலத்திற்கு ‘டெக்கான்’ என்ற ஒட்டு ரகம் மிகவும் சிறந்தது என்று அனுபவத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. ‘டெக்கான்’ என்பது இரட்டை இனக் கலப்பு ரகங்களில் ஒன்று. 100 முதல் 110 நாட்களில் அறுவடைக்குத் தயாராகி விடுகிறது. கனத்த, கரும்பச்சை நிறம் உள்ள தண்டும், இலைகளும் உள்ளன. இலகுவில் சாய்ந்துவிடாத தன்மை உள்ளது கதிர்களைச் சுற்றி இருக்கும் சோகை மிகவும் இறுக்கமாக இருப்பதால் பறவை இனங்களால் சேதம் எதும் ஏற்படுவது இல்லை. தானிய மணிகள் பெரியதாகவும், கடினமாகவும் நல்ல மஞ்சள் நிறம் உள்ளதாகவும் இருக்கின்றன. சாம்பல் பூசணம் சொறி (Rust) முதலிய நோய்களையும், குருத்துப்பூச்சி (Shoot Fly), தண்டுப்புழு (Stem Borer) முதலிய பூச்சி வகைகளையும் சகித்துக் கொள்ளும் தன்மை உடையது. அறுவடை சமயத்திலும், தட்டு ஓரளவு பச்சையாகவே இருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 4,630 கிலோ வரை தானியமும், 20 டன்வரை தட்டும் கிடைத்திருக்கின்றன.

### பருவங்கள்

இதைப் பயிர் செய்வதற்குக் குறிப்பாகப் பருவகாலம் ஏதும் கிடையாது. நீர்ப்பாசன வசதி போதுமான அளவில் இருக்குமேயானால், எப்பொழுது வேண்டுமானாலும் மக்காச்சோளம் பயிர் செய்யலாம். ஆண்டிற்கு மூன்று முறை அல்லது மூன்று போகம் பயிர் செய்யலாம். எனினும் சித்திரை—வைகாசிப் பட்டத்தில் சாகுபடி செய்தால் மகசூல் அதிகம் கிடைக்கிறது.

நல்ல வடிகால் வசதியுள்ள, தண்ணீர் தேங்காத உவர் அல்லது களர் இல்லாத ஒரே சீராக உள்ள நிலங்கள் சாலச் சிறந்தவை.

சுத்தமான, தரமான நல்ல முளைப்புத்திறனுள்ள அத்தாட்சி பெற்ற விதைகளையே உபயோகிப்பது நல்லது.

### முன்செய் நேர்த்தி

தகுந்த பதத்தில் முதல் உழவு உழுதால், பெரிய அளவில் கட்டிகள் பெயருவதில்லை, பெயரக்கூடிய சிறிய கட்டிகளும், மறு உழவின்போது உடைந்துவிடும். தேவையான அளவு உழுது, கட்டிகள் இல்லாமலும் வயலைச் செப்பனிட்டுத் தயார் செய்தால் நாம் உபயோகிக்கும் விதைகள் பழுதுபோகாமல் நூற்றுக்கு நூறு முளைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கடைசி உழவிற்கு முன்னதாக, ஏக்கருக்கு சுமார் 10 டன் என்ற அளவில் தொழு உரமோ, அல்லது நன்றாக மக்கின கம்போஸ்ட் உரமோ, இட்டு மண்ணுடன் நன்றாகக் கலக்கும்படி செய்வது நல்லது. இம்முறை மண்ணின் சத்தை உயர்த்தவும், தண்ணீரை உட்கொண்டு ஈரத்தைக் காத்து வைத்துக்கொள்ளும் தன்மையையும் அதிகரிக்கச் செய்கிறது.

மக்காச்சோளம் நாம் போடும் உரத்தின் அளவுக்குத் தகுந்தாற்போல் பலன் கொடுக்கிறது. இதுவரை கிடைத்த அனுபவத்தில் மக்காச் சோளத்திற்கு அதிகஅளவாக ஏக்கர் ஒன்றுக்கு 54 கிலோ தழைச்சத்து (என்), 27 கிலோ மணிச்சத்து (பி) 18 கிலோ சாம்பல்சத்து (கே) போடலாம் என்று தெரிய வருகிறது. இவற்றில், 18 கிலோ தழைச் சத்தையும் 27 கிலோ மணிச் சத்தையும், 18 கிலோ சாம்பல் சத்தையும் விதைக்கும்போது அடி உரமாகவும், மீதி உள்ள 36 கிலோ தழைச் சத்தை 23-25 நாட்களுக்குப் பிறகு மேல் உரமாக இடுவதும் சிறந்த முறையாகும்.

### விதைப்பு

பாத்திகள் கட்டி விதைப்பதைக் காட்டிலும் 'பார்'கள் பிடித்து வரிசை வரிசையாக விதைப்பதே நல்லது என்று தெரிய வருகிறது. அறுபது செ.மீ. (2 அடி) இடைவெளியுள்ள 'பார்'கள் பிடித்து, அப்'பார்'களின் ஒரு சரிவில் 25 செ. மீ. (10 அங்குலம்) இடைவெளிவிட்டு ஒவ்வொரு விதையாக ஊன்றுவது நல்லது. ஊன்றும் விதைகள் 2·5 செ.மீ. (1 அங்குலம்) ஆழத்திற்கு அடியில் போகக் கூடாது. விதைப்பதற்கு முன்னதாக விதைக்கப்படவிருக்கும் பார்களின் சரிவில் ஒரு குச்சியினால் 5 செ.மீ. (2 அங்குலம்) ஆழமுள்ளகோடு ஒன்று கிழித்து அக்கோட்டில் ரசாயன உரக்கலவையைத் தூவி, அதை மண்ணுடன் கலக்கச்செய்து இக்கோட்டிற்குச் சிறிது பக்கமாக விதைகளை ஊன்றவேண்டும்.

விதைத்தவுடனும், விதைத்த நான்காவது அல்லது ஐந்தாவது நாளன்றும், மேற்கொண்டு தேவையை பொறுத்து, வாரத்திற்கு ஒருமுறையேனும் அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறையேனும் தண்ணீர் கட்டுவது அவசியம்.

மக்காச்சோளம் அல்லாத வேறு எந்தப் பயிரோ அல்லது செடியோ வயலில் இருப்பின் அது களை எனக் கருதப்படவேண்டும். மாட்டுத் தீவனத்திற்காகக் கூட களைப் பயிரை வளரவிடக்கூடாது. களை எடுத்துக் கொத்திக் கொடுக்கும்போது, மிக ஆழமாகக் கொத்தாமலும், பயிருக்கு வெகு அருகில் கொத்தாமலும் பார்த்துக்கொள்ளுதல் நல்லது.

மற்ற உணவுப் பயிர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மக்காச்சோளப் பயிரை மிகச் சில பூச்சிகளும் பூசண நோய்களுமே தாக்குகின்றன.

கரையான் பாதிக்கும் இடங்களில், 5 சதம் ஆல்டிரின் அல்லது ஹெப்டோகுளோர் தூளை ஏக்கருக்கு 7 கிலோ விகிதத்தில் விதைக்கும்போது, விதை வரிசைகளில் மண்ணுடன் கலந்து விடுவது நல்லது.

பயிர் மிகவும் சிறியதாக இருக்கும்போதே, குருத்துப் புழு தாக்கி, பெருஞ்சேதம் விளைவிக்கலாம். அவ்வப்போது பயிரைப் பரிசோதித்து குருத்துப் புழுக்கள், வெட்டுக்கிளி, வண்டு முதலியவை காணப்பட்டால், அவற்றால் ஏற்படக் கூடிய சேதத்தை தவிர்க்க கீழ்க்கண்ட மருந்துக் கலவைகளில் ஏதாவது ஒன்றை மூன்று முறை தெளிக்கவும்.

1. 48 மில்லி லிட்டர் எண்டிரினை (20 சதவிகிதம்) 18 லிட்டர் தண்ணீரில் கலந்த கலவை.

2. 50 சத விகித பி.எச்.சி. எமல்ஷன் 48 மில்லி லிட்டரை 18 லிட்டர் தண்ணீருடன் கலந்த கலவை.

3. 50 சதவிகித டி.டி.டி. 72 கிராமையும், 50 சதவிகித பி.எச்.சி. 72 கிராமையும் 18 லிட்டர் தண்ணீரில் கலந்த கலவை.

4. 50 சதவிகித கார்பரில் (Carboryl) 50 கிராமை 18 லிட்டர் தண்ணீரில் கலந்த கலவை.

முதல்முறையாக, விதைத்த 2 வாரங்களுக்குப் பிறகு ஏக்கருக்கு 150 லிட்டர் கலவையும், அதன் பிறகு 10-15 நாட்கள் கழித்து 180 லிட்டர் கலவையும், அதற்குப்பிறகு 3—4 வாரங்கள் கழித்து ஏக்கருக்கு 300 லிட்டர் கலவையும் தெளிக்கவும்.


குருத்துப் பூச்சிக்கு மருந்து தெளிப்பதைக் காட்டிலும், குருத்துப் பாகத்தில் தண்டும் இலைகளும் சேரும் இடத்தில் எண்டிரின் குருணைகளை (Endrin Granules) ஏக்கருக்கு 9 கிலோ வீதம், 15-21 நாட்களுக்குள் ஒரு தடவையும், 30—42 நாட்களுக்குள் இரண்டாம் தடவையும், பூ எடுக்கும் சமயத்தில் மூன்றும் தடவையும் போடுவது சிறந்தது. பூ எடுத்தபின் குருத்துப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக இருந்தால், எண்டிரினுடன் பி.எச்.சி. அல்லது டி.டி.டி. கலந்து ஏக்கருக்கு 300 லிட்டர் மருந்து கலவையைத் தெளிக்கவும்.

சிவப்புக்கம்பிளிப் புழுவோ, மற்றப் புழுக்களோ தோன்றினால், பி.எச்.சி. 10 சதவிகிதம் ஏக்கருக்கு 9 கிலோ வீதம் தூவவும்.

### அறுவடை

கதிர்கள் நன்றாக முதிர்ச்சி அடைந்துவிட்ட போதிலும் சிலசமயத்தில் தண்டும் சில இலைகளும் பச்சையாகவே இருக்கக்கூடும். கதிர்களைச் சுற்றி இறுக்கமாக இருக்கும் தோகை நன்றாகக் காய்ந்து வைக்கோல் நிறத்திற்கு மாறினால், கதிர்கள் முதிர்ந்துவிட்டன என்பதற்கு ஓர் அறிகுறியாகக் கொள்ளலாம். தேவைக்குமேல் ஒன்றிரண்டு நாட்கள் அறுவடை செய்யாமலிருந்தாலும், கேடு ஒன்றும் நேராது. நன்றாக முதிர்ந்த கதிர்களை அரிவாளினால் ஒவ்வொன்றாகக் கொய்து சேகரிக்க வேண்டும். கதிர்களைச் சேகரித்தபிறகு, வேண்டியபோது தட்டை வெட்டிக்கொள்ளலாம். சேகரித்த கதிர்களை நல்ல சிமிண்ட் அல்லது கல்களத்தில் நன்றாகக் காயவைத்து, பிறகு கதிரைச் சுற்றிக்கொண்டிருக்கும் தோகையைப் பிரித்தெடுத்தல் நல்லது. நன்றாகக் காய்ந்த கதிர்களிலிருந்து தானியங்களை யந்திர சாதனங்களின் உதவியுடனோ, அல்லது மாடுகளின் கால்களின்கீழ் மிதிக்கவிட்டாவது பிரித்தெடுக்கலாம். இவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட தானியங்களை மறுபடியும் காயவைத்து, தூற்றி, தூம்பு தூசிகளை அகற்றி. சாக்குகளிலோ அல்லது மண்பாண்டங்களிலோ, ஈரம் இல்லாத இடங்களில் சேமித்து வைத்துக் கொள்ளலாம் சாகுபடியாளர்களின் செயமுறைகளுக்கு ஏற்றவாறும், மற்றும் காலநிலை, பூச்சிகள் தோன்றுதல் முதலிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறும், ஏக்கருக்கு 4 630 கிலோ வரை தானியமும், 20—25 டன் தட்டும் கிடைத்துள்ளது.






"எவரெஸ்ட்"
அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் நீர்ப் பாசனக் குழாய்கள்
ஆண்டுக்கு ஆண்டு உங்களுக்கு அமோக
மகசூலை அளிக்க நேசக் கரம் நீட்டுகின்றன!
"எவரெஸ்ட்" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் பாசனக் குழாய்கள்:
■ உறுதியான விசேஷ நைபரை தக்க அளவில் சிமெண்டுடன் கலந்து உருவாக்கப்பட்டவை.
■ இந்திய தர நிர்ணயங்களுக்கு ஈடானவை.
■ எண்ணற்ற இந்திய விவசாயிகளால் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக திருப்தியுடன் உபயோகிக்கப்படுபவை.
■ உங்களுக்கு மிகவும் நீடித்த உழைப்பைத் தருபவை.
■ இந்திய தர நிர்ணயங்களுக்கு ஈடானவை.
விலை சிறிது குறைவென்ற காரணத்தால் மட்டமான தயாரிப்புக்களை உபயோகிக்காதீர்கள்—இவை சீக்கிரமே வெடிப்புற்று அரிய நீரையும் பணத்தையும் விரயமாக்கும்.
"எவரெஸ்ட்"— வயல் வெளியிலே உங்கள் நேசக்கரம்
அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட். பம்பாய் • கல்கத்தா • தமிழ்நாடு • போத்தனூர் • புதுடெல்லி • ஜபல்பூர்.

# நல்ல — வேலை

குஜராத் மாநிலம் மால்வான் ஊராட்சியின் தலைவரான 65 வயது நிரம்பிய திரு. பாபு பாய் வல்லுபாய் படேல் வராந்தாவில் மகிழ்ச்சி ததும்ப உட்கார்ந்திருந்தார். வாழ்க்கையில் பல இன்னல்களை அவர் கண்டிருந்தும் இன்று அவர் நிம்மதியாகவே காணப்பட்டார். இந்த மகிழ்ச்சியும், நிம்மதியும் அவருக்கு எப்படி கிடைத்தது?

தன்னுடைய பேரக் குழந்தைகள் அனைவரும் சத்தான உணவை உட்கொண்டு தரமான உடைகள் அணிந்து பயனுள்ள கல்வியை பெற்று மகிழ்ச்சியாக வாழவேண்டுமென அவர் பெரிதும் விரும்பினார். விருப்பத்தோடு அவர் வாளாவிருக்கவில்லை; அதை செயலில் நிறைவேற்றவும் முற்பட்டார்.

திரு. படேல் ஊராட்சியின் தலைவர்; எனவே ஊர் மக்கள் அனைவரும் ஆலோசனைகளுக்காகவும், உதவிக்காகவும் அவரை நாடி அடிக்கடி வருவார்கள். அவருடைய மகன், மருமகளுக்கும் அவருடைய அரிய ஆலோசனைகள் பெரிதும் தேவைப்பட்டன. எனவே நிலைமையை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தன்னிடமுள்ள எண்ணங்களை அவர்களிடம் கூற முனைந்தார்.

பெரிய பெரிய குடும்பங்கள் பலவற்றை நேரில் கண்டு, அங்கெல்லாம் நிலவி வரும் மகிழ்ச்சியற்ற சூழ்நிலையை கண்ணாரக் கண்டவர் அவர். நாளுக்கு நாள் வசதிகள் குறைவதுடன், பெரும்பாலான குடும்பங்களிலுள்ள குழந்தைகளுக்கு போதிய உடைகளும், உணவும், சரிவரக் கிடைப்பது அரிதாகிவிட்டது. உணவு, உடைக்கே பற்றாக் குறை நிலையேற்படுகையில், குழந்தைகள் எங்கே பள்ளி செல்லப்போகிறார்கள்? அதைப் பற்றி எண்ணுவதற்கே இல்லை.

குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகள், திரு. பாபுபாய் அவர்களை அணுகி, திட்டத்தின் நன்மைகளை எடுத்துக் கூறும்போது, அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோர் எல்லையே இல்லை. சிறிய குடும்பங்களை பெற்று, பெரு வாழ்வு வாழ்வதற்கு அது வழி வகுப்பதுடன், குடும்பத்தினரின் நல்வாழ்விற்கு அடிகோலும் ஒரு திட்டமாகவும் அது செயல்படுவதை அவர் கண்ணுற்றார். ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் திரு. கோசாமி என்ற மருத்துவ அதிகாரி, அவருக்கு உற்ற நண்பராகி விட்டார். அவர்கள் இருவரும் ஒன்றுபட்டு செயலாற்றி, கிராமத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தவேண்டுமென்ற ஒரு பயனுள்ள தீர்மானத்திற்கு வந்தனர். திரு. பாபுபாய் தன்னுடைய மருமகளை அணுகி, குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளத் தூண்டினார். இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியவுடன், கிராமத்தில் ஒரு புத்துணர்ச்சி புது வேகத்துடன் பரவியது. படிப்படியாக கிராமவாசிகள் அனைவரும் திட்டத்தில் அக்கறை கொண்டு அதை ஏற்றுக் கொள்ள முன் வந்தனர். மக்களுடைய பழங்கால எண்ணங்கள் மூட நம்பிக்கைகளை தன்னுடைய விடாமுயற்சியின் மூலம் தகர்த்தெறிந்து, முழு முதல் வாகை சூடினார் திரு. பாபு பாய்.

தந்தையரும், தாய்மார்களும் ஆரம்ப சுகாதார நிலையத்தை நோக்கி படையெடுத்தனர். கிராமத்திலுள்ள 1,613 பேர்களில், குடும்பக் கட்டுப்பாடு செய்யத் தகுதியுள்ளவர்கள் 159 பேர்கள்; இந்த 159 பேர்களில் 74 பேர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டனர்; எஞ்சிய 85 பேர்கள், குடும்பக் கட்டுப்பாடு கருவிகளை பெற்று பயனடைகின்றனர். குடும்பத்தில் தெவிட்டாத இன்பம் நிலவ, அவர்கள் நல்ல வேலையில் நல்ல காரியம் செய்தனர்.



# வேர்க்கடலை வேந்தர்கள்

## நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணி!

### உழவர்களுக்கு கூடுதல் வருவாய்!

இவை இரண்டும் வேர்க்கடலையைப் பயிர் செய்வதனால் கிடைக்கிறது,

வேர்க்கடலையைப் பயிர் செய்யும் நம் உழவர்கள் அனைவரும், ஆந்திர மாநிலத்திலுள்ள தலைசிறந்த மூன்று உழவர்களைப் பின்பற்றினால், வருவாயைப் பெருக்கி, வளமான வாழ்வைப் பெற இயலும்.

**அந்த மூவர் யார்?**

திரு. பி. சிந்தா ரெட்டி, திரு டி. நாராயண ரெட்டி, திரு. என். நாராயண ரெட்டி ஆகியோர்.

கர்னூல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சிந்தா ரெட்டி, ஒரு ஹெக்டேர் நிலத்தில் 6,000 கிலோ வேர்க்கடலையை அறுவடை செய்துள்ளார். ஆந்திர மாநிலத்தின் சராசரி விளைச்சலில் இது நான்கு மடங்கு அதிகமாகும். இவ்வரிய சாதனையை ஆற்றிய அவருக்கு "மாநில வேர்க்கடலை வீரர்" என்ற விருது அளிக்கப்பட்டுள்ளது.

**மூவர் கண்ட ஒற்றுமை**

திரு டி. நாராயண ரெட்டியும், திரு. என். நாராயண ரெட்டியும் சுமார் 4,500 கிலோ அறுவடை செய்துள்ளனர்.

மிகு விளைச்சலைப் பெற்றது ஒரு புறமிருக்க, இவர்களிடையே ஒரு மற்றொரு ஒற்றுமையும் உள்ளது. வேளாண்மைத் துறையினர் கூறிய வாறு அவர்கள் மூவரும் ஒரே விதமான முறைகளைக் (சில சிறிய மாறுதல்கள் தவிர) கையாண்டுள்ளனர்.

முதலில் பெரிய கலப்பைகளைக் கொண்டு நிலத்தை ஆழ உழுதனர். பிறகு பரம்படித்தனர். ஒரு ஹெக்டேருக்கு 2,500 ஆடுகளை, ஆறு நாட்களுக்கு "கிடை" நிறுத்தினர். ஒவ்வொரு ஹெக்டேருக்கும் 20 முதல் 30 வண்டி பண்ணை எரு இட்டனர்.

**தரமிக்க விதைகள்**

மூன்று உழவர்களும் டி.எம்.வி. 3 வேர்க்கடலை இனத்தையே தேர்ந்தெடுத்தனர். விதைக்கும்போது, ஹெக்டேருக்கு 200 முதல் 425 கிலோ வரை சூப்பர் பாஸ்பேட் போட்டார்கள். ஆனால் பரிசு பெற்ற சிந்தா ரெட்டி மட்டும் "முரியேட் ஆஃப்பொடாஷ்" 60 கிலோ கூடுதலாக உரமிட்டார்.

நல்ல, தரமிக்க விதைகளை ஜூன்–ஜூலையில் விதைத்தார்கள். ஒவ்வொரு வரிசைக்கும் இடையே 25 முதல் 30 செ.மீ. இடைவெளி விடப்பட்டது.

இரண்டு முறை கைகளாலேயே களைகளை களைந்தனர். நட்டு 60 நாட்களுக்குள் இரண்டுமுறை ஊடு பயிர் செய்தனர்.

மீண்டும், சிந்தா ரெட்டி மட்டுமே ஹெக்டேருக்கு 50 கிலோ வீதம் அம்மோனியம் சல்பேட் உரம் போட்டார். உரிய காலத்தில் "எண்ட்ரின்" தெளிக்கப்பட்டது.

அறுவடை நாள் பிறந்தது. மூன்று மடங்கு, நான்கு மடங்கு விளைச்சலைப் பெருக்கிக் காட்டிய மூன்று விவசாயிகளும், அறுவடைக் காட்சியை கண்டு ரசித்துக்கொண்டிருந்தனர். சிந்தா ரெட்டியின் விளைச்சல்தான், ஆந்திர மாநிலத்தின் உச்ச விளைச்சலாகத் தெரியவந்தது.

---

**பண்பாட்டின் தத்துவம்**

"இந்தியக் கிராமவாசிகளிடம் நீங்கள்பேசத் துவங்கும்போது அவர்களும் பேசுகிறார்கள். அப்போது அவர்களது உதட்டிலிருந்து விவேகம் சொட்டுவதைப் பார்க்கலாம். முரட்டுத் தனமான வெளித் தோற்றத்துக்குப் பின்னால் ஆத்மீக உணர்வு தேங்கிக் கிடைப்பதைப் பார்க்கலாம். இதை நான் பண்பாடு என்று அழைக்கிறேன்.

இந்தியக் கிராமவாசியின் விஷயத்தில் முரட்டுத் தனமான வெளித் தோற்றத்திற்குப் பின்னால், பழமையில் சிறப்புடைய கலாசாரம் மறைந்திருக்கிறது. அந்த வெளித் தோற்றத்தை எடுத்துவிட்டு, அவரது ஏழ்மையையும் அறியாமையையும் அகற்றினால், பண்புமிக்க பக்குவமான சுதந்திரப் பிரஜையின் மிகச் சிறந்த மாதிரி ஒன்றைப் பார்க்கலாம்."

—அண்ணல் காந்தியடிகள்

# இனியும் என்ன?

திரு. பாபுபாய் வல்லுபாய் படேல் அவர்கள் மால்வான் ஊராட்சி குஜராத் மாநிலம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை செயல்படுத்தி, வெற்றி பெற்று வருகையில், திரு. கிஷோர்பாய் படேல் என்ற இன்னொரு ஊராட்சித் தலைவர், அவருடைய கிராமத்திலும் இதே நற்பணியை திறம்படச் செய்து, வாகை சூடியுள்ளார். இவர் அதே மாநிலத்திலுள்ள மோதிகடோல் ஊராட்சித் தலைவராவார். திரு. வல்லுபாய் படேல் பற்றிய கட்டுரை "நல்ல வேளை" என்ற தலைப்பில் இதே இதழில் வெளியாகியுள்ளது.

திரு. பாபுபாய் நேரடியாகவே மக்களை அணுகி, திட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென பணியாற்றிக் கொண்டிருக்கையில், திரு. கிஷோர் பாய், மகளிர் மன்றங்களின் ஒத்துழைப்பை நாடிப் பெற்றார்.

தொடக்கத்தில் "தன்னுடைய இரண்டு புதல்விகளையும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ளும் படிச் செய்தார். பின்னர், மகளிர் மன்றத் தலைவி, திருமதி மணிபென் படேல் அவர்களை சந்தித்து மகளிர் மன்றத்தின் ஆர்வத்தைத் தூண்டி, அவர்களின் ஒத்துழைப்பை பெற்றார். இந்த இரண்டு செயல்களுக்குப் பின்னர், அவரது காரியம் மிகவும் இலகுவாயிற்று.

மோதி கடோல் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 818 மட்டுமே. இதில் 83 தம்பதிகள் குடும்பக்கட்டுப்பாடுத் திட்ட முறைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். இவ்வூருக்கு மூன்று கல் தொலைவில் ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கல் தொலைவில் மருந்தகமும் உள்ளன. தம்பதிகள் அங்கு செல்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் ஊராட்சித் தலைவரால் செய்யப்பட்டது. அவ்வாறு அவர்கள் சுகாதார நிலையத்திற்கும், மருந்தகத்திற்கும் சென்றிருக்கையில், அவர்களுடைய குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்கும், ஊராட்சித் தலைவர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். ஒரு பெண், அறுவைச் சிகிச்சை செய்திருக்கையில், வேறொரு குடும்பத்தினரிடம், அப்பெண்ணுடைய குடும்பப் பொறுப்பை ஒப்படைத்தார்.

இவ்வாறாக, அங்குள்ளவர்களில் 43 பேர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டும், 10 பெண்கள் கருத்தடை வளையம் லூப் அணிந்து கொண்டும், பயனடைந்தனர். 31 ஆண்கள் உறைகள் மூலம் பயனடைகின்றனர். மோதி கடோல் ஊராட்சியில் மக்கள் தொகைப் பெருக்கம் தற்போது வெகுவாக குறைந்துள்ளது. 1965-ல் 22 குழந்தைகள் பிறந்தன. 1966-ல் 15-ம், 1967-ல் 14-ம் தாம் பிறந்துள்ளன. 1968-ம் ஆண்டில் இது மேலும் குறையும் அல்லவா?

வீட்டிற்கும், நாட்டிற்கும் ஏற்ற பணியை திரு. கிஷோர் பாய் தன்னலமற்று ஆற்றியுள்ளார் என்பதை இனியும் கூறவேண்டுமோ?



# கடல் கடக்கும் தீங்கனி

வட ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 35,000 ஏக்கர்களில் வாழை பயிரிடப்படுகிறது. மௌரிஷியஸ், ரஸ்தாலி ஆகிய இரண்டு இனங்களே முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன.

அதிதீவிர சாகுபடித் திட்டமானது, 1964-ம் ஆண்டில் இம்மாவட்டத்திலே தொடங்கப்பட்டது. உள்ளூர் சந்தைகளில் நிலவும் விலையேற்றத்தைக் குறைக்கவும், சுமார் 30,000 வரை, ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யும் வகையில் உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரிக்கவுமே, இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கு ஆசியா, சோவியத் யூனியன் நாடுகளுக்கு வாழைப் பழங்கள் ஏற்றுமதியாகின்றன.

**அந்நியச் செலாவணிப் பெருகிட....**

ஆயிரம் ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்யப்படும் வாழையை ஏற்றுமதி செய்தால், சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இத் தொகை கரும்பு காப்பி, முந்திரிக் கொட்டை, அல்லது மிளகை ஏற்றுமதி செய்து அதன்மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியைவிட அதிகமாகும். ஓர் ஏக்கர் நிலத்தில், 20 டன் வாழைகள்கூட உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. எனவேதான், அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு வாழைகளை உற்பத்தி செய்வது மிகவும் அவசியமெனக் கருதப்பட்டு, அதி தீவிர சாகுபடித் திட்டம், தமிழகத்தில் தொடங்கப்பட்டது.

அனேக வணிகக் குழுக்கள் இந்தியா முழுவதையும், சுற்றிப்பார்த்து, பல் வகை வாழைப்பழங்களை சுவைத்துப் பார்த்தன. மொரிஷியஸ் ரகம் ஒன்றை மட்டும், தூதுக் குழுவினர் பெரிதும் விரும்பினர். இந்த இனம் வட ஆர்க்காடு மாவட்டம் மற்றும் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள சில பகுதிகளில் மட்டுமே பெரும்பாலும் பயிர் செய்யப்படுகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தி மொரிஷயஸ் ரகத்தை ஓர் ஏக்கர் நிலத்தில் பயிரிடுவதற்கு சுமார் ரூ. 3,500 செலவாகிறது. கிடைக்கும் மொத்த வருவாய் ரூ. 6,600-ல் செலவு போக நிகர லாபமாக ஓர் ஏக்கருக்கு ரூ. 3,100 கிடைக்கிறது.

**தமிழகமும் ஏற்றுமதியும்**

அதி தீவிர சாகுபடித் திட்டத்தில் உழவர்களுக்கு குறுகிய காலக் கடன்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அளிக்கப்படுகின்றன. கடன் தொகையில் பாதி ரொக்கமாகவும், எஞ்சியவை உரம், பூச்சி மருந்துகள் போன்ற பொருள்களாகவும் அளிக்கப்படுகின்றன.

அதி தீவிர சாகுபடி திட்ட முறைகளைக் கையாள்வதால், வாழையின் எடை பெருமளவு அதிகரிக்கிறது. இத்திட்டம் தொடங்குவதற்கு முன், வாழைக்கென தனியே கண்டுபிடிக்கப்பட்டுள்ள "ஸ்டாண்டர்ட் 8" உரம் பற்றி உழவர்களுக்குத் தெரியாமலேயே இருந்தது. ஆனால் தற்போது நிலைமை மாறி, மேற்கண்ட உரம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

ஏற்றுமதி செய்வதே, இத்தீவிர சாகுபடித் திட்டத்தின் முக்கிய நோக்கம். எனினும், சென்னையிலிருந்து கப்பல் நிறைய வாழை ஏற்றுமதி செய்யப்படவில்லை. மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்கள் மட்டுமே வாழைகளை ஏற்றுமதி செய்கின்றன.

**இன்றைய தேவை**

மகாராஷ்டிரா குஜராத் மாநிலங்களில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை கடந்த 20 ஆண்டுகளாக நன்முறையில் செயல்பட்டு வருவதே, ஏற்றுமதிக்குக் காரணம் என்றும், அவ்விதமான தகுந்த கூட்டுறவு நிறுவனங்கள் தமிழகத்தில் இல்லையென்பதே இதற்கு காரணம் எனலாம். வாழைகளை ஏற்றுமதி செய்வதற்கு, ஒரு கூட்டுறவு நிறுவனத்தை துவக்கி, அதை "ஸ்டேட் டிரேடிங் கார்ப்ரேஷ"னுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முனைவதே; இப்போதைய தேவை என்பது நன்கு உணரப்பட்டு, அது தற்போது அமைக்கப்பட்டு வருகிறது.

# கிராமநலம் துணுக்குகள்

## கூட்டுறவு முறையில் கோழிப் பண்ணைகள்

மகாராஷ்டிர அரசு உருவாக்கியுள்ள கூட்டுறவு கோழிப் பண்ணை திட்டத்தில், ரூ. 5.5 லட்சம் மதிப்புள்ள கூட்டுறவு கோழிப் பண்ணை யொன்று, ஜாம்ப் என்ற கிராமத்தில் விரைவில் தொடங்கப்படவிருக்கிறது.

நிலமில்லாதோர், குறைந்த அளவில் நிலமுள்ள உழவர்களின் நூறு பேர் ஒன்றுகச் சேர்ந்து, கோழிப் பண்ணை அமைத்து கொள்ளவிருக்கின்றனர். இதற்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங் யிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் ரூ. 5,45,000 நீண்ட கால, மத்தி காலக் கடன்களாக தொடக்கத்தில் கிடைக்கும். உறுப்பினர் ஒவ்வொ வருக்கும் 10,000 பறவைகள் கடனுக அளிக்கப்படும். முட்டைகளை விற்பதனு கிடைக்கும் தொகையிலிருந்து பறவைகளின் மதிப்பானது, தவணை முறைகளில் வசூலிக்கப்படும். இம் மாநிலத்தில் கூட்டுறவு முறையில் அமைக்கப்படும் கோழிப் பண்ணைகளில் இது இரண்டாவதாகும்.

## உர விநியோகத்திற்கு குறுகிய காலக்கடன்

இரசாயன உரங்கள், கலவையுரங்கள் போன்ற பொருள்களை, உழவர் களுக்கு குறுகிய காலத் தவணை முறையில் வழங்குவதற்கென, மகாராஷ்டிரா அரசு ரூ. 3 கோடி ஒதுக்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களும், உறுப்பினர்களல்லாதவர்களும் இக்கடனைப் பெற்று பயனடையலாம். வேளாண்மை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இத்தொகை வட்டார வளர்ச்சி அதிகாரிகள் வாயிலாக உழவர்களுக்கு வழங்கப்படும். மிக அவசியமாகத் தேவைப் படும் மாவட்டத்திற்கென ரூ. 50,000 தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தொகை மத்திய அரசால், மகாராஷ்டிர அரசிற்கு வழங்கப் பட்டுள்ளது. ஒட்டு ரகங்களையும் மிகு விளைச்சல் தரும் பயிர்களையும் உண்டாக்குபவர்கள், அதனால் விளைந்த தானியங்களை விற்றுக் கடனை திருப்பிச் செலுத்தவேண்டும். அவவாறு செய்கையில் அரசிற்கு முதலிடம் அளிக்கவேண்டும்.

# உயர் குணம் வாய்ந்த உழவர்

அவ்வப்போது சிறு, சிறு தொழில்களைச் செய்து, காலங்கடத்தி வந்த திரு. இஸ்மாயில்கானுக்கு, வாழ்க்கையில் வெறுப்பு மிகுதியாகி விட்டது. கடனும் நாளுக்கு நாள் பெருகிவந்தது. அவருக்கு அவருடைய இரண்டு சகோதரர்களுக்கும் 35 பீக்காக்கள் நிலமிருந்தும், இஸ்மாயில் கான், வேளாண்மையில் கவனம் செலுத்தாமலேயிருந்தார். இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஆல்வார் மாவட்டத்தில் இவர் வசிக்கிறார்.

சீன ஆக்கிரமிப்பு, அவரைத் தீவிரமாக சிந்திக்கவைத்தது. இனியும் காலத்தை வீணே விரயமாக்குவதில் பயனில்லை என்பதை உணர்ந்த அவர், தனது சகோதரர்களுடன் சேர்ந்து நிலத்தில் பாடுபட முனைந்தார். ஊராட்சி சமிதியிலிருந்து அவருக்குத் தேவையான உதவிகள் தாமத மின்றி கிடைத்தன. அவர்களின் உழைப்பும், கவனமும் வீணுகவில்லை. இஸ்மாயில்கானும், அவரது சகோதரர்களும் மிகு விளைச்சலைக் கண்டு களிப்பேருவகையடைந்தனர்.

மெக்சிகன் கோதுமை ரகத்தைப் பயிரிடும் முறைகள் பற்றி பயிற்சியளிக்கும் உழவர்கள் முகாம் ஒன்றிற்கு இஸ்மாயில்கான் அனுப்பப்பட்டார். பயிற்சி பெற்று புது வேகத்துடனும், புத்துணர்வுடன் திரும்பிய அவர், 1.5 ஏக்கர் நிலத்தில் 'சோனுரா-64' கோதுமை ரகத்தை பயிரிட்டார்.

வேளாண்மை முறைகளை சிறிதும் தவருது பின்பற்றி, விவசாயம் செய்த அவருக்கு மகத்தான விளைச்சல் கிடைத்தது.

வெற்றி கிடைத்து, மகிழ்வுற்றிருக்கும் நேரத்தில், சக உழவர்களை அவர் மறக்கவேயில்லை. அவரிடமுள்ள தானியங்கள் அனைத்தையும், சக உழவர்களுக்கே, விதைக்காக அளித்துவிட்டு, உள்ளூர் ரக கோதுமையை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். "விதைகள் வாங்குவதற்கென, என்னுடைய விவசாயத் தோழர்கள் வட்டிக் கடைக்காரர்களிடம் செல்லக்கூடாது" என்னே அவர். என்னே அவருடைய உயர்ந்த குணம்!

# துப்ரான் கிராமம் பரிசு பெற ஆற்றிய அரும் பணிகள்

துப்ரான் என்ற கிராமம் ஹைதராபாத் நகரிலிருந்து 37-வது மைலில் உள்ளது. கெஜ்வெல் ஊராட்சி சமிதியைச் சேர்ந்தது இக்கிராமம். மலைகளினூடே அமைந்துள்ள இக்கிராமம் இயற்கை வனப்பு மிகுந்து காணப்படுகிறது. அழகிய சாலையொன்று துப்ரான் ஊராட்சியை இணைக்கிறது.

கிராமத்தின் மக்கள் தொகை 4160 மட்டுமே. 11 ஊராட்சி உறுப்பினர்கள், கிராமத்தின் அலுவல்களை திறம்படக் கவனிக்கின்றனர்.

கிராமத்தில் ஒரு தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப்பள்ளியும் இருக்கின்றன. பெற்றோர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதால், குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குத் தவருது அனுப்பப்படுகின்றனர். தொடக்கப் பள்ளியில் மட்டும் 475 குழந்தைகள் கல்வி கற்கின்றனர். பள்ளியில் மதிய உணவு அளிக்கப்படுகிறது.

சிறிய கால்நடை மருந்தகம் கிராமத்தில் செயலாற்றி வருகிறது.

50 கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக் கொண்டு பால் உற்பத்தியைப் பெருக்கியுள்ளனர். இச்சங்கம் நாள் தோறும் 200 லிட்டர், பாலை ஹைதராபாத் நகருக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கிறது.

உழவர்கள் நேப்பியர் புற்களை கால் நடைகளுக்கு அளிக்கின்றனர்.

பதினைந்து உழவர்களிடம் கோழிப் பண்ணைகள் இருக்கின்றன.

விவசாயத்திற்கென்றே பணியாற்றும் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்த்து மொத்தம் 11 விதமான கூட்டுறவுச் சங்கங்கள் இங்குள்ளன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 180 உறுப்பினர்கள் உள்ளனர். குடும்பங்கள் அனைத்தும் கூட்டுறவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

துப்ரான் ஊராட்சியில் 2 தெளிப்பான்கள், 1 துடைப்பான், 3 இரும்பு கலப்பைகள், 2 களையெடுக்கும் கருவிகள் உள்ளன. இவற்றை விவசாயிகள் வாடகைக்கும் பெற்று பயனடைகின்றனர். இவைதவிர 26 இரும்பு கலப்பைகள், 10 களையெடுக்கும கருவிகள், 2 தெளிப்பான்கள் ஆகியவற்றை 50 சதவீத உதவித் தொகையுடன் கிராமவாசிகள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குவதற்கு துப்ரான் ஊராட்சி அரும்பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளது. ரசாயன உரங்கள் 1130 மூட்டைகளையும் 253 ஏக்கர்களுக்கு பொறுக்கு விதைகளையும் ஊராட்சி வழங்கியுள்ளது. இவையிரண்டும் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக அளிக்கப்பட்டன. பாசனக் குளங்களை செப்பனிட்டு, மேலும் 100 ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஊராட்சியிடம் ஒரு விதைப் பண்ணை உள்ளது. ஆறு ஆயில் இன்ஜின்களும் பொருத்தப் பட்டுள்ளன. 40 குழாய்க் கிணறுகளுக்கு மின் தொடர்பு கொடுக்கப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் சிறிது இடையூறுகள் இருந்தாலும், அவற்றைக் கருதாது ஊராட்சி பல, வழிகளைக் கையாண்டு வரிகளை அனைத்தும் வசூலித்து விட்டது. ஊராட்சியின் வசமுள்ள கலவையுர திட்டத்தின் வாயிலாக, ஆண்டொன்றிற்கு ரூ. 300 வருவாய் கிடைக்கிறது.

கோழிப் பண்ணைகள், தென்னை மரங்கள் மூலம் ஆண்டொன்றிற்கு ரூ. 2,000 வருவாய் கிடைக்கிறது.

கிராமத்தில் இளைஞர் மன்றம் ஒன்று நூல்நிலையத்துடன் இயங்குகிறது. நாளிதழ்களை ஊராட்சி வழங்குகிறது, 50 உறுப்பினர்களைக் கொண்ட மகளிர் மன்றமும், ஊராட்சியில் பணியாற்றுகிறது.

தெலுங்கானுவில் உள்ள ஊராட்சிகளில், 1964-65.ம் ஆண்டிற்கென சிறந்த கிராமமாக துப்ரான் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநில அரசிடமிருந்து ரூ. 25,000 பரிசு பெற்றுள்ளது.

## சேவைகள் எத்தனையோ?

# செய்திப் பேழை

### புகழ் பெறவே பிறந்தார்.

ஒரிசா மாநிலத்திலுள்ள பெலாங்கீர் மாவட்டத்தைச் சார்ந்த உழவர்கள், தமது சாதனைகளைப் பற்றி பெருமையாகக் கூறிக் கொள்கின்றனர். பஞ்சம் நிலவியிருந்த மாவட்டத்தை உழைப்பாலும், விடாமுயற்சியாலும் வேளாண்மையில் சிறந்த மாவட்டமாக, உணவு உற்பத்தி பெருகி, வளம் கொழிக்கும் மாவட்டமாக அவர்கள் மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர்.

இவ்வுழவர்களுக்கு டாய்ச்சுங் ரகத்தைப் பற்றியே 1966–67-ம் ஆண்டு வரை அறியாதிருந்தனர். ஆனால் 1967-ம் ஆண்டின், குறுகிய கால வேளாண்மைப் பருவத்தில், 5,494 ஏக்கர்களில் மிகு விளைச்சல் தரும் டாய்ச்சுங் நேடில் ரகம் பயிரிடப் பெற்றது.

திரு. லட்சுமண் குமார் தாருவா என்ற உற்சாகம் மிகுந்த உழவர், இந்நெல்லைப் பயிரிட்டு, ஓர் ஏக்கருக்கு 195 மணங்கு அறுவடை செய்து மகத்தான புதியதோர் உற்பத்தி அளவை நிலை நாட்டினார்.

அவருடைய சாதனையைக் கண்ணுற்ற மாநில அரசாங்கம், அவருக்கு பம்பு செட் ஒன்றை பரிசாக அளித்து கௌரவித்தது. லோயிசின்ஹா ஊராட்சி சமிதி, அவரை மகிழ்விக்கும் முறையில் ஒரு விசைத் தெளிப்பானை அவருக்கு அளித்தது. மாநில முதலமைச்சர் தான் அனுப்பிய புத்தாண்டு வாழ்த்து மடல்களிலெல்லாம் இவ்வுழவருடன், இன்னொரு உழவரின் உருவப்படத்தைச் சேர்த்து அச்சிட்டு, அனுப்பினார்.

இவற்றினால், உழவர்களிடையே ஒருவித நல்ல போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, உற்பத்தி மேலும் பன்மடங்கு பெருகியுள்ளது.

### நம்பிக்கை வீணாகவில்லை.

அதிசய நெல்ரகமான ஐ. ஆர். 8 கொண்டாடப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலுள்ள மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள பெனுமந்த்ரா வட்டாரத்தில் இந்த நெல் ரகம் பெருவாரியான நிலத்தில் பயிரிடப்படுகிறது.

திரு. கே. நரசிம்மராஜு என்பவர், தன்னுடைய 22 ஏக்கர் முழுவதிலும் ஐ.ஆர். 8 ரகத்தையே பயிரிட்டார். போதுமான அளவில், முறைப்படி அம்மோணியம் சல்பேட் யூரியா, அம்மோணியம் பாஸ்பேட் ஆகிய உரங்களை உரிய காலத்தில் இட்டார்.

விளைவு மகத்தான விளைச்சல்!

ஏக்கருக்கு 2,625 கிலோ வீதம் அவருக்கு மகசூல் கிடைத்தது. சிற்சில வயல்களில் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை கூட கிடைத்தது.

திரு. ராஜூ ஓர் ஏக்கருக்கு செலவிட்டதோ ரூ. 280 மட்டுமே. ஆனால் அவருக்கு கிட்டிய வருவாய் ஓர் ஏக்கருக்கு ரூ. 14,235.

அவர் ஐ.ஆர். 8-ன் மீது வைத்த நம்பிக்கை வீணாகவில்லை.

### பரிசு பெற்ற தஞ்சை உழவர்.

தென்னகத்தின் நெற்களஞ்சியமெனப் போற்றப்படும் தஞ்சைத் தரணியிலே, தீவிர உழவர்களுக்கு பஞ்சமேது ?

கோனேரி ராஜபுரத்தைச் சேர்ந்த திரு. என். சீனிவாசன் அவர்கள் 1966–67-ம் ஆண்டிற்குரிய அனைத்திந்திய நெல் உற்பத்திப் போட்டியில், இரண்டாவது பரிசுத் தொகையான ரூ. 3,000-ஐ பெற்றுக்கொண்டுள்ளார். திரு. சீனிவாசனுக்கு ஓர் ஏக்கரில் கிடைத்த விளைச்சல் 5,283 கிலோவாகும்.

ஒரு ஏக்கர் 56 செண்ட் நிலத்தில், மிகுவிளைச்சல் தரும் இனமான கோ. 25-ஐ பயிரிட்டு, மேற்கண்ட மகசூலை இவர் பெற்றார். விவசாய வளர்ச்சி அதிகாரிகளின் யோசனைகளைப் பின்பற்றி, அவர்கள் கூறியவாறு அம்மோணியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் உரங்களை இட்டார்.

ஓர் ஏக்கரில் இவருக்கு கிடைத்த மொத்த இலாபம் ரூ. 1,533, இவருக்கு ஏற்பட்ட பயிர் செலவுத் தொகையான ரூ. 523 போக இவருக்கு கிடைத்த நிகர இலாபம் ரூ. 2,056.

இவருக்குப் பரிசைப் பெற்றுத் தந்து, இரண்டாவது போகப் பயிர் என்பது குறிப்பிடத்தக்கது. முதல் போகத்தில் ஆடுதுறை-27 நெல் பயிரிடப்பட்டு, அதுவும் நல்ல விளைச்சலை அளித்தது.

## அங்கும் இங்கும்

# "ஆம்" என்றார் அமைதியாக!

### தேடிவந்த பரிசு

திரு. செல்லதுரை என்ற சாதாரண விவசாயி, ஐ. ஆர். 8 நெல் ரகத்தை பயிரிட்டு, பரிசு பெற்றுள்ளார். மதுரை மாவட்டத்திலுள்ள சிறகுடி கிராமத்தைச் சார்ந்தவர் அவர்.

ஐ. ஆர். 8 நெல்லைப் பற்றி நன்கு உணர்ந்திருந்த திரு செல்லதுரை, தன்னுடைய ஒன்றரை ஏக்கர் நிலத்தில் அதைப் பயிரிட பெரிதும் விரும்பினார்.

அதற்கென விவசாய வளர்ச்சி அதிகாரியையும், ஊர்ப் பணியாளரையும் சந்தித்து, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றார். 70 செண்ட் நிலத்திற்கு, ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதை சிறிதும் தவறாது கவனமாகப் பின்பற்றி விவசாயம் செய்தார்.

1968-ஆம் ஆண்டு ஜூன் 25-ம் நாள் நடைபெற்ற விளைச்சல் போட்டியில் திரு. செல்லதுரை பங்கு பெற்றார். மாவட்ட வருவாய், வேளாண்மைத்துறை அதிகாரிகள், நத்தம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆகியோரின் முன்னிலையில் பயிர் அறுவடையாயிற்று. ஓர் ஏக்கருக்கு 3,853 கிலோ வீதம் விளைச்சல் கிடைக்கப் பெற்றது.

விளைவு ?

திரு. செல்லதுரைக்கு பரிசளிக்கப்பட்டது.

விதைகள், உழவு, உரவகை, நீர்ப்பாசனம், களையெடுப்பு, கூலி போன்றவற்றிற்கென ஏக்கருக்கு ரூ. 837.63 செலவிட்டது போக திரு. செல்லதுரைக்கு கிடைத்த ஆதாயம் ஏக்கருக்கு ரூ. 1,957.37. ஐ. ஆர். 8 நெல்லைப் பயிரிட்ட அவரைத் தேடி வந்தது பரிசு.

வேளாண்மை ஏழு மடங்கு ஆதாயத்தை அளிக்கக் கூடிய ஒரு தொழிலா என்று வியப்புற்ற சக உழவர்களுக்கு, திரு ரேவாபாய் படேல் என்ற குஜராத் மாநில உழவர் "ஆம்" என்று அமைதியாக பதிலளிக்கிறார்.

மிகு விளைச்சலைத் தரும் விதை ரகங்கள், நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு, கோதுமைப் பயிரில் பெருமளவு இலாபத்தை பெற்றுள்ளார் திரு படேல்.

ஓர் ஏக்கர் நிலத்தில் 2,498·5 கிலோ கோதுமையை அறுவடை செய்து, முதல் பரிசான ரூ. 300-ஐ தட்டிக் கொண்டார் திரு படேல். அவருடைய மாவட்டத்தின் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 400 கிலோ மட்டுமே.

இவரிடம் 30 ஏக்கர் நிலம்தான் உள்ளன. அதில் 10 ஏக்கரில் கோதுமையை பயிர் செய்கிறார். உயர் விளைச்சல் ரகங்களையும், நவீன வேளாண்மை முறைகளையும் கையாளுவதற்கு முன்னர், அவருக்கு கிடைத்த விளைச்சலை ஏக்கருக்கு 900 கிலோ மட்டுமே இந்த 900 கிலோ மகசூலானது 250 சதவீத கணக்கில் உயர்ந்தது.

இதனால் அவருடைய வருவாய் ஆண்டிற்கு ரூ.3,000-த்திலிருந்து ரூ. 22,000 வரை உயர்ந்துள்ளது.

"இன்னல் ஏதும் தீயினால் தூய்மையாக்கப் படாமல், எந்த ஒரு நாடும் மேன்மை பெற்றதில்லை."

—அண்ணல் காந்தியடிகள்

"நமது மகளிரை நம் அன்னை போலவும் சகோதரிபோலவும் மகள் போலவும் மதிப்பதற்கு நாம் கற்றுக்கொள்ளாவிடில் புத்துயிர் பெற்ற இந்தியாவை உருவாக்க முடியாது."

—அண்ணல் காந்தியடிகள்

"கோழைத் தனத்தை மறைப்பதற்கான ஒரு சாக்குப்போக்கு அல்ல அஹிம்சை. அது வீரர்களின் உயர் குணமாகும். வாளைப் பிரயோகிப்பதற்கு வேண்டிய வீரத்தைவிட, அஹிம்சையைப் பிரயோகிப்பதற்கு அதிக வீரம் வேண்டும்."

—அண்ணல் காந்தியடிகள்

"பஞ்சாயத்து ராஜ்", "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" போன்ற இதழ்களிலிருந்து இடம் பெறுபவை : பக்கங்கள் 40 முதல் 47 வரை.

Articles reproduced from "Panchayati Raj", "Intensive Agriculture", etc.
Pages 40 to 47 (8 pages).

கிராம நலம்
பகுதி-2
GRAMANALAM
PART-2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள் குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## விளம்பரம்—சமுதாய வளர்ச்சித் திட்டம் — 'கிராம நலம்' பத்திரிகை வெளியிடுதல் — ஆசிரியக் குழுமம்—அமைக்கப்படுகிறது.

## Publicity—Community Development Programme—Publication of the journal "Gramanalam"—Editorial Board—Constituted.)

பொதுத்துறை (தனி) 1963 ஆகஸ்ட் திங்கள் 24-ஆம் நாளிட்ட அரசு ஆணை 1330-ன் படி, "கிராம நலம்" இதழுக்காக ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இப்பொழுது "கிராம நலம்" இதழில் வெளியிடப்பட விருக்கும் செய்திகள், கட்டுரை முதலியவைகளை முடிவு செய்தல், மற்றும் இதழில் செய்யவேண்டிய மாறுதல்கள்; அல்லது திருத்தங்கள் அல்லது வளர்ச்சிகளுக்குரிய பணிகள் பற்றி கருத்தறிவிப்பது, வெளியிடப்பட வேண்டியவைகளைப் பற்றி முன்கூட்டியே முடிவு செய்தல், ஆகியவைகளுக்காக 'கிராம நலம்' ஆசிரியக் குழுமம் அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. அதன்படி, அரசு, "கிராம நலம்" ஆசிரியக் குழுமம் அமைத்து, கீழ்க் கண்டவர்களை உறுப்பினர்களாக அறிவித்துள்ளது:--

| | |
|---|---|
| மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். | தலைவர் |
| கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறைச் செயலாளர். | உறுப்பினர் |
| கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் .. | ,, |
| எழுது பொருள்—அச்சுத் துறை இயக்குநர் | |
| செய்தித் துறை இயக்குநர் .. | ,, |
| வேளாண்மைத் துறை இயக்குநர் .. | ,, |
| நிதித் துறை துணைச் செயலாளர் .. | ,, |
| உயர்நிலைக்கல்வித் துறை இயக்குநர் .. | ,, |
| கிராம வளர்ச்சித் துறை கூட்டு இயக்குநர் (கல்வி). | ,, |
| சிறணி–தனி அதிகாரி .. | ,, |
| திரு முரசொலி மாறன், நாடாளுமன்ற உறுப்பினர் | உறுப்பினர் |
| திரு ப. கண்ணன், ஆசிரியர் "பகுத்தறிவு". | ,, |
| மக்கள் தொடர்பு அதிகாரி. கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், சென்னை-9. | உறுப்பினர்—செயலாளர். |

3. ஆசிரியக் குழுமத்தின் பணிகள் வருமாறு:

(1) "கிராம நலம்" இதழில் பிரசுரத்துக்குரிய செய்திகள், புகைப்படங்கள், ஓவியங்கள் முதலியவைகளைத் தேர்ந்தெடுப்பது, முடிவு செய்வது, மற்றும் இதழில் செய்யப்படவேண்டிய மாறுதல்களை ஆலோசிப்பது.

(2) "கிராம நலம்" இதழில் பிரசுரிக்க வேண்டியவைகளை முனனதாகவே தயார் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல.

(3) முதற் பாராவில் சொல்லப்பட்டுள்ள அரசு ஆணையின்படி அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு செய்துவந்த பணிகளைச் செய்வது.

ஆசிரியக் குழுமம் மாதம் ஒரு முறையாவது கூட வேண்டும். அவசிய மேற்படின், அதற்கு மேலும் கூடலாம். ஒவ்வொரு மாதமும் முதலாவது திங்கட்கிழமை கூட்டம் நடைபெற வேண்டும். முதலாவது திங்கட்கிழமை விடுமுறை நாளாக அமைந்துவிட்டால், அடுத்த அலுவல் நாளில், கூட்டம் நடைபெறலாம். அந்தந்த "கிராம நலம்" இதழ் வெளிவர 45 நாட்களுக்கு முன்னதாக, சாதாரணமாகக் கூட்டம் கூட்டப்படவேண்டும்.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2418-ன் சுருக்கம்.)



## நகராட்சி மன்றங்கள்—கூடுதலாக பதவிகளைத் தோற்றுவித்தல்—தடை விதித்து ஆணையிடப்படுகிறது.

## Establishment—Municipal Councils—Creation of additional posts—Imposition of ban—Ordered.

நகராட்சி மன்றங்களில் புதிதாக பதவிகளைத் தோற்றுவிப்பதற்கு அல்லது இப்போதுள்ள பதவிகளை உயர்த்துவதற்குரிய எண்ணற்ற கோரிக்கைகள் நகராட்சி ஆணையாளர்களிடமிருந்து சமீப காலமாக கிடைத்துள்ளன. நகராட்சி மன்றங்களில் புதிய பதவிகளைத் தோற்றுவிக்கும் பிரச்னையை அரசு பரிசிலனை செய்ததில், சில நேர்வுகளில் அவ்வாறு புது பதவிகளைத் தோற்றுவிப்பது உண்மையான தேவைகளுக்குப் பொருந்துவனவாக இல்லை என்று கருதுகிறது. நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை உண்மையான தேவைகளுக்கும், நகராட்சிகளின் நிதி நிலை ஆற்றலுக்கும் ஏற்றனவாக இல்லை யென்றும், நகராட்சிகளின் குறைந்த வருவாய் ஆதாரங்கள், அலுவலர்களின் ஊதியத்திலேயே சிதறி, பொதுமக்களின் அவசியத் தேவைகளுக்குச் செலவிடுவதற்கென நிதி இல்லாமலோ அல்லது சிறிதோதான் எஞ்சியிருக்கிறது என்று நகராட்சிகளின் ஆய்வாளர் கருத்து கொண்டுள்ளார்.

2. எனவே—அரசாங்கம் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது :

(அ) மிக்க அவசியம் எனத் தோன்றினால் அன்றி—அதற்கென அரசின் முன் அனுமதியைப் பெற்று—பொதுச் சுகாதாரம் உள்பட–அனைத்திலும் எவரையும், எந்த பணித்துறையிலும் புதிதாக வேலைக்கு அமர்த்தக்கூடாது. இதில் சுகாதாரப் பணியாளர்களும், காங்க்கூலிகள் (Gang Mazdoors) தினக்கூலி பணியாளர்களும் (Nominal Muster Roll) அடங்கும்.

(ஆ) எந்த செலவினத்தையும் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு எவ்வகையிலும் அதிகமாக்கக்கூடாது.

(இ) கூடுதலாக ஏற்படும் வேலைகளை, தற்போதுள்ள அலுவலர்களைக் கொண்டே சமாளித்துக் கொள்ளவேண்டும்.

3. மேற்கண்ட விளக்க ஆணைகளை, சிறிதும் பிறழாது பின்பற்ற வேண்டுமென நகராட்சி ஆணையாளர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கும்படி நகராட்சிகளின் ஆய்வாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 79548-ன் சுருக்கம்.)

---

## பேரூரட்சிகளின் மேல் நிலை நீர்த் தொட்டிகள் போன்றவற்றிற்கு மின் தொடர்பு அளித்தல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Electrity—Extension of supply of electricity to Overhead tanks, etc., to Town Panchayats—Solvency Certificate—Instructions issued.

ஊராட்சிகளிலுள்ள தெரு விளக்குகள், நீர் இறவை இயந்திரகள், மேல் நிலை நீர்த் தொட்டிகள், கழிவு நீர் பம்கள், சங்கொலிகள் போன்றவற்றிற்கு மின் தொடர் அளிக்கவேண்டுமாயின், தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதி நிலை வளப்பமுடையதாக இருந்து, வளர்ச்சிஅதிகாரி (ஊராட்சிகள்) பரிந்துரைத்திருந்தால், ஊராட்சிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை, தமிழகமின் வாரியத்திற்கு அனுப்பிவைக்க, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1967-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 9117-ல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

2. ஊராட்சிகள்" என்ற சொல்லானது பொதுவான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அச்சொல் பேரூராட்சி (Town Panchayats) களையும் குறிக்கிறது என்று கிராம வளர்ச்சி இயக்குநர் கூறியுள்ளார். பேரூராட்சிகளின் நிதி நிலையை ஆய்ந்து பார்க்கும் நிலையில், வளர்ச்சி அதிகாரியோ (ஊராட்சி) அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரோ இருக்க இயலாது என்றும், ஊராட்சியின் ஆய்வாளர் மற்றும் ஊராட்சிகளைப் சோதனை அதிகாரி என்ற முறையில், பொருத்தமட்டில்தான் அவர் பரிந்துரை செய்யமுடியும் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் மேலும் கூறியுள்ளார். எனவே பேரூராட்சிகள் எல்லாம் கோட்ட ஊராட்சி அதிகாரிகள்/இணை ஊராட்சி அதிகாரிகளின் நிர்வாகப் பொறுப்பில் இருப்பதால், கடன் தீர்க்கும் தகுதி சான்றிதழை (Solvency Certificate) பேரூராட்சிகளுக்காக அவர்களே அளிக்கலாம் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் யோசனை கூறியுள்ளார்.

3. அரசு இதை பரிசீலித்து, பேரூராட்சிகளிலுள்ள தெரு விளக்குகள், நீர் இறவை இயந்திரங்கள் மேல்நிலை நீர்த் தொட்டிகள், கழிவு நீர் பம்புகள், சங்கொலிகள் போன்றவற்றிற்கு மின் தொடர்பு அளிக்கவேண்டுமென்று கோரி, பேரூராட்சிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களையெல்லாம், அப் பேரூராட்சிகளின் நிதி நிலைமை வளமுடையதாக இருந்தால் மட்டுமே, அவற்றை தமிழக மின்வாரியத்திற்கு அனுப்பி வைக்க, கோட்ட ஊராட்சி அதிகாரிகள்/இணை ஊராட்சி அதிகாரிகள் ஆகியோருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

[கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 109180 -ன் சுருக்கம்]

## நெமிலி ஊராட்சி (வட ஆர்க்காடு மாவட்டம்) பேரூராட்சியாக்கப்படுகிறது.

## Panchayat—Nemili Village Panchayat—North Arcot district—Alteration of classification as Town Panchayat—Ordered.

பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு புனிவர் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்படும்.

### பிற்சேர்க்கை

1958-ஆம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 35/1968) 9 (1)-வது பிரிவில் உள்ள அதிகாரங்களானது, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2191-ல் வழங்கப்பட்டுள்ளதை பயன்படுத்தி, வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள நெமிலி ஊராட்சியானது 1-4-1969 முதல் பேரூராட்சியாக (Town Panchyat) மாற்றப்பட வேண்டுமென்று, கிராம வளர்ச்சி இயக்குநர் இதன் வாயிலாக ஆணை பிறப்பிக்கிறார்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் நாளிட்ட செயல்முறை எண் 59039/68-ன் சுருக்கம்)

## அலுவலகங்கள், அலுவலர் குடியிருப்புக்கள், பொது சுகாதார நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள், விவசாயக் கிடங்குகள், தகவல் நிலையங்கள் போன்றவற்றை பராமரித்தல்—திருத்தப்பட்ட விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Block offices, staff quarters, Public Health Centres, Veterinary dispensaries, agricultural depots., Information Centres—Revised instructions regarding maintenance—Orders—Issued.

சமுதாய வளர்ச்சித் திட்டம், ஊராட்சித் திட்டங்கள் தொடர்பான பல்வேறு அரசாங்கக் கட்டிடங்களை பொதுவாக பராமரித்து, அவற்றை சாதாரணமான முறையிலும் சிறப்பான முறையிலும் செப்பனிடுவதற்குரிய பணிகளை கவனிப்பதற்கென பல்வேறு துறைகளை குறிப்பிட்டு, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் தேதி நாளிட்ட அரசு ஆணை எண் 3348 ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. சமுதாய வளர்ச்சித் திட்டம், ஊராட்சித் திட்டங்கள் தொடர்பாக பதினோறு வகையான கட்டிடங்கள் தற்போது உள்ளன. அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் அவற்றைப் பராமரிக்கும் துறைகள் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன.

| கட்டிடங்கள். | உரிமையாளர்கள். | தற்போது பராமரிக்கும் துறை. |
|---|---|---|
| 1. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள். | | |
| 2. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மற்றும் வளர்ச்சி அதிகாரிகளின் குடியிருப்புகள். | அரசிடம் ஒப்படைக்கப்பட்டு நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. | நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறை. |
| 3. கிராம நலப் பணியாளர்களின் குடியிருப்புகள். | | |
| 4. ஆசிரியைகளின் குடியிருப்புகள். | | |
| 5. தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள். | ஊராட்சி ஒன்றியக் குழுக்கள். | ஊராட்சி ஒன்றியக் குழுக்கள். |
| 6. கால் நடை மருந்தகங்கள். | கால் நடை பராமரிப்புத்துறை. | கால்நடை பராமரிப்புத் துறை. |
| 7. கேந்திரக் கிராம நிலையங்கள் மற்றும் துணை நிலையக் கட்டிடங்கள். | | |
| 8. விவசாயக் கிடங்குகள், தகவல் நிலையங்கள். | சம்பந்தப்பட்ட துறைகள். | பொதுப்பணித் துறை. |
| 9. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்புகள். | | |
| 10. மகப்பேறு, குழந்தை நல நிலையங்கள். | | |
| 11. சமுதாய மனமகிழ் நிலையங்கள். | சம்பந்தப்பட்ட ஊராட்சிகள். | சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள். |



3. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 3348-ல் வகுக்கப்பட்டுள்ளபடி, இதுவரை கட்டிடங்களை பராமரித்து, செப்பனிட்டு வந்துள்ள தற்போதுள்ள வழக்கத்தை முறைப்படுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து, அந்தப் பொறுப்பை ஒரே ஒரு முகவரிடம், அதாவது தலைமைப் பொறியாளரிடம் (நெடுஞ்சாலை, கிராமப் பணிகள்) ஒப்படைப்பது என்று முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப, அரசு கீழ்க் காணும் விளக்க ஆணைகளை பிறப்பிக்கிறது :—

(அ) மேற்கண்ட பத்தி 2-ல் விவரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 5-வது மற்றும் 11-வது இனங்களிலுள்ள கட்டிடங்களைத் தவிர, ஏனைய கட்டிடங்கள் அனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பு, நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறையினதாகும்.

(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள 5-வது மற்றும் 11-வது இனங்களிலுள்ள கட்டிடங்களை, அதாவது பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் சமுதாய மனமகிழ் நிலையங்களைப் பராமரிக்கும் பொறுப்பு, தற்போதுள்ளவாறே, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களிடம் தொடர்ந்திருக்கும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 12-11-68-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 23 6-ன் சுருக்கம்.

---

## விடுமுறை நாட்கள்—1969-ஆம் ஆண்டிற்குரிய பொது, அரசு விடுமுறை நாட்கள்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Holidays—Public and Government Holidays, 1969—Orders Passed.

1969-ம் ஆண்டிற்குரிய தமிழக விடுமுறை நாட்களை யொட்டி அரசு கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது.

**(1) பொது விடுமுறை நாட்கள்:** 1881-ம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (Negotiable Instruments Act, 1881) படி, விடுமுறைகள் அறிவிக்கப்படுகின்ற விடுமுறை நாட்கள், இவ்வாணையில் பிற்சேர்க்கையிலுள்ளது இவ்வாணையின் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு புனிவர் ஜார்ஜ் அரசிதழில் வெளியிடப்படும்.

கீழ்க்கண்ட தேசிய விடுமுறை நாளுக்கும், மற்றும் இரண்டு விழா நாட்களுக்கும் விடுமுறை அளிக்கப்படுவது வழக்கம். ஆனால் அந்த விடுமுறை நாட்கள் 1969-ஆம் ஆண்டில் ஞாயிற்றுக் கிழமைகளில் வருகின்றன.

| | | |
|---|---|---|
| குடியரசு நாள் .. | ஞாயிறு. .. | 26-1-1969 |
| தமிழ்ப் புத்தாண்டு நாள். | ஞாயிறு.. | 13-4-1969 |
| ஆயுத பூஜை முதல் நாள். | ஞாயிறு.. | 19-10-1969 |

இந்த மூன்று நாட்களுக்கு மாறாக, "மே நாள்", "புத்தாண்டு நாள்", "விநாயக சதுர்த்தி" ஆகிய நாட்களை விடுமுறை நாட்களாக அரசு அறிவித்து, அவை பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பில் சேர்க்கப்பட்டது.

**(2) அரசு விடுமுறை நாட்கள் :** தமிழக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லா அரசு அலுவலகங்களும்—

(அ) அறிவிப்பின் பிற்சேர்க்கையிலுள்ள 1969-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள், மற்றும் டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் ஆகிய நாட்கள் தவிர ஏனைய நாட்களிலும்.

(ஆ) 1969-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இரண்டாம் சனிக்கிழமை தவிர ஏனைய எல்லா இரண்டாம் சனிக்கிழமைகளிலும் மூடப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(இ) 1969-ஆம் ஆண்டு நவம்பர் 8-ம் நாளில் வரும் தீபாவளி, 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இரண்டாம் சனிக்கிழமை விடுமுறையான நாளில் வருகிறது. 1969-ம் ஆண்டு நவம்பர் 8-ம்நாள் (சனிக்கிழமை) பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பதால், 'திருவள்ளுவர் முக்தி நாளா"கிய 1969-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாள் (சனிக்கிழமை) அரசு விடுமுறை நாளாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசு அலுவலகங்களுக்கு மட்டுமே இந்நாள் விடுமுறை நாளாகும்.

(ஈ) "மாட்டுப் பொங்கலை" முன்னிட்டு, 1969 ஜனவரி 15-ம் நாள் புதன்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது. எல்லா அரசு அலுவலகங்களுக்கும் 1969-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் நாள் விடுமுறை நாளாக ஆக்கப்படுவதால், அதற்கு மாறாக 1969-ஆம் ஆண்டு ஜனவரி 11-ம் நாள் (சனிக்கிழமை) எல்லா அரசு அலுவலகங்களுக்கும் வேலை நாளாக இருக்கும்.

### பிற்சேர்க்கை

### அறிவிப்பு

இந்திய அரசு உள்துறை அமைச்சகத்தின் 1957-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ஆம் நாளிட்ட அறிவிப்பு எண் 20 - 25 - 56 பொது 1, ஐ 1881-ம் ஆண்டு செலாவணி முறிச் சட்டத்தின் (Negotiable Instruments Act, 1881) பிரிவு 25-ல் உள்ள விளக்கத்துடன் ஆராய்ந்தால் ஏற்படும் விளைவாக, மேற்கண்ட "விளக்கத்தில்" குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள விடுமுறை நாட்களாக 'ஞாயிற்றுக் கிழமை' களுடன் 1969-ஆம் ஆண்டில் கீழ்க் கண்ட நாட்களும் பொது விடுமுறை நாட்களாக பின்பற்றப்பட வேண்டுமென்று தமிழக ஆளுநர் அறிவிக்கிறார்.

| | | |
|---|---|---|
| 1-1-1969 | புதன் | புத்தாண்டு நாள் |
| 13-1-1969 | திங்கள் | போகி |
| 14-1-1969 | செவ்வாய் | பொங்கல் |
| 28-2-1969 | வெள்ளி | பக்ரீத் |
| 19-3-1969 | புதன் | தெலுங்கு புத்தாண்டு நாள். |
| 29-3-1969 | சனி | முஹரம் |
| 4-4-1969 | வெள்ளி | பெரிய வெள்ளிக்கிழமை |
| 1-5-1969 | வியாழன் | மே நாள் |
| 30-6-1969 | திங்கள் | அரையாண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தல். |
| 15-8-1969 | வெள்ளி | விடுதலை நாள் |
| 15-9-1969 | திங்கள் | விநாயக சதுர்த்தி |
| 2-10-1969 | வியாழன் | அண்ணல் காந்தி பிறந்த நாள் |
| 20-10-1969 | திங்கள் | ஆயுத பூஜை |
| 8-11-1969 | சனி | தீபாவளி |
| 11-12-1969 | வியாழன் | ரம்ஜான் |
| 25-12-1969 | வியாழன் | கிருஸ்துமஸ் |
| 31-12-1969 | புதன் | ஓராண்டுக்குரிய வங்கி கணக்குகளை முடித்தல். |

(பொதுத் துறையின் 1968-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2126-ன் சுருக்கம்.)

POSEID 968



Parry's

நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

158403

## இந்த இதழில்


| | பக்கம் |
|---|---|
| சூளுரை மேற்கொள்வோம் | 1 |
| மாண்புமிகு முதலமைச்சரின் வானொலிப் பேச்சு (மனித உரிமை நாள்) | 2 |
| வரலாறு படைத்த வீரப் பெருமகன்— .. மாண்புமிகு உணவமைச்சர் உரை | 4 |
| முதல் பரிசு பெற்ற கிராம சேவிகை .. | 6 |
| ‘ யிலிருந்து விடுதலை’—கவி அரங்கக் கவிதை—திரு கா. வேழவேந்தன், எம்.எல்.ஏ. | 7 |
| சுகாதார நல்வாழ்வும் குடும்ப நலப் பணிகளும்— டாக்டர் செல்வி. ஏ. பி. மரைக்கார் | 9 |
| நமது தமிழகம்—பத்திரிகையாளர் சுற்றுலாக் கட்டுரை. | 13 |
| துடியலூர் வேளாண்மை—கூட்டுறவு நிறுவனம். | 17 |
| கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு .. | 19 |
| வெற்றி மாளிகையின் வாயிலிலே | 23 |


## அடுத்த இதழில்...

தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்—மாண்புமிகு முதலமைச்சர் உரை.

திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்—மாண்புமிகு சுகாதார அமைச்சர் வானொலி உரை.

அதிக மகசூல் காண—விவசாயத் துறை இயக்குநர் சிறப்புக் கட்டுரை.

“வளரும் தமிழகம்” கிராம வளர்ச்சித் திட்டங்கள் கிராம வளர்ச்சி இயக்குநரின் உரை.

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேச்சின் சாரம்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாவட்டப் பரிசு பெற்ற கிராமங்கள்.

“நமது தமிழகம்”—பார் புகழும் சீரணி-சிறப்புக் கட்டுரைத் தொடர்.

“ஏரும் கலப்பையும்”—பேராசிரியர் திரு ந. சஞ்

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம். ஏ., ஐ.ஏ.எஸ். ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras.
Edited by the Public Relations Officer and Published by the Director of Rural Development, Madras-9.
Chief Co-ordinator: Thiru T. A. S. Balakrishnan, I.A.S. Wrapper printed at Vadapalani Press, Madras-26.

அளவோடு பெற்று
வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்

## "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.


தற்போது வினியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. **"கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-1**
2. **"கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HBI-I**
3. **"கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்**

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்—மஞ்சள் ரகம்)
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

**விதை உற்பத்தியாளர்கள் :—**

போன் : 30442




தந்தி : "கோல்

**கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,**
**பேரூர், கோயமுத்தூர்-10.**

**உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—**

**டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிட்,**
**உர இலாகா, த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.**

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

**தொழிற்சாலைகள் :—**

| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |
|---|---|---|---|


2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |